பொருளடக்கம்

அதிகார சபையின் பின்னணி.....123

தொலைநோக்கு மற்றும் செயற்பணி.....123

தவிசாளரின் மீள்நோக்கு.....124

முகாமைத்துவ சபை.....125

பிரதான பதவயணி.....127

கண்காணித்தல்.....129

சுகித்தபுர நிகழ்ச்சித்திட்டம்.....130

நகர புத்துயிரூட்டல் நிகழ்ச்சித்திட்டம்.....131

நடுத்தர வருமான வீடமைப்பு நிகழச்சித்திட்டம்.....132

2016 வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய கருத்திட்டங்கள் 132

சொத்து முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்துதல்.....138

அதிகாரசபையின் செயலாற்றுகை 139

மனிதவளங்கள் முகாமைத்துவம்.....143

நல்லாட்சி.....145

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.....148

கணக்காய்வு அறிக்கை தொடர்பில் தவிசாளரின் கருத்து.....190

நிதிக் கூற்றுக்கள்.....252

நகர அபிவிருத்தி அதிகார சபை

தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆண்டின் 41 ஆம் இலக்கம் சட்டத்தின் கீழ் 1978.09.06 ஆம் திகதி நிறுவப்பட்ட ஒரு நியதிச்சட்ட நிறுவனமான நகர அபிவிருத்தி அதிகார சபை உரிய விடயப் பொறுப்பு அமைச்சரால் பிரகடனம் செய்யப்படும் பிரதேசங்களின் பொருளாதார, சமூக அபிவிருத்தி, பௌதீக அபிவிருத்திகள் மற்றும் உரிய நடவடிக்கைகள் செயற்படுத்த மற்றும் மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நகர அதிகார சபை, கூட்டிணைக்கப்பட்ட சட்டத்தின் பிரகாரம் கீழ் காணும் துறைகளில் தனது பணிகளை செயற்படுத்துகின்றது.

- பிரகடணப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் மூலதன முதலீடுகள் மேற்கொள்வதற்கான திட்டங்களை தயார்படுத்துதல்
- அரசின் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகளை செயற்படுத்துதல்.
- **நகர காணிகளை கொள்முதல் செய்தல்.**
- அபிவிருத்தி செயற்த்திட்டங்களை செயற்படுத்த பலதரப்பட்ட தரப்பினருடனும் ஒப்பந்தங்களை செய்துகொள்ளல்.
- நிறைவு செய்ய முடியாமல் போன, அல்லது ஏதும் ஒரு தரப்பினர் கைவிட்ட எந்த ஒரு அபிவிருத்தி செயற் திட்டத்தினையும் செயற்படுத்துதல் மற்றும் செய்து முடித்தல்.

- மூலதன மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்
- சுற்றடால் நியமங்கள் அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடுகளுக்காக நடவடிக்கை எடுத்தல்..

- வீடமைப்பு முன்மொழிவு முறைகள் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல், சிறு குடிசைகள் மற்றும் சேரிப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல்

- அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடல் மற்றும் முன்மொழிதல், வேறு அரச நிறுவனங்களுடன் அந்த நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் அல்லது ஒருங்கிணைப்புச் செய்தல்.
- ஏனைய அரச நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக தொழில்நுட்ப திட்டமிடல் சேவைகளை வழங்குதல்.

இதற்கமைய நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பரப்பெல்லையில் தனது அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்கின்றது

தொலைநோக்கு

“திட்டமிடப்பட்டு, தாங்கக்கூடியதும் சிறப்பானதுமான நகரமயமாக்கலை நோக்கி ”

செயற்பணி

“பிரகடனப்படுத்தப்பட்ட நகர பகுதிகளின் பொருளாதாரம், சமூக, சுற்றாடல் மற்றும் பௌதிக அபிவிருத்தியின் அமுலாக்கலுக்கு ஒன்றிணைந்த திட்டமிடலை மேம்படுத்தல்.”

தவிசாளரின் மீள்நோக்கு



இலங்கை அபிவிருத்தியின் பொருட்டு நெறிகாட்டியாக இலங்கை அபிவிருத்தி அதிகாரசபை பெரும் பங்களிப்பை ஆற்றி வருகின்றது. 2016 ஆம் ஆண்டுக்குள் அதிகாரசபையின் செயல்நிறைவேற்றம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

சரிவர முகாமைத்துவம் செய்யப்பட்ட நகரமயமாக்கலானது, வணிகம் மற்றும் தொழில்துறைகளின் அபிவிருத்திக்கு காரணமாக அமைவதனைப்போன்று அதன் மூலம் உருவாக்கப்படுகின்ற புதிய வேலை வாய்ப்புகள் மூலம் உயர் வருமானங்களை ஏற்படுத்துவதனூடாக மக்களின் பொதுவான நல்வாழ்வு உறுதிப்படுத்துவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. இதற்காக நகர உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவை துறைகளில் பரந்த விரிவாக்கம் தேவைப்படுகிறதால், நகரமயமாக்கல் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடொன்றுக்கு தாக்கம் விளைவிக்கின்ற பெரும் சவாலாக கருதப்படும். உட்கட்டமைப்பு வசதிகளுக்காக உயர் கேள்வி ஏற்படுத்தி இலங்கையில் அதிக பிரதேசங்களில் நகரமயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

நகர அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் செயலாற்றப்பட்டு இந்த வருடத்தில் எமது அதிகாரசபையால் பரந்த அளவெல்லையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் செயற்படுத்தியுள்ளது. நகர உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு செயல்திறனுடன் பங்களிப்பு செய்வதனுடன் குறைந்த வசதிகளுடன் நகர குடியிருப்புகளில் வாழ்கின்ற குடும்ப அலகுகளில் வீட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகாரசபை தொடர்ந்தும் முக்கியமான கடமைப்பாங்கினை நிறைவேற்றியுள்ளது.

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தொடங்கப்பட்ட சுகித்தபுர நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நகர புத்துயிராக்கல் நிகழ்ச்சித்திட்டம் இதில் முக்கிய இடம் வகிக்கின்றது. நகர புத்துயிராக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 17 வீடமைப்பு கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட வருகின்றன. இதற்கு மேலதிகமாக எதிர்வரும் ஐந்து வருட காலப்பகுதிக்குள் நடுத்தர வருமானம் பெறும் குடும்ப அலகுகளுக்காக 500,000 வீடளிப்பு அலகுகள் வழங்கும் அரச நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைவாக நடுத்தர வருமான வீடளிப்பு கருத்திட்டத்தின் கீழ் பல வீடளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தோம். மேலும் முழு நாடும் உள்ளடங்கும் வகையில் எமது உப அலுவலகங்கள் மூலம் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் பலவாகும்.

திருப்திகரமான பதவியணியின் மூலம் விளைவுபெருக்கமுடைய சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு முடியும். இந்த இலட்சியத்தை மிகவும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த வருடத்திலும் அதிகாரசபையால் வழக்கமான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களைப் போன்று பதவியணியினருக்காக வருடாந்த மிகையூதியம், கடன் வசதிகள், மருத்துவ விடுமுறைக்கான கொடுப்பனவுகள் போன்ற சிறப்புரிமைகளை அனுபவிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

நிதி நிலைமைக் கருதும்போது 2016 வருடம் மிகவும் வெற்றிகரமான வருடமாக உள்ளது. அதாவது ரூபா 198 மில்லியன்களான வரிக்கு பின் இலாபம் அறிக்கையிடுவதற்கு அதிகாரசபைக்கு இயலுமையாக இருந்ததுடன் அது முன்னைய வருடத்துக்கு நிகராக 249% அதிகரிப்பாகும்.இந்த வருடத்தில் மொத்த வருமானம் ரூபா 1,749 மில்லியன்களாகும். இந்த நிதி அசையாத்தன்மை பெற்றுக்கொள்வதற்காக சரியான முகாமைத்துவ முடிவுகள் மற்றும் பதவியணியின் வினைத்திறன் உதவியாக இருந்தமை எனது நம்பிக்கையாகும்.

தவிசாளராக சவாலான சூழ்நிலைமைகளின் கீழ் வெற்றிகரமான செயற்பாடுகளாலான மற்றொரு வருடமொன்றை முத்திரையிடுவதற்கு பங்களிப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றியை தெவிப்பதற்கு இதனை வாய்ப்பாக கொள்கின்றேன்.

தவிசாளர்

நகர அபிவிருத்தி அதிகாரசபை

முகாமைத்துவ சபை

திரு.ரஞ்சித் பொனான்டோ (தவிசாளர்) -2015.01.30 இலிருந்து
BLaws(Hons) , Attorney At Law(1st Class), Fellow - CIB(London) , Fellow – CIMA(London) , Companion - CIMA
தவிசாளர் - நகர அபிவிருத்தி அதிகார சபை

கலாநிதி ஜகத் முணசிங்ஹ - (அங்கத்தவர்)2015.10.28 இலிருந்து , (தவிசாளர்) -2016.07.04 இலிருந்து
PhD, National University of Singapore, MSc,(Tow. & Cont.Pl), University of Moratuwa , MSc.(Aechi) University of Moratuwa, BSc(Built Environment)University of Moratuwa , AIASL , MITPSL
சிரேஷ்ட விரிவுரையாளர் - மொரட்டுவை பல்கலைக்கழகம்
தவிசாளர் - நகர அபிவிருத்தி அதிகாரசபை

திரு. என்.என்.மாவில்மட (செயலாளர்) - 2015.01.30 இலிருந்து
BArch-Hampton USA, MBA- Harvard Business School , MCP-Cambridge USA
பணிப்பாளர் நாயம் - நகர அபிவிருத்தி அதிகாரசபை

திரு. எஸ்.எஸ்.பி. ரத்நாயக்க (செயலாளர்) - 2016.05.02 இலிருந்து
BSc.Eng (Hons), CEng , MIE(SL) , PG Diploma(H&T)
பணிப்பாளர் நாயம் - நகர அபிவிருத்தி அதிகாரசபை

கலாநிதி அய்.எச்.கே மஹாநாம அவர்கள் - 2015.02.26 இலிருந்து
PhD(Economics) , MSc (Regional Development Planning) , BA(Economics)
செயலாளர் - காணிகள் அமைச்சு

திருமதி.அனோமா நந்தினி- 2015.02.24 இலிருந்து
MPP-Japan , Business Adm.-University of Jayawardenapura
பணிப்பாளர் (வரவுசெலவுத்திட்ட) – நிதி அமைச்சு

திரு. எல். எஸ். பலன்சூரிய- 2015.03.09 இலிருந்து
BA-University of Peradeniya , Small and medium scale industrial Higher Diploma in University of Philippines, Public Relation Training Diploma-IBM
தவிசாளர் - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

திரு. எஸ். ஏ. நிமல் சரணதிஸ்ஸ - 2015.03.06 இலிருந்து
BA(Special), MA , Attorney-At-Law
மேலதிக செயலாளர் (நிர்வாக மற்றும் கொள்வனவுகள்) - மின்வலு மற்றும் வலுச்சக்திஅமைச்சு

திரு. ஜி. எல். எஸ். சேனாதீர- 2015.06.03 සිට
BA-University of Jayawardenapura , MA-University of Kelaniya
மேலதிக செயலாளர்- கல்வி அமைச்சு

திரு. சந்தன ரணசிங்க- 2015.10.30 இலிருந்து
MBA, University of Jayawardenapura , BSc.Eng, University of Moratuwa
செயல்முறைச் சார்ந்த பணிப்பாளர் - நகர அபிவிருத்தி அதிகாரசபை

திரு. மாதவ வைத்தியரத்ன-2015.12.08 සිට
MBA, MSc – (IT) , MA , BSc,- (Chemistry) Special
மேலதிக செயலாளர்
- மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

திரு. வித்ய தில்ருக் அமரபால -2015.12.08 இலிருந்து
MBA, Member of AMT, Member of IEEE
மதியுரையாளர் - எரிசக்தி, முதலீட்டு ஊக்குவிப்பு, கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் செயற்படுத்துதல்

திரு. சனத் பனாவென்னகே- 2015.12.08 இலிருந்து
MSc, University of Jayawardenapura , MBA, University of Jayawardenapura , CEng.,MIET
பணிப்பாளர் நாயகம் - ஆதர் சீ க்ளார்க் நிறுவனம்

திரு. ஏ. ஜி. எம். எம். விமலசூரிய **-2015.12.08** இலிருந்து

BSc (Hon) , Dip. in Meteorology.& Climatology.

பிரதி பணிப்பாளர் - வளிமண்டலவியல் திணைக்களம்

திரு. டி. டீ. எஸ். பி.பெரேரா **- 2015.12.14** இலிருந்து

BCom-University of Colombo, MEco- University of Kelaniya , MSc- University of Kelaniya

மேலதிக செயலாளர் - கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

திரு. எச். டி. கே. பத்மசிறி**- 2015.12.29** இலிருந்து

MPAd .University of Jayawardenapura , BA.University of Peradeniya.

செயலாளர் -மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

திரு. ஏ.டி.எல்.பி. சமரசிங்ஹ **- 2016.08.31** இலிருந்து

Member of Institute of Engineering and Technology UK

Chartered Engineer- Engineering Council UK

MBA in Electronic Governance University of Moratuwa

Bachelor in Management-OUSL

Graduated from The Institution of Engineering & Technology UK

மேலதிக செயலாளர் - போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சு

திருமதி பீ.பீ.அய்.ஏ. பெரேரா **- 2016.10.03** இலிருந்து

Diploma in wind power Development and use,Life Academy ,Sweden

Diploma in Development Planning , SLIDA

Msc Agriculture (Sp in food Sc. & Tech) University of Peradeniya.

BSc. Agriculture(Sp) University of Peradeniya.

உதவி பணிப்பாளர்- மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அமைச்சு

திரு. எச். ஹேவகே **- 2016.11.07** இலிருந்து

BSc. (Public Ad.) Special

M.A (Economics)

Member of AAT (SL)

Licentiate Certificate of the ICASL

மேலதிக செயலாளர் - (நிர்வாக மற்றும் நிதி) கல்வி அமைச்சு

டப்ளியு.டீ.ஏ சுனில் பெரேரா **- 2016.12.07** இலிருந்து

Post Graduate Diploma in Business and Financial Administration

BSc(Mgt)Sp.2nd Upper University of Sri Jayawardenapura

Fellow of ICASL

Fellow of CIMA

Fellow of AAT

நிதி ஆலோசகர்.- இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

பிரதான ஆளணி

தவிசாளர்	திரு.ரஞ்சித் பெர்னான்டோ திரு.ஜே.என்.முணசிங்ஹ	2015.02.01 இருந்து 2016.07.04 வரை 2016.07.07 இருந்து
மேலதிக பணிப்பாளர் நாயகம்	திரு.பிரகேடியர்.ஜே.எம் .எஸ்.எஸ்.ஜயசுந்தர	2011.02.14 இருந்து
பணிப்பாளர் நாயகம்	திரு.என்.என்.மாவில்மட பொறியியலாளர் எஸ்.எஸ்.பி.ரத்நாயக்க	02.02.2015 இருந்து 03.05.2016 வரை 04.05.2016 இருந்து
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் வணிகம்)	திரு. டபிள்யு.எல்.டீ.பி.வி.ஜெயவர்த்தன	2011.11.15 இருந்து
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கருத்திட்டங்கள்)	திரு.எம்.சி. விதானராச்சி.	2016.10.31 இருந்து
பிரதிப் பணிப்பாளர் நாயகம (திட்டங்கள்)	திரு,கே.ஏ.டி. சந்திரதாஸ	2016.10.03 இருந்து
வியாபார அபிவிருத்தி கிளைத் தலைவர்	திரு.ஆர்.எம்.தனஞ்சய சிறிவர்தன	2011.11.15 இருந்து
பிரதான உள்ளக கணக்காய்வாளர்	திருமதி எம்.வி.எஸ்.கே.மனோதரா திருமதி என்.பி.திசாநாயக்க	2011.01.01 இருந்து 2016.04.20 வரை 2016.07.11 இருந்து
பதில் கடமைபுரி பணிப்பாளர் (நிதி)	திரு.எச்.ஆர்.எஸ்.சீ. குணதிலக	2016.04.26 இருந்து
பணிப்பாளர் (மனித வள முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி)	டப்ளியு.ஏ.எஸ். சுமனசிறி	2012.03.22
பணிப்பாளர் (சொத்து முகாமைத்துவம்)	திரு.ஜி.டபிள்யு.ஜி. அபேகுணவர்தன	2015.05.20 இருந்து
பணிப்பாளர் (பொறியியல் சேவை)	திரு.எல்.ஏ.டி.ஜே. சிசிர குமார	2011.01.26 இருந்து
பணிப்பாளர் (காணிகள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்) பதில் கடமைப்புரி பணிப்பாளர் (காணிகள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்)	திரு.எச்.ஏ.தயாநந்த திரு.கே.எல்.டப்ளியு. பெரேரா திரு.கே.எல்.டப்ளியு. பெரேரா	2012.12.20 இருந்து 2016.05.29 வரை 2016.12.01 இருந்து 2016.05.30 இருந்து 2016.11.30 வரை
பணிப்பாளர் (சூழல் மற்றும் இயற்கை நிலக்காட்சி)	திருமதி .சி.கே.ஈ. .கலுபஹன	2012.10.24 இருந்து
பணிப்பாளர் (அமுலாக்கம்)	திருமதி.என்.எஸ். குசும்சிலி	2013.10.21 இருந்து
பணிப்பாளர் (பூகோள தகவல் முறை மற்றும் முன்னேற்ற கட்டுப்பாடு)	செல்வி. ஜே.பி.எஸ். சேமாசேக்கர	2016.12.01 இருந்து
பணிப்பாளர் (சட்டம்) பதில் கடமைப்புரி	திருமதி டி. லியனஆரச்சி திருமதி பி.எம்.டீ.பி. பன்னெஹக்க	2016.09.22 இருந்து 2015.10.20 இருந்து

பணிப்பாளர் (சட்டம்)		2016.09.21 வரை
பணிப்பாளர் (அபிவிருத்தி திட்டமிடல்கள்)	திரு,கே.ஏ.டி. சந்திரதாஸ திரு,எச்.ஜே.சி ரணவீர	2015.05.25 இருந்து 2016.10.02 வரை 2016.12.01 இருந்து
பணிப்பாளர் (மேல் மாகாணம்) பதில் கடமைப்புரி பணிப்பாளர் (மேல் மாகாணம்)	திரு.என்.ஏ.எஸ்.என். நிஸங்க திரு.என்.ஏ.எஸ்.என். நிஸங்க	2016.12.01 இருந்து 2016.12.31 வரை 2015.05.20 இருந்து 2016.11.30 வரை
பணிப்பாளர் (நகர புனர்வாழ்வு கருத்திட்டம்)	திரு.பிரிகேடியர் எஸ்.ஏ.ஆர்.சமரசிங்ஹ	2013.04.06 இருந்து
பணிப்பாளர் (நடுத்தர வருமானங்கள் கருத்திட்டம்)	திரு.ஈ.ஏ.சி பியஷாந்த	2016.12.20 இருந்து
பணிப்பாளர் (பணிப்பாளர்)	திரு.என்.பி.கே. ரணவீர	2016.12.01 இருந்து
பணிப்பாளர் (நிர்மாண செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை சேவை / செயற்திட்ட முகாமைத்துவம்) இணைப் பணிப்பாளர் (நிர்மாண செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை சேவை/ செயற்திட்ட முகாமைத்துவம்)	திரு.எல்.என்.என். ஏ. சமரசிங்ஹ திரு.எம்.சி. விதானராச்சி.	2016.12.01 இருந்து 2013.10.17 இருந்து 2016.10.30
பணிப்பாளர் (வட மேல் மாகாணம்)	திரு..டபிள்யு.ஜே.செனவிரத்ன	2014.04.08 இருந்து
பணிப்பாளர் (கிழக்கு மாகாணம்)	திரு.என். இராஜநாயகம்	2014.04.07 இருந்து
செயல்நிலைப் பணிப்பாளர் (வட மாகாணம்) பணிப்பாளர் (வட மாகாணம்)	திரு.வை.ஏ.ஜீ.கே. குணதிலக திரு.வை.ஏ.ஜீ.கே. குணதிலக	2014.04.07 இருந்து 2016.11.30 வரை 2016.12.01 இருந்து
பணிப்பாளர் (வட மத்தியமாகாணம்)	திரு.டி.எம்.பி. ரணதுங்க	2011.01.26இருந்து
பணிப்பாளர் (சப்ரகமுவ மாகாணம்)	திரு.பி.டி.கே. பத்திரன திரு.டீ. எம்.எஸ். எம். திசாநாயக்க	2015.05.25 இருந்து 2016.12.01 வரை 2016.12.02 இருந்து
பணிப்பாளர் (ஊவா மாகாணம்)	திரு.எம்.பி. ரணதுங்க திரு.எச்.எம்.ஏ.ஆர். மெதவல	2013.10.24 இருந்து 2016.03.13 வரை 2016.12.01 இருந்து
பணிப்பாளர் (தென் மாகாணம்)	திரு.எல்.என்.என்.ஏ. சமரசிங்ஹ திரு.கே. எச்.எம்.டப்ளியு.கே. அபேரத்ன.	2012.12.18 இருந்து 2016.12.01 வரை 2016.12.06 இருந்து
பணிப்பாளர் (மத்திய மாகாணம்)	திரு.எம்.எம்.எல்.பி. விஜேரத்ன திரு.எம்.பி. ரணதுங்க	2013.12.18 இருந்து 2016.12.01 வரை 2016.03.14 இருந்து

கண்காணிப்பு

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை சுமார் நான்கு தசாப்தங்களாக இலங்கைக்குள் பரந்தளவிலான அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. நடைமுறைப்படுத்தல் மேற்கொள்கின்றது. அதற்கமைய நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்திற்காக பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பௌதீக ரீதியாக ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டங்கள் தயாரித்தல் மற்றும் மேம்படுத்தப்படும்.

நகர உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு நகர்ப்புற மக்களின் வீட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை தொடர்ந்தும் முக்கிய கடமைப்பாங்கினை நிறைவேற்றுகின்றது. 2016 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சியசெத செவண வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 266 கட்டுமான பணிகள் முடிவு செய்யப்பட்டிருப்பதுடன் 12,963 வீடமைப்பு அலகுகளின் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முறைசாரற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக தற்பொழுது பாவனைக்கு எடுக்கப்படாத வர்த்தக காணிகள் முறைசார்ந்த அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தும் நோக்கில், கொழும்பு கோட்டை நடைப்பாதைகள் அபிவிருத்தி செய்தல் மற்றும் மீள் இடநிறுவப்பட்ட வியாபார நிலையங்களை கட்டமைக்கும் பணிகள் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கண்டறியப்பட்ட முக்கிய நகரங்கள் பல அபிவிருத்தி செய்வது குறித்து நகர அபிவிருத்தி அதிகாரசபை தொடர்ந்தும் முன்னுரிமையளித்து நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் அதற்காகத் தேவையான முதலீடுகளும் மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய வடிகாலமைப்பு மற்றும் காணிகள் மேம்பாடு, நகர அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மேம்பாடு மற்றும் பல அடுக்கு சீருந்து நிறுத்துமிடம், வணிக தொகுதிகள் மற்றும் பொது வியாபார நிலையங்கள் போன்ற பல நகர அபிவிருத்தி வியாபார திட்டங்கள் 2016 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

பல அடுக்கு சீருந்து நிறுத்துமிடம், வணிக தொகுதிகள் மற்றும் பொது வியாபார நிலையங்கள்

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கொழும்பு நிதிசார் நகர (துறைமுக நகர) அபிவிருத்திக் கருத்திட்டம், ஸ்ரீ.ஜெயவர்தனபுர கோட்டை நிர்வாக தலைநகரம், ஹோமகம- மாலபே விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகரம், ஹொரணை மற்றும் மீரிகம தொழில்சார்ந்த நகரம் , கட்டுநாயக்க வான் சாரந்த நகரம், அவிஸ்ஸாவேல பெருந்தோட்ட நகரம் மற்றும் பதுரலிய வன நகரம் போன்ற ஏழு நகர அபிவிருத்தி கருத்திட்டங்களாலான மாநகர கருத்திட்டத்துக்காக மதியுரைச் சேவைகளை வழங்கல் மற்றும் செயற்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை பங்களிப்புச் செய்துள்ளது.

இதற்கு மேலதிகமாக ஹுபுத்தளை காட்சி மேடை, கிளிநொச்சி நகரத்தின் பசுமைப் பூங்கா, கதிர்காமம் நுழைவாயில் அபிவிருத்தி, சதுறு கொண்டன் ஈரநில பாதுகாப்பு கருத்திட்டம், ஹபராதுவ பேருந்துநிலைய அபிவிருத்தி, தீப பூங்கா போன்ற கருத்திட்டங்கள் நாடாளவ ரீதியில் பரவாலாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

தாபன செயலாற்றுகை எவ்வாறென கண்காணிப்பதற்காக இந்த வருடத்தில் விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபை அதன் அலுவலக கட்டமைப்புக்குள் அந்தந்த திணைக்களங்கள், உப அலுவலகங்கள் உரிய வருடத்துக்காக தயார்படுத்தப்பட்ட இலக்குகள் அடைந்துள்ளதாவென கண்காணிப்பதற்காக செயல்நிறைவேற்ற சுட்டெண் (KPI) பாவனை இந்த வருடத்தில் முன்னோடி நிகழ்ச்சித்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, அடுத்த 10 ஆண்டுகளுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை கவரச்செய்வதற்காக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுடன் தொடர்புடைய பல்வேறு நிகழச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

2015 ஆம் ஆண்டில் 6.9% ஆக இருந்த இயலளவு உள்நாட்டு உற்பத்திக்கு கட்டுமானத் துறையின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டில் 7.8% ஆக இருந்தது. இந்த கட்டுமானத் துறையின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் பங்களிப்பு வழங்கப்பட்டு நாட்டின் பாரிய அபிவிருத்திக்கு உதவுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2016 ஆம் ஆண்டில் இயலுமையாக இருந்தது.

" சுகித்தபுர " நிகழ்ச்சித்திட்டம்

ஓட்டு மொத்த மேல் மாகாணத்தையும் உள்ளடக்கிய தாயர்படுத்தப்பட்ட மேற்கத்திய பிராந்திய மாநகர திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் மேற்கத்திய பிராந்தியம் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் தற்போதைய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தில் தற்போதைய சனத்தொகை 5.8 ஆக இருப்பதுடன் அது நாட்டின் ஒட்டு மொத்த சனத்தொகையில 29% ஆகும். மொத்த உள்நாட்டு உற்பத்திக்காக மேற்கத்திய பகுதியில் பங்களிப்பு கிட்டத்தட்ட நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 45% ஆகும். அதாவது கடந்த பல வருட காலமாக பல்வேறு போட்டித்திறன் நன்மைகளின் ஈர்ப்புத்தன்மை காரணமாக அதிகளவு எண்ணிக்கையிலான மக்கள் மேலமாகாணத்திற்கு புலம்பெயர்ந்துள்ளனர். மக்கள் இவ்வாறு உள்ளக ரீதியில் புலம்பெயர்ந்துள்ளதால் கொழும்பில் மிகவும் உயர்வான நகரமயமாக்கல் பரவல் இடம்பெற்றிருப்பதுடன் அது நிர்வாக எல்லைகளை மீறி உள்ளக மற்றும் வெளிவாரி உப நகர்ப்புற பிரதேசங்களை நோக்கி பரவலலாக்கப்பட்டுள்ள. இதன் இதன் விளைவாக, கொழும்பு இடைஎல்லை கட்டமைப்பில் இரண்டாந்தர உபநகர தொடர் வடிவமைக்கப்பட்டுள்ளன.இந்த உப நகர அபிவிருத்தி ஒருங்கிணைந்த திட்டமிடல் அணுகுமுறை மூலம் மேற்கொள்ளப்படாதிருப்பதுடன் அதற்குப் பதிலாக தனிப்பட்ட மேம்பாட்டாளர்களின் / முதலீட்டாளர்களின் ஆசாபாசங்களின் பிரகாரம் முறைசாரற்ற அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. இந்த புறநகர் உபநகரபகுதிகளில் அதிகமான மக்கள்தொகை வளர்ச்சியுடன், தேவைப்படுகின்ற பௌதீக, சமூக மற்றும் சுற்றுச்சூழல் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான கேள்வியினை பூர்த்திசெய்வதிலும் விட உயர் வேகத்தில் தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக இந்த நகர்ப்புற துணை அமைப்புக்குள் போக்குவரத்து , வீட்டு வசதி, பொது கேடிக்கை வசதிகள் மற்றும் நகர பொருளாதாரத்துடன் தொடர்புடைய முக்கிய சிக்கல்கள் பல தோன்றியுள்ளன.

இந்த பின்னணியிற்குள் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலுடன் , குறுகிய கால அடிப்படையில் தீர்க்கப்ட வேண்டிய பிரசசினைகளுக்கு முகங்கொடுக்கும் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகாரசபை “சுகித்தபுர” நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்துள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக அமைவது,

- நகர பாவனையாளர்களின் வசதிகளை மேம்படுத்துதல் .
- நகரில் வாழ்வதற்குப் பொருத்தமான சூழலின் தரத்தை மேம்படுத்துதல்.
- பிரஜைகள் அனைத்து பகுதியினருக்கும் நன்மைகள் கிடைக்கக்கூடியவாறு நகரத்தின் பொருளாதரத்தை அபிவிருத்தி செய்தல்
- போக்குவரத்து நெரிசல், வீடுகளுக்கான கேள்வி, பிரஜா திறந்தவெளி முதலியவற்றுடன் தொடர்புடைய வகையில் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல்

மேற்கத்திய பிராந்தியத்தில் அமைந்துள்ள மூலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இருபத்தொன்று (21) இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டது. குறுகிய காலத்தில் பெறுபேறுகளை வழங்க முடியுமான மற்றும், நிறைமுதிர்ச்சி தொழிற்பாட்டிற்கு வசதிகளைள் வழங்கக்கூடிய மூலோபாய கருத்திட்டங்களை அடையாளம் கண்டு செயல்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், அனைத்து கருத்திட்டங்களுக்கான உத்தேசிக்கப்பட்ட மதிப்பீட்டுச் செலவு சுமார் ரூ. 25 பில்லியன்களாக இருப்பதுடன் அவற்றிலிருந்து ரூ. 7.6 பில்லியன்கள் 2016 ஆம் ஆண்டுக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளன.

”சுகித்தபுர”, நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹோமாகம, கொட்டாவா, மாகுபுர, மஹரகம, பிலியந்தலை, கடுவெல, பத்தரமுல்ல, மாலபே, பொரளை, கொலன்னாவ, ஹங்வெல்ல, அவிஸ்ஸாவெல, பாணந்துரை, களுத்துறை, ஹொரண, பண்டாரகம, கடவத்த, கம்பஹா, கிரிபத்கொட, ஜா-எலா, ராகம, கெரவலப்பிட்டிய ஆகியவற்றுக்காக மூலோபாய கருத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தத் கருத்திட்டங்கள் இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம், மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா) அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் ஆகிய அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

நகர புத்துயிராக்கல் நிகழ்ச்சித்திட்டம்

கொழும்பு நகரத்தின் சனத்தொகையிலிருந்து நூற்றுக்கு ஐம்பதுக்கு மேற்பட்ட சனத்தொகை செறிவு, குடிசைகளில் அல்லது இடிந்த பழைய வீட்டுத் முன்மொழிவுத்திட்டங்களில் வசித்து வருவதுடன், நகரத்தின் மொத்த நிலப்பகுதியில் 9% மட்டுமே உள்ளனர். நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இப்போதைக்கு நடாத்தப்பட்ட ஆய்விலிருந்து 1,499 குறைந்த வசதிகளோடுகூடிய குடியிருப்புகளில் வாழ்கின்ற 68,812 ஆனளவு குடும்ப அலகுகளுக்கு சுத்தமான வசிப்பிடங்கள் இல்லாதிருப்பதுடன் அவர்களுக்கு சுத்தமான குடிநீர் போன்ற அடிப்படை உட்கட்டமைப்புகள் வசதிகள் மற்றும் வாழ்வதற்கு ஆரோக்கியமான சுற்றுச்சூழலும் இல்லாதுள்ளது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மின்சாரம், ஆரோக்கியம் போன்ற ஏற்றுக்கொள்ளக்கூடிய தரங்களோடுகூடிய புதிய வீடமைப்பு முன்மொழிவுத் திட்டங்களின் மூலம் இந்த குடும்பங்கள் புனர்வாழ்வு அளிக்கப்படும்.கொழும்பு நகர அபிவிருத்தி குறித்தான திட்டங்களின் இலக்குகளை அடைதல் மற்றும் சுத்தமான மற்றும் இனிதான சூழலுடனான உலகமே ஏற்றுக்கொண்டுள்ள நகரமாக கொழும்பு நகரம் மாற்றும் திசையமைவுக்கு முக்கிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, நகர அபிவிருத்தி அதிகாரசபை கொழும்பு நகரம் மற்றும் அதனைச் அண்டியுள்ள பகுதிகளுக்கு குறை வசதிகளோடுகூடிய குடியிருப்புகளை ஏற்படுத்துவதற்காக 60,000 வீட்டுவசதி அலகுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த கருத்திட்டத்தின் முக்கிய நோக்கம் குடிசை வீடுகளில் மற்றும் பிற இடிந்த வீடுகளில் வாழும் குடும்ப அலகுகளுக்காக முறைசார் வீட்டுவசதி அலகொன்றை வழங்குவதோடு முறைசார் விதத்தில் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள குடிசை வீடுகளை அகற்றுதல் மற்றும் அதன்மூலம் விடுவிக்கப்படுகின்ற உயர் வர்த்தக மதிப்புடைய காணிகள் விளைவுபெருக்கமுடைய அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக ஈடுபடுத்துவதாகும்.

கொழும்பு நகர அதிகார பிரதேசத்திற்குள், காணி பாவனை முறை புலனாய்வு செய்யும்போது, நகரின் எல்லா இடங்களிலும் இடம்பெயர்ந்த குடியிருப்புகள் இடம்பெற்றுள்ளன. பரவலாக காணக்கூடியதாக இருப்பதுடன், கொழும்பு – வடக்கு மற்றும் கொழும்பு –கிழக்கு பிரதேசங்களில் அதிகமானளவில் பரந்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. அதனால் நகர அபிவிருத்தி அதிகாரசபை வீடமைப்பு அபிவிருத்திக்கு இணைவாக பௌதீக சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தப்படுவதுடன், அந்த பகுதிகளில் மேலும் வீட்டுத் திட்டங்களை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டின் கட்டம் I மற்றும் II ஆம் கட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற சில கருத்திட்டங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன:

	வீடமைப்பு கருத்திட்டத்தின் பெயர்	**வீடமைப்பு அலகுகளின் எண்ணிக்கை**
1.	தாச்சிவத்தை	68
2.	அங்கொடை	500
3.	காலிங்க மாவத்தை	528
4.	டொரிங்டன் மாவத்தை	120
5.	சாலமுல்ல	792
6.	புதிய மாவத்தை	672
7.	கொழும்பகே மாவத்தை	624
8.	கொலன்னாவ	696
9.	மாளிகாவத்தை	768
10.	மாளிகாவத்தை	1647
11.	அக்ரேரியன் சர்விஸ் லேண்ட்	941
12.	மட்டக்குளி	1076
13.	உருகொடவத்தை	1672
14.	அபல்வத்தை	479
15.	ஆராமய பிரதேசம்	717
16.	கிபுலா எல	472
17.	கொழும்பகே மாவத்தை	615

நடுத்தர வருமானங்கள் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

குறிப்பாக பிரதான நகரத்திற்கு அருகிலுள்ள நடுத்தர வருமானம் பெறும் நபர்களுக்காக வீட்டுப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு இல்லாத நிலை, இரண்டு தசாப்தங்களாக நிலவி வரும் பிரச்சினையாகவுள்ளது.

இந்த சமூகப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக, நகர்ப்புறங்களில் உள்ள உயர் நடுத்தர மற்றும் உயர் வருமானம் பெறுவோரின் வீட்டுவசதிக்கான கோரிக்கையை பகுப்பாய்வு செய்யப்பட்டிருப்பதுடன், அதற்காக அதிக கேள்வி நிலவுவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் அவற்றுக்கு வலுவான கோரிக்கை உள்ளது. எனவே, அடுத்த ஐந்து ஆண்டுகளில் நடுத்தர வருவாய் பெறும் குழுக்களுக்காக 500,000 வீட்டு அலகுகளை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட விடயப்பரப்பின் அடிப்படையில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள இலக்கை அடைவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பல வீட்டுத் திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அரச ஊழியர்களுக்காக விடமைப்பு முன்மொழிவுத்திட்டம் ஆரம்பித்திருப்பதுடன் அதற்காக உள்நாட்டு உள்நாட்டு வணிக வங்கிகளால் நன்மைபயக்கக் கூடிய முறையில் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் வசதியுடன் ஒரு வீடமைப்பு அலகு ரூபா 8.5 மில்லியன்கள் பெறுமதி கொண்ட 608 வீட்டு அலகுகளைக் கொண்ட வீடமைப்பு கருத்திட்டத்தின் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.பொரளை பெலன்கஸ்துடுவை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற இந்த வீடமைப்பு கருத்திட்டத்தின் கட்டுமான பணிகள் 2019 வருடம் முடிவடையும்போது பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2016 *வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய கருத்திட்டங்கள்*

நிலைப்பாட்டு அபிவிருத்தியின் பொருட்டு நாடாளவ ரீதியில் அபிவிருத்தி செயற்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதுடன் அக்கருத்திட்டங்களின் மேற்பார்வை நடவடிக்கைகள் பிரதான அலுவலகத்தைப் போன்று நாடாளவ ரீதியில் நிறுவப்பட்டுள்ள உப அலுவலகங்கள் மூலமும் மேற்கொள்ளப்படும். 2016 ஆம் ஆண்டளவில் அவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்ட சில அபிவிருத்தித் கருத்திட்டங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

ஹபுத்தளை காட்சி மேடை



சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைக்காக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இந்த கருத்திட்டத்துக்காக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் சுகித்தபுர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 40 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 2016 வருட இறுதியில் இந்த கருத்திட்டத்தின கட்டுமான பணிகள் 80% ஆனளவு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இந்த காட்சி மேடை சிற்றுண்டிச்சாலையினாலும் உள்ளடக்கப்படுவதுடன் இயற்கை அழகை இரசிப்பதற்கு விருப்பமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த பொக்கிஷமாகும்.

கிளிநொச்சி நகரத்தின் பசுமை பூங்கா அபிவிருத்தி கட்டம் I



கிளிநொச்சி மாவட்டத்துக்குள் வாழுகின்ற அதிக மக்கள் விவசாய நடவடிக்கைகளுக்குரிய தொழில்களில் ஈடுபடுகின்றவர்களாவர். நடைப்பெற்ற சிவில் யுத்தத்தில் வெளிநாடு சென்று குடிபெயர்ந்தவர்கள் யுத்தம் முடிந்ததும் திரும்பியதும் கிளிநொச்சி நகர மக்கள்தொகை உயர்வடைந்து வருகிறது.

இதன் விளைவாக, ஏ 9 நெடுஞ்சாலை மற்றும் கனகபுரம் சாலை சந்திக்கும் இடத்தில் ஒரு பசுமைப் பூங்காவாக அபிவிருத்தி செய்யும் பொருட்டு 2014 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த கருத்திட்டத்துக்காக ரூபா 15.5 மில்லியன்கள் ஆன செலவு ஏற்கப்பட்டிருப்பதுடன் 6% ஆன மதியுரைக் கட்டணம் நகர அபிவிருத்தி அதிகாரசபையிற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

மிஹிந்தலே ஓய்வு பூங்கா

இலங்கை பௌத்த மக்களின் புனித நகரமான மிஹிந்தலே நகரத்திற்கு தினந்தோறும் ஒன்றுகூடுகின்ற பெருமளவு மக்கள் தொகை காரணமாக அதிக நெரிசல் காணக்கூடியதாக இருப்பதுடன் அதற்கு இணைவாக திட்டமிடப்பட்டவாறு பொது வசதிகள் இல்லாததால், நகர திட்டமிடல் நடவடிக்கைகளில் முறையற்ற தன்மைக் காணக்கூடியதாகவுள்ளது. எனவே, நகரத்தில் பொதுவான வசதிகளைத் திட்டமிடப்பட்டவாறு அபிவிருத்தி செய்யும் தேவையை அடையாளம் காணப்பட்டது.

அதன்படி, வட மத்திய மாகாணத்தில் மாத்தளை நகர்ப்புற அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டம் ரூபா 15.5 மில்லியன்களான அரசாங்கத்தின் திறைசேரி நிதி மூலம் ஆரம்பிக்கப்பட்டு இந்த கருத்திட்டம் வாகன தரிப்பிட வசதிகள், ஓய்வெடுக்கக்கூடிய வசதிகளைப்போன்று சிறுவர் பூங்காக்கள் மற்றும் சுகாதார வசதிகளை முதலியவற்றைக் கொண்டுள்ளது.

கதிர்காமம் நுழைவாயில் அபிவிருத்தி,

இந்த கருத்திட்டத்தின் நோக்கமாக அமைவது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான மிகவும் சிறந்த வசதிகளை வழங்குவதாகும். அதற்கமைய கருத்திட்டத்தின் விசேட குறிகோளாக அமைவது நகர மத்தியில் பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் மேம்படுத்துதல், உன்னதமான சுற்றுச் சூழலுடன் கூடிய நிலங்களை அபிவிருத்திச் செய்தல், திட்டமிட்டபடி மற்றும் படைப்புத்திறனுடன் கட்டிட ஒழுங்குவிதிகளுக்கு இயைவாக அபிவிருத்தி நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படுவதுடன் இதனூடாக கதிர்காமம் புனித பூமிக்கு வருகைத்தரும் பக்தர்களின் பொது வசதிகள் அபிவிருத்தியடைவதன் காரணமாக உள்ளூர் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிக்கப்படும்.

கடை அறைகள் மற்றும் தரிப்பிட வசதிகளோடுகூடிய அபிவிருத்தி செய்யப்பட்ட கருத்திட்டத்துக்காக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 80 மில்லியனாக இருப்பதுடன் 2016 ஆம் ஆண்டு முடிவடையும்போது கட்டுமான பணிகள் முடிவு செய்யப்படும்.

சதுறு கொண்டன் ஈரநில காப்புறுதி கருத்திட்டம், - கட்டம் I

ரூபா 185 மில்லியன்கள் அரச திறைசேரி செலவில் இந்தத் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாநகர சபை பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற இத்திட்டம் மூன்று கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன் முதல் கட்டம், அதாவது முனைய கால்வாய் வழி மற்றும் மேற்பாலவீதிகளின் கட்டுமானம், 2016 ஆண்டின் இறுதியில் நிறைவுசெய்வதற்கு இயலுமையாக இருக்கும்.

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் இந்த ஈரநிலம் அபிவிருத்தி செய்வதேயாகும். ஈரநிலத்தில் நீரைத் தேக்கி வைப்பதனூடாக நடைமுறை உயிரியல் மாறுபாடு பாதுகாத்தல் மற்றும் இந்த உயிரினங்களின் வாழ்விடங்கள் பாதுகாப்பதனூடாக இயற்கை அழகை அனுபவிப்பதற்கு

வாய்ப்பை வழங்குவதற்கும் இதிலிருந்து மேலும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கருத்திட்டத்தினூடாக 8% மதியுரைக் கட்டணங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரியதாகும்.

ஹபராதுவ பேருந்துநிலைய அபிவிருத்தி மற்றும் களஞ்சிய வளாகம் மறுசீரமைப்பு



ஹபராதுவ நகர மத்தியிலுள்ள காலி மாத்தறை வீதிக்கு அருகில் இந்த பேருந்து தரிப்பிடம் மற்றும் களஞ்சியசாலை வளாகம் அமைந்துள்ளது. தற்போதைய நகர மையம் மையம் இடிந்த நிலையில் உள்ள மற்றும் பாழடைந்து கைவிடப்பட்ட கட்டிடங்கள் காரணமாக நகரம் ஒழுங்கற்ற முறையில் காணப்படுகின்றது. காலி-மாத்தறை வீதியை சுற்றியுள்ள நகரங்கள் துரித அபிவிருத்திக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. எனவே, காலி நகரத்திற்கு ஒரு நுழைவாயிலாக, குறிப்பிட்ட நகர திட்டத்துடன் கூடிய ஹபராதுவ அபிவிருத்தி செய்வதற்காக வழிகாட்டும் திட்டம் தயாராக உள்ளது.

ஹபராதுவ பிரதேசத்தில் மக்கள் தொகை 60,000 ஆகும். பேருந்து தரிப்பிட அபிவிருத்தி மற்றும் களஞ்சியசாலை வளாகம் மறுசீரமைப்பு கருத்திட்டத்தின் மூலம் இந்த மக்களுக்காக மிகவும் வினைத்திறன் வாய்ந்த போக்குவரத்து சேவை மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் வழங்கப்படும்.

"தீப உயன" கருத்திட்டம் , சுற்றுலா வசதிகள் நிலையம் மற்றும் தகவல் நிலையம்



இது ஒரு வர்த்தக நகரம், ஒரு நிர்வாக நகரம் மற்றும் ஒரு வரலாற்று மதிப்புமிக்க நகரமாக துரிதமாக அபிவிருத்தியடைந்து வருகின்ற பொலன்னறுவை மாவட்டத்தில் சுற்றுலா கவர்ச்சி மற்றும் தொல்பொருட்கள் மறுசீரமைப்பக்கப்படவேண்டிய தேவைப்பாடு உள்ளதை அடையாளம் காணப்பட்டுள்ளது.
அதன்படி, பொலன்னறுவை அபிவிருத்தி பிரதான கருத்திட்டத்தின் மற்றொரு துணைத் கருத்திட்டமாக "தீப உயன" கருத்திட்டம், சுற்றுலா வசதிகள் மையம் மற்றும் தகவல் மையமாக நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டது.
ரூபா 110 மில்லியன்களான மதிப்பிடப்பட்ட செலவில், தமங்கடுவ பிரதேச சபை பகுதியில் வரலாற்று ரீதியிலான "தீப உயன" மறுசீரமைக்கப்பட்டு கவர்ச்சிகரமான பூங்காவாக மாற்றும் நடவடிக்கையும், ரூபா 226 மில்லியனுடனான மதிப்பிடப்பட்ட செலவினால் சுற்றுலா வசதிகள் நிலையம் மற்றும் தகவல் நிலையத்தின் கட்டுமான பணிகளும் 2016 வருடம் முடிவடையும்போது நிறைவுசெய்வதற்கு முடியுமாக இருந்தது.

பத்தரமுல்லை நகர அபிவிருத்தி கருத்திட்டம்

நிர்வாக நகரமாக துரிதமாக ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டை நகரத்தின் போக்குவரத்து அமைப்பு மிகவும் வினைத்திறனாக்கும் பொருட்டு பொல்துவ- உடுமுல்ல விதியில் புதிய வீதி நிர்மாணம், பல மாடிக்கட்டிட வாகன நிறுத்துமிடம் மற்றும் விற்பனை வளாகங்கள் நிர்மாணிப்பதற்காக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை கூட்டிணைந்து இந்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்தி வருவதுடன் அதற்காக ரூபா 649 மில்லியன் செலவு ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது

பத்தரமுல்லை நகரம் தவிர்த்து மாலபே, கடுவெல மற்றும் களனி போன்ற வீதிகளுக்காக இலகுவாக போக்குவரத்து செய்ய முடியுமானவாறு 4 இடைவழிகளாலான இந்த பொல்துவ-உடுமுல்ல புதிய பாதை நிர்மாணித்தல் மேற்கொள்ளப்படும்.

குருநாகல் ஏரிக்கு அருகில் இயற்கை நிலக்காட்சி கருத்திட்டம்



பண்டைய மன்னர்களால் கட்டப்பட்ட இந்த ஏரி குருநாகல்-தம்புள்ள சாலையில் அருகில் அமைந்துள்ளது. இந்த ஏரியானது முழு நகரத்திற்கும் ஆன நீர் விநியோக கருத்திட்டத்தின் தோற்றுவாயாக பயன்படுத்தப்படுகிறது. வடமேற்கு பிரதேசத்தின் முக்கிய நகர மையமாக குருநாகல் நகரம் அபிவிருத்தியடைந்து வருகிறது.. நகர்ப்புற எல்லைக்குள் மக்கள் தொகை 30,000 என குறிக்கப்பட்டாலும், தினசரி பிரவேசமாகும் மக்கள் தொகை அதிகமாக உள்ளதுடன் சாலை இணைப்பு வசதிகளின் காரணமாக நகரம் வேகமாக வளர்ந்து வருகிறது.

எனவே, மக்கள் தொகையின் தற்போதைய மற்றும் எதிர்கால கேள்விக்கு ஏற்றவகையில் திறந்த வெளிகளை மற்றும் கேடிக்கை மற்றும் ஓய்வுடன் இருக்க முடியுமான பிரதேசங்களை வழங்கும் தேவைப்பாடு எழுந்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை ஏற்கனவே நகரத்தின் வனப்பு மென்மேலும் மெருகூட்டுவதற்காக குருணாகல் ஏரி சுற்றியுள்ள பிரதேசம் அலங்கரிக்கும் நடவடிகைகைகள் ஆரம்பித்திருப்பதுடன் 2016 வருட இறுதிக்குள் அதன் பணிகள் சுமார் 90% நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஏரி சுற்றியுள்ள சுற்றுப்புறங்களை அலங்கரிக்கும் கருத்திட்டம், நடைப்பாதை இடைவழிகள், மரங்களை நடுதல், வாகன நிறுத்துமிட வசதிகள் வழங்குதல், ஒளியூட்டும் வேலைகள் முதலியவற்றினால் ஆனது. இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள செலவு ரூபா 179 மில்லியன்களாகும்.

2016 சமூக அக்கறை மற்றும் முக்கிய நிகழ்வுகள்











உலக நகர தினம்



உலக GIS தினம்



உலக சுற்றாடல் தினம்

வணிக மற்றும் முதலீட்டு உச்சி மாநாடு 2016

அடுத்த 10 ஆண்டுகளுக்குள், ரூபா 16 பில்லியன்கள் ஈர்க்க நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் "முதலீட்டு வாய்ப்புகள்" என்று அழைக்கப்படுகின்ற மேற்கத்திய பிராந்தியத்தில் மாநகரத்தை இலக்காகக் கொண்ட முதல் வியாபார மற்றும் முதலீட்டு மாநாடு 2016 நடத்தப்பட்டது., மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதான திட்டத்தினூடாக அவர்களுக்கு பெற்றுக்கொள்ள முடியுமான "வரம்பற்ற வாய்ப்புகளாக" உள்ளூர் மற்றும் வெளிநாட்டு 100 முதலீட்டாளர்களுக்கு அதிகமானோர் விழிப்பூட்டுவதற்காக இந்த மாநாடு நடாத்தப்பட்டது.







நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்ட ஏற்பாடுகளுக்கமைய, அதிகாரசபையினால் நகர்ப்புற அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட எந்தவொரு பிரதேசமும் பொதுமக்களின் நலன்கருதி அபிவிருத்தி பிரதேசங்களாக கையகப்படுத்துவதற்கும் அதிகாரசபையின் எல்லையின் கீழ் உள்ள எந்தவொரு வளாகங்கமும் நகர அபிவிருத்தியின் நோக்கம் **குறித்து** அமைச்சு அங்கீகாரத்துடன் கைமாற்றல், விற்பனை, குத்தகை மற்றும் வாடகைக்கு வழங்க முடியும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டிருப்பது வணிக நிலங்கள் மற்றும் கட்டிடங்கள், பொது பூங்காக்கள், திறந்தவெளி நிலங்கள் மற்றும் நில அபிவிருத்தி அமைப்புக்களின் பரஸ்பரம் உரிமைகளின் தொகுப்பாக குறிப்பிட முடியும். சமூக பொறுப்புணர்வு முதன்மையாகக் கொண்டு நிறுவப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை, இந்த சமூக பொறுப்புணர்வு நிறைவேற்றும் பொருட்டு சுதந்திர சதுக்கம், குதிரை பந்தய மைதானம் தொடர்புடைய பகுதிகள் மற்றும் முக்கிய மக்கள் திறந்தவெளி பிரதேசங்களை பராமரித்து வருவதுடன் அதற்காக நிதியளித்தல் மேற்குறிப்பிட்ட சொத்துக்களின் சந்தை மதிப்பை அறவிடும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

கையகபடுத்தல்

விபரம்	விஸ்தீரணம்(ஏக்கர், றூட், பேர்ச்)	கையகபடுத்தும் நோக்கங்கள்
சுகித்தபுரவர	82-02-66	சமூக அபிவிருத்தி பணிகளுக்காக
மில்லேவ வத்தை	735-.00-00	கைத்தொழில் அபிவிருத்தி பணிகளுக்காக
188 வத்தை, கொட்டா வீதி, பொரளை **II** கட்டம்	00-01-10	குடியிருப்பு அபிவிருத்தி பணிகளுக்காக
கதுறுவெல நகர அபிவிருத்தி	47-02-21	நகர அபிவிருத்தி பணிகளுக்காக
தபுளை புனித பூமி அபிவிருத்தி	02-03-14	சமூக அபிவிருத்தி பணிகளுக்காக

வணிக மேம்பாட்டு செயற்பாடுகளுக்காக குத்தகை சேவைகளை வழங்குதல்

விபரம்	**மேம்பாட்டாளர்**	**விஸ்தீரணம்(ஏக்கர், ரூட், பேர்ச்)**	**செயல்முறை**
வேகட	நிபோன் நிட் தனியார் கம்பனி	00-01-00	30 வருட குத்தகை
திரிபொலி வியாபாரக் கட்டிடம் மருதானை	மொபயில் தனியார் கம்பனி		30 வருட குத்தகை
களுவெல்ல - காலி	கோல் ஹெரிடேஜ் லங்கா தனியார் கம்பனி	01-03-28.7	99 வருட குத்தகை
ஹோமாகம	எச்.அய். பெஷன் ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனி		30 வருட குத்தகை
ஹோமாகம	பாம்கெம் தனியார் கம்பனி		30 வருட குத்தகை
இரத்திபுரி	பி.ஜீ. ஹேமா அபேரத்ன	00-00-09.53	30 வருட குத்தகை
வெரலுபே - இரத்திபுரி	இரத்தினபுரி சட்டத்தரணிகள் சங்கம்- நீதிமன்ற வளாகம்	00-00-02.50	30 வருட குத்தகை
வெரலுபே - இரத்திபுரி	இரத்தினபுரி சட்டத்தரணிகள் சங்கம்	00-00-02.50	30 வருட குத்தகை
வெரலுபே - இரத்திபுரி	இரத்தினபுரி சட்டத்தரணிகள் சங்கம்	00-00-02.50	30 வருட குத்தகை
வெரலுபே - இரத்திபுரி	இரத்தினபுரி சட்டத்தரணிகள் சங்கம்	00-00-02.50	30 வருட குத்தகை

ஹிதல்லன – கடலியன்பல்ல	புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம்	01-00-33.25	30 வருட குத்தகை
சுதுவெல்ல	மக்கள் வங்கி	00-01-21.60	99 வருட குத்தகை
வெரலுபே - இரத்திபுரி	தோட்ட மற்றும கிராமிய அபிவிருத்தி நிறுவனம்	00-00-02.50	30 வருட குத்தகை
கிருலபன	இலங்கை விலை மதிப்புத் திணைக்களம்	00-00-12.00	30 வருட குத்தகை
கன்னோருவ வீதி - சிறிபோபுர	செலான் வங்கி தனியார் கம்பனி- செலான் டயர்	00-01-16.87	30 வருட குத்தகை
மருதானை	லண்டன் ஸ்டொக் எக்ஸ்சேன்ஸ் குரூப் தனியார் கம்பனி		10 வருட குத்தகை
வெரலுபே - இரத்திபுரி	டீ.எம்.பீ.சி. அபேரத்ன	00-00-02.50	30 வருட குத்தகை
வேகட	கோரியன் ஸ்பா பெகிங் தனியார் கம்பனி	04-00-33.16	30 வருட குத்தகை
தலபத்பிட்டிய	விவசாய , ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி சங்கம்	00-00-10.00	30 வருட குத்தகை
கோட்டை	கிறிஸ் டரான்ஸ்வர்க் கழம்பு தனியார் கம்பனி	00-02-17.40	99 வருட குத்தகை
நுவரெலியா	பீபல்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் தனியார் கம்பனி	00-00-19.68	30 வருட குத்தகை
கதிர்காமம்	தேசிய அபிவிருத்தி வங்கி	00-00-22.00	50 வருட குத்தகை
ஹிதல்லன	நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை	00-03-13.19	30 வருட குத்தகை


அதிகார சபையின் செயல்நிறைவேற்றம்

அதிகார சபையிற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களை நீண்டகால மற்றும் குறுங்கால அடிப்படையில் பல்வேறு முதலீட்டு வாய்ப்புகளுக்கு வழங்குவதனூடாக உழைக்கப்படுகின்ற வாடகை வருமானமானது அதிகார சபையின் பிரதான வருமான மார்க்கமாக இருக்கின்றது. இதற்கு மேலதிகமாக அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பல்வேறு வகையான துறைசார் சேவைகள் மூலமாகவும் அதிக வருமானத்தை சம்பாதித்துள்ளது. அவ்வாறே அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்பான கொடுப்பனவுகள் மற்றும் அனைத்து பதவியணியினருக்குமான உரிய சம்பளக் கொடுப்பனவுகள் உட்பட மற்றைய நியதிச்சட்ட கொடுப்பனவுகள் என்பன அதிகார சபையின் நிதிப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. இந்த தகவல்கள் அதிகார சபையின் முகாமைத்துவம் மற்றும் மற்றைய தொடர்புடைய நிறுவனங்களுக்கு மாதாந்தம், காலாண்டுக்கு ஒருமுறை மற்றும் வருடாந்த அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

அதற்கிணங்க, 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளுக்குரிய நிதி நிலைமைத் தொடர்பான பகுப்பாய்வு கீழே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வருமான மாற்றம்

வருடம்	2016	2015	2014	2013	2012
வருமானம் (ரூ.மில்)	1749	1757	2352	1344	1055



வருமான மாற்றங்கள்

2016 வருடத்தின் மொத்த வருமானம் ரூபா 8 மில்லியன்களால் குறைவடைந்துள்ளது.

அதாவது நூற்றுக்கு 0.4 ஆனளவு மிகவும் குறைந்த அளவினாலாகும். 2015 வருடத்திலும் பார்க்க அலுவல் முற்பணம் சேர்ந்தமை குறைவடைந்தமை இவ்வாறு மொத்த வருமானம் குறைவுக்கு காரணமாக அமைந்துள்ளது


செலவின பகுப்பாய்வு

விபரம் / வருடம்	நிர்வாக மற்றும் மற்றைய செலவினங்கள் (ரூ.மில்)
2016	4193
2015	2420
2014	2395
2013	1973
2012	1446

2016 ஆம் ஆண்டில் நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள் 2015 ஆண்டிற்கு நிகராக 73% ஆல் அதிகரித்திருப்பதுடன் இந்த நிலைமைக்கு முக்கியமாக காரணமாக அமைந்திருப்பது நகர புத்துயிரூட்டல் அலகினால் நிர்மாணிக்கப்படுகின்ற கருத்திட்டங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட குறுகியகால கடன் தொகைக்காக செலுத்தப்பட வேண்டிய வட்டி செலவு அதிகரித்தமேயாகும்.

தாபன இலாபம்


விபரம்	2016 ரூ.மி	2015 ரூ.மி	2014 ரூ.மி	2013 ரூ.மி	2012 ரூ.மி
இலாபம்	198	(133)	1032	696	414



2015 வருடத்துக்கு நிகராக 2016 ஆம் ஆண்டில் 249% ஆனளவு மொத்த இலாபத்தை அடைவதற்கு தாகபனத்தால் முடியுமாக இருந்தது. நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள் அதிகரித்திருப்பினும் வேறு வருமானங்கள் ரூபா 2099 மில்லியன்களால் அதிகரித்தல் இந்த இலாபம் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்தது காணக்கூடியதாக இருந்தது.

நிதி நிலைத்ததன்மை

விபரம்	2016	2015
நடைமுறையல்லாத சொத்துக்கள்	132,512	125,197
நடைமுறைச் சொத்துக்கள்	12,355	9,578
மொத்த சொத்துக்கள்	**144,867**	**134,775**
சமப் பங்கு	76,392	76,016
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்	33,253	31,094
நடைமுறை பொறுப்புக்கள்	35,221	27,665
மொத்த பொறுப்புக்கள்	**144,867**	**134,775**



நிதி நிலைமை தொடர்பான கூற்றின் சுருக்கம்

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான

(ரூ.மில்)

வகைப்படுத்தல்	2012 (மீள் மதிப்பிடப்பட்டது)	2013	2014	2015	2016
சொத்துக்கள்					
நடைமுறையல்லாத சொத்துக்கள்	95,659	99,410	116,905	125,197	132,512
நடைமுறைச் சொத்துக்கள்	16,069	15,772	17,031	9,578	12,355
மொத்த சொத்துக்கள்	***111,728***	***115,182***	***133,936***	***134,776***	***144,867***
சமஉரிமைப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்					
முதலீடு மற்றும் ஒதுக்கங்கள்					
மூலதனம்	100	100	100	100	100
தேறிய அரச பங்களிப்பு	1,030	1,016	1,001	986	970
வெளிவாரியாக வழங்கப்பட்ட சம உரிமை	**1,130**	**1,116**	**1,101**	**1,086**	**1070**
ஒதுக்கங்கள்	79,111	73,852	75,140	74,930	75,322
நடைமுறையல்லா பொறுப்புக்கள்	27,556	32,975	30,955	31,094	33,253
நடைமுறை பொறுப்புக்கள்	3,931	7,239	26,740	27,665	35,221
மொத்த சம உரிமை மற்றும் பொறுப்புக்கள்	***111,728***	***115,182***	***133,936***	***134,776***	***144,867***

விரிந்த வருமான மற்றும் செலவின கூற்றின் சுருக்கம்
2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான

(ரூ.மில்)

வகைப்படுத்தல்	2012 (மீள் மதிப்பிடப்பட்டது)	2013	2014	2015	2016
வருமானம்	1,055	1,344	2,352	1,757	1,749
மற்றைய செயற்பாடு வருமானம்	822	1,558	779	464	2,562
மொத்த வருமானம்	**1,877**	**2,902**	**3,131**	**2,221**	**4,311**
தாபன மற்றும் நிர்வாக செலவினம்	(1,423)	(1,936)	(1,903)	(2,082)	(2,415)
மற்றைய செயற்படு வருமானம்	(23)	(36)	(492)	(75)	(353)
நிதிச்செலவு	(1)	(1)	(1)	(263)	(1,426)
நிதிச் செலவின் பின்னரான செயற்படு இலாபம் (நட்டம்)	**430**	**929**	**735**	(199)	117
செயற்பாடற்ற வருமானம்	14	14	14	16	16
வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்)	**444**	**943**	**749**	**(183)**	**133**
வருமானங்கள் வரி செலவினம் / (பிற்போடப்பட்ட வரி வருமானம்	(254)	(247)	284	51	65
வரிக்கு பின்னரான இலாபம் (நட்டம்)	**190**	**696**	**1,033**	**(132)**	**198**
காப்பீட்டு கணிப்பு இலாபம் / (நட்டம்) உண்மையான இலாப / (நட்டம்)	(2)	(52)	(3)	(8)	22
வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்	**188**	**644**	**1,030**	**(141)**	**220**

காசுப் பாய்ச்சல் கூற்றின் சுருக்கம்
2016 திசெம்பர் 31 இல் முடிவடையும் வருடத்திற்கான


(ரூ.மில்)

வகைப்படுத்தல்	2012 மீள் மதிப்பிடப்பட்டது)	2013	2014	2015	2016
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்					
வருமான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் (நட்டம்)-	444	943	749	(183)	133
சீராக்கல்கள்	(953)	(1,635)	(623)	(1,212)	(1,621)
தொழிற்படு மூலதனத்திற்கு முன்னரான செயற்படு நட்டம்	(509)	(692)	(1,372)	(1,395)	(1,488)
தொழீற்படு மூலதன மாற்றங்கள்	1,345	1,120	(1,484)	4,523	5,410
செயற்பாடுளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	5,253	4,918	4,289	1,550	1,986
முதலீடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல	(14,271)	(5,945)	(4,493)	(15,428)	(6,764)
நிதி செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்	452	(75)	3,522	10,682	(240)
காசும் காசு சார்ந்தவைகளின் தேறிய அதிகரிப்பு	(7,730)	(675)	463	(69)	(1096)
வருட ஆரம்பத்தில் காசும் காசு சார்ந்தவைகளும்	7,885	155	(520)	(57)	(127)
வருட இறுதியில் காசும் காசு சார்ந்தவைகளும்	**155**	**(520)**	**(57)**	**(127)**	**(1223)**

மனித வள முகாமைத்துவம்


2016 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான, நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆளணி தொகுப்பு பின்வருமாறு உள்ளது. மேலும், மொத்த ஆளணியின் எண்ணிக்கையானது *1530* ஆக காணப்படுகிறது.

சிரேஷ்ட முகாமைத்துவம்



2016 ஆம் ஆண்டின் இறுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபையினுடைய உத்தியோகத்தர்களின் மாற்றங்கள் தொடர்பான சுருக்கம்

தரம்	*வருடம்*					
	2011	***2012***	***2013***	***2014***	***2015***	***2016***
நிறைவேற்று தரம்	*53*	*87*	*88*	*94*	*92*	*91*
நிறைவேற்று தரம் சாராத	*863*	*829*	*890*	*834*	*865*	*982*
வேறு	*592*	*654*	*576*	*578*	*545*	*457*
மொத்த உத்தியோகத்தர்கள்	***1455***	***1570***	***1554***	***1506***	***1502***	***1530***



2016 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் வளர்ச்சி

மனித வளம் தொடர்பான நடவடிக்கைகள்	உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
இளைப்பாறல்கள்	19
இறப்புக்கள்	01
முடிவுறுத்தல்கள்	04
வேலை நிறுத்தம்	05
பதவி உயர்வுகள்	56
இராஜினாமா	10
ஆட்சேர்ப்புக்கள்	72
இடமாற்றங்கள்	170

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் புலமைப் பரிசில்கள்

உள்ளூர் பயிற்சிகள்	
விரிவுரை/செயலமர்வுகள்17	ஊழியர்கள் 250
குறுகியகால பாடநெறி	ஊழியர்கள 83
நீண்டகால பாடநெறி 03	ஊழியர்கள் 19

வெளிநாட்டு பயிற்சிகள்	
அலுவலக அவதானிப்புகள் 16	ஊழியர்கள் **29**
புலமைப் பரிசில்கள் 05	ஊழியர்கள் **05**

அதிகார சபையின் புலமைப் பரிசில் குழு மற்றும் பயிற்சிகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் / புலமைப் பரிசில்களுக்கு ஆளணியினர் நெறிப்படுத்தப்பட்டிருக்கின்றனர். இந்த குழுவானது அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் - மனித வள முகாமைத்துவம் போன்றோரை கொண்டமைந்த ஒரு குழுவாகும். மேலும் 2016 ஆம் ஆண்டிற்குள் மூன்று தடவைகள் இந்தக் குழு கூடியுள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஊழியர் நலன்புரி

மருத்துவ சிகிச்சை

தங்கியிருந்து சிகிச்சை பெற்றோரின் எண்ணிக்கை 60	**சாதாரண சிகிச்சை பெற் றோரின் எண்ணிக்கை 1469**
ரூ.1,487,106/-	ரூ.9,252,079/-

ஊழியர்களுக்கான கடனுதவி

வீட்டுக் கடன்கள் 14	**இடர் கடன்கள் 434**
ரூ. 6,629,902/-	ரூ..47,77200/-

நல்லாட்சி

நகர அபிவிருத்தி அதிகார சபை, அதன் விடயபரப்பு மற்றும் தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அதன் மூலம் பொருளாதார மற்றும் சமூக சுற்றாடலுக்கு பெரிதும் துணை நலமான அபிவிருத்தியை வழங்கும் நோக்கத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்கின்றது. இந்த நடவடிக்கைகளள் மேற்கொள்ளும்போது அதிகாரசபையின் முகாமைத்துவ சபையின், உயர் முகாமைத்துவம் மற்றும் மற்றைய ஊழியர்களுடன் இணைந்து வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையுடன் கடமைகளை மேற்கொள்வதற்காக இணைந்துள்ளது.

இந்த செயல்முறைகளின் முக்கிய நோக்கமாக அமைவது பொதுமக்களின் தேவைப்பாடுகளுக்கு இயைவாக அதிகார சபையின் குறிக்கோள்கள், அவற்றின் வெளிப்படைத் தன்மை மற்றும் உண்மைத் தன்மை பாதுகாக்கப்படும் முறையில், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபை மற்றும் பணிப்பாளர் சபை மூலம் நல்லாட்சிக்கான செயல்முறைத் தயாரிப்பதாகும்.

பொதுமக்களின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நலனோக்கு உயர்மட்டத்தில் பேணும் பொருட்டு அரச தொழில்முயற்சியாளராக நகர அபிவிருத்தி அதிகார சபை செயற்பட வேண்டும். அதற்கிணங்க, அதிகார சபையின் உள்ளக மற்றும் வெளியக தொழிற்பாடுகள் முறையான செயற்பாங்குக்கமைய சிறந்த நிர்வாகததின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. அதிகார சபைத் தொடர்பில் செல்லுபடியான அனைத்து சட்டத்திட்டங்களுக்கு புறம்பாக தாபனமொன்றில் ஒருமைப்பாட்டினை பாதுகாத்துக் கொள்வதில் இந்த செயல்முறை வழிவகுத்துள்ளது.

பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் நல்லாட்சி தொடர்பான வழிகாட்டல் கோவையின் ஒழுங்குவிதி சட்டதிட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் கட்டளைகள் மிகவும் சிறந்த அரசாங்க சேவையை உருவாக்குவதில் முக்கியத்துவம் பெறுகின்றன. மிகவும் முக்கியமான நிதி சார்ந்த ஒழுக்காற்றை ஏற்படுத்துவதற்கு நல்லாட்சி தொடர்பான வழிகாட்டல் கோவையின் செயல்முறை பொருத்தமானதாகும். இந்த வழிகாட்டல் கோவையின் முக்கிய நோக்கங்கள் மற்றும் குறிகோள்களாக அமைவது அரச நிறுவனங்களிலும் பார்க்க தரத்தினால் மற்றும் உயர் அந்தஸ்தினைக் கொண்டதொரு கட்டமைப்பிற்குள் பேணப்பட்டு வழிநடாத்துவதும், பொருத்தமான செயல்முறைகளில் இலகுவான தன்மையும் மற்றும் தரத்தினையும் ஏற்படுத்துவதாகும். இந்த வழிகாட்டல் கோவையினூடாக பொது தொழில் முயற்சி நிறுவனமாக நகர அபிவிருத்தி அதிகார சபை எதிர்பார்க்கும் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை எவ்வாறு அடைந்து கொள்ளலாம் என்ற விடயம் தொடர்பில் வழிகாட்டப்படுகின்றது.

முகாமைத்துவ சபை

சட்ட ஏற்பாடுகளுக்கமைய விடயத்திற்கு பொறுப்பாக உள்ள அமைச்சரினால் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் மற்றும் அதிகார சபையின் முகாமைத்துவ சபை நியமிக்கப்படுவர். அதேவாறு, அதிகார சபையின் தவிசாளர் முகாமைத்துவ சபையினுடைய தவிசாளராவார். முகாமைத்துவ சபை அங்கத்தவர்களுடைய கடமைகளும் பொறுப்புக்களும் வருமாறு:

- கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்கள் மற்றும் மேற்பார்வைகளின் வெற்றி மற்றம் செயற்பாட்டினை மதிப்பீடு செய்தல்
- கூட்டாண்மை திட்டம், செயல் திட்டத்துடன் வருடாந்த பாதீடு போன்றவற்றிற்கு அனுமதி வழங்கல்.
- வருடாந்த அறிக்கைகள், இடைக்கால நிதி அறிக்கைகள் மற்றும் வருடாந்த நிதி அறிக்கைகள் போன்றவற்றிற்கு அனுமதி வழங்குதல்.
- சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் அடிப்படை நல்லாட்சி கோட்பாடுகள் என்பவற்றுடன் உடன்படுகின்றனவா என்பது தொடர்பில் உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளல்

- அதிகார சபையின் செயற்திறன்கள், மற்றும் உறவுகள் தொடர்பில் பொறுப்புணர்வுடன் செயல்படுதல்
- செலவினங்கள் மற்றும் பிரதான மூலதன முதலீடுகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுத்தல்.
- துணைமைக் கம்பனிகளின் இயக்குனர் சபைக்கு அங்கத்தவர்களை நியமித்தல் முகாமைத்துவ சபையினுடைய செயலாளர் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமாக இருப்பதுடன், முகாமைத்துவ சபை குறித்து அவரின் கடமைப்பொறுப்புகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

- முகாமைத்துவ சபையினுடைய கூட்டங்களை கூட்டுதல், அங்கு எடுக்கப்படும் தீர்மானங்களை அறிக்கையிடுதல் மற்றும் முகாமைத்துவ ஆவணங்களை பொருத்தமான முறையில் பதிவு செய்தல்.
- முகாமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் தொடர்பாக கண்டறிந்து பின் தொடர்வாரியான கண்காணிப்புகளை மேற்கொள்ளல்.
- முகாமைத்துவ சபைக்குத் தேவைப்படுகின்ற தகவல்களை வழங்குதல்.

2016 ஆம் வருடத்துக்குள் 22 முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

செயல்நிறைவேற்ற மேற்பார்வை மற்றும் அதிகாரசபையின் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் பதவியணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை அவற்றின் வெளிப்படை பாதுகாக்கப்படும் முறையில் நிறைவேற்றி உள்ளார்களா என்பதனை உறுதி செய்து கொள்ளவதற்காக பின்வரும் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் முகாமைத்துவ சபைக்கு மாதாந்த அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

- நிதி மற்றும் பௌதீக செயல்திறன் அறிக்கைகள்
- செயற்பாட்டு கூற்று
- மாதாந்த காசுப் பாய்ச்சல் கூற்று
- திரவத்தன்மை மற்றும் கடன் எடுக்கமுடியுமான இயலுமை
- நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

அதிகார சபையினுடைய நிதி நிலைமையை மேற்பார்வை செய்வதற்காக மாதாந்தம் மற்றும் வருடாந்தம் நிதி அறிக்கைகள் முகாமைத்துவ சபைக்கு சமர்பிக்கப்படும். அதேபோன்று மாதாந்தப்படியான கணக்கு அறிக்கைகள் அமைச்சு முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களுக்காகவும் மாதாந்தம் சமர்பிக்கப்படும.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு
கணக்காய்வு குழுவினுடைய கடமைகளும் பொறுப்புக்களும்

நிதி அறிக்கையிடல், இடர் முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு சட்டதிட்டங்களுக்கு இணங்குதல், ஒழுக்கவியல் என்பவற்றிற்கு அமைவாக சிறந்த முறையில் பிரயோகிக்கப் படுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்துதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முக்கிய கடமைப்பொறுப்பாகும். அதேபோன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியிற்கு தனது கணக்காய்வு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காகத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் இன்னுமொரு நடவடிக்கையாகும். உள்ளக கட்டுப்பாடுகளை நிறுவுவதற்காக கணக்காய்வு குழுவினை நியமிக்கும் அதிகாரம் முகாமைத்துவ சபைக் கொண்டுள்ளது. இந்த குழு 2016 ஆம் ஆண்டிற்குள் 04 தடவைகள் ஒன்றுகூடியிருப்பதுடன் விசேட ஒரு கூட்டத்தினை நடாத்தி இருக்கின்றது. குழு அங்கத்தவர்களின் விபரங்கள் வருமாறு.

1. திருமதி. அனோமா நந்தனீ – குழு தவிசாளர்
2. திரு. டி.டீ.எஸ்.பெரேரா – குழு அங்கத்தவர்
3. திரு சனத் பி. பனாவென்ன - குழு அங்கத்தவர்
4. திரு. ஈ.கே.கே. எஸ்.எதிரிசிங்ஹ – கண்காணிப்பாளர்
5.திரு. ஆர். ஜீ. ஹெட்டிஆரச்சி - கண்காணிப்பாளர்

பொதுவாக,கணக்காய்வு குழு கூட்டத்தில் பிரதம நிதி அலுவலர், பிரதம உள்ளக கணக்காய்வாளர் மற்றும் வெளியக கணக்காய்வாளர் போன்றோர் கலந்துகொள்வார்கள். அதேபோன்று கணக்காய்வு குழுவினால் தேவையின் அடிப்படையில் அழைக்கப்படும் பொழுது, மற்றைய பிரிவுகளின் தலைவர்களும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தில் பங்கேற்பார்கள்

கொள்முதல் குழு

அரச கொள்முதல் வழிகாட்டல்களுக்கு அமைவாக அதிகார சபையினுடைய கொள்முதல் தொழிற்பாடு வெற்றிகரமாக மேற்கொள்ளுதல் மற்றும் அதன் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் பொருட்டு கொள்முதல் குழு பிரதான மற்றும் சிறியதாக இரு குழுக்களாக தாபனத்திற்குள்ளே செயற்படுகின்றது.

5. **பயிற்சி மற்றும் புலமைப் பரிசில் குழு**

தாபனத்தின் அலுவலர்களின் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் முறைப்படுத்தப்பட்ட செயல்முறையொன்றின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் இந்த குழு மூலம் மேற்கொள்ளப்படும். குழுவினுடைய மேற்பார்வை மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் தாபனத்தின் மனித வள முகாமைத்துவ பிரிவு மூலம் அக்கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த குழுவானது தாபனத்தின் உயர் முகாமைத்துவத்தில் உள்ள அலுவலர்களை அங்கத்தவர்களாக கொண்டிருப்பதுடன், இந்தக் குழு 2016 ஆம் ஆண்டிற்குள் ஐந்து சந்தர்ப்பங்களில் ஒன்றுகூடியிருப்பதுடன் அதன் அங்கத்தவர்களின் விபரம் வருமாறு:

1. திரு. நயன மாவில்மட – பணிப்பாளர் நாயகம்
2. திரு .டபிள்யு. எல்.டீ.பி.வி.ஜயவர்த்தன – பிரதி பணிப்பாளர் நாயகம் (நிதி)
3. திரு. மஹிந்த விதானாராச்சி - பிரதி பணிப்பாளர் நாயகம் (கருத்திட்டங்கள்)
4. திரு. டபிள்யு. ஏ. எஸ். சுமணசூரிய - பணிப்பாளர் (மனித வள முகாமைத்துவம்)

சொத்துக்களை சரிபார்த்தல்

வருடாந்த சொத்துக்கள் சரிபார்ப்பு மூலம் அதிகார சபையிற்குச் சொந்தமான சொத்துக்கள் பௌதீக ரீதியில் ஒப்பாய்வு செய்யப்படுவதுடன் அதிகாரசபையின் களஞ்சியசாலையிலுள்ள சரக்குகள் மாதாந்தம் கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்படுகிறது. அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் அறிக்கைகள் அனுப்பாணை செய்வதற்கும்இ அப்புறப்படுத்துவதற்கும் பயன்பாடாக இருக்கும்.

நிதி வெளிப்பாடுகள்

உண்மை மற்றும் நியாயமான முறையில் நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல் முகாமைத்துவ சபையின் பொறுப்பாக அமைவதுடன், இலங்கை கணக்கீட்டு கொள்கைகளுக்கு அமைவாக தயார்படுத்துவது சட்டத் தேவைப்பாடாக கருதப்படுகிறது.

உள்ளக கட்டுப்பாடு

போதுமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை அறிமுகப்படுத்துவது முகாமைத்துவ சபையின் பொறுப்பாக இருப்பதுடன், கணக்காய்வு குழுவு மூலம் அதற்குரிய சட்டதிட்டங்களை மேம்படுத்தப்படும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. எச்யூடீ/பீ/யூடீஏ/1/16/6

මගේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2018 சனவரி 28

தலைவர்,
நகர அபிவிருத்தி அதிகாரசபை

நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2016 தி செம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான ஒருங்கிணைந்த விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக்கூற்று விரிவான வருமானக்கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றைத் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 மறுப்பு அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் ஆம் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன் அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

மறுப்பு அபிப்பிராயம் - அதிகாரசபை

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன் அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அதிகாரசபையின் துணைக் கம்பனிகளாக வோடர்ஸ் ஏஜ் லிமிடெட், லங்கா ரெஸ்ட் ஹவுஸ் (தனியார்) கம்பனி மற்றும் பேலியகொடை வெயார் ஹவுஸ் தொகுதி கம்பனியின் 2016 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றுக்களும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தன. இந்த 04 கம்பனியினதும் முழுப் பங்குரிமையும் அதிகாரசபைக்குச் சொந்தமாக இருந்தது.

(ஆ) நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரிமை கையளிக்கப்பட்ட ரூபா 642.5 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் கட்டிடம், வோட்டர்ஸ் ஏஜ் கம்பனியின் பாவனைக்காக ஈடுபடுத்தப்படுகின்றமையால் அப்பெறுமதிக்கு பங்குகளை விநியோகிப்பதற்காக துணைக்கம்பனியால் கோரப்பட்டிருந்தது. எனினும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பங்குகள் விநியோகித்தல் இடம்பெறாதிருந்ததுடன் பங்குகளை விநியோகிக்கும் இடைக்கப்பாடொன்று காணப்படுவதாக (pending allotment of shares) வோட்டர்ஸ் ஏஜ் கம்பனியின் நிதிநிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக முறையான உடன்படிக்கையொன்று மேற்கூறப்பட்ட கம்பனிக்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கம்பனியின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு ரூபா 200 மில்லியன் அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் துணைக் கம்பனியான வோட்டர்ஸ் எஜ் கம்பனியின் முதலீடாக ரூபா 842.5 மில்லியன் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது.

2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை – அதிகாரசபை

2.3.1 கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் குறைபாட்டின் காரணமாக கணக்காய்வு விடயப்பரப்பின் வரையறை

அதிகாரசபையினால் கணக்கு வைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கணனிசார்ந்த கணக்கீட்டு முறைமையில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக பல வருட காலம் முதல் கணக்காய்வினால் விடயங்கள் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த

வழுக்களை சரிசெய்து கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணனி சார்ந்த கணக்கு வைத்தல் முறைமையில் இரட்டைப் பதிவுத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்படாமை, சரியாகவும் ஒழுங்குமுறையாகவும் கணக்குகளை வகைப்படுத்தும் திட்டமுறைமையொன்று (coding) பயன்படுத்தப்படாமை, சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினக் கணக்குகளில் விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத வகையில் மீதிகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டமை, கணக்காய்விற்கு கிடைக்கின்ற நிதியாண்டிற்குரிய கணக்குகளின் தரவுகள் தனித்தனியாக ஒதுக்குவதிலுள்ள வசதியீனம், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளின் சரியான தன்மையை பரீட்சிப்பதற்குரிய விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை மற்றும் ஆகக்குறைந்தது வருடத்திற்குரிய பரீட்சை மீதியை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமை என்பன இந்தக் குறைபாடுகளுக்கிடையே விஷேடமானதாகும்.

கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையில் உருவாகின்ற கணக்கு தரவுகளின் சரியான தன்மை, ஏற்றுக்கொள்ள முடியும் எனவும் மற்றும் கணனி முறைமையின் அண்மித்தல் முறையான பாதுகாப்புத்திட்ட முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு அதனை அமுல்படுத்துவதற்கு நவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் முறைமையில் முறையான கணக்காய்வு வசதிகள் (Audit Trail) இல்லாதிருந்ததுடன் மேற்கூறப்பட்ட பிரச்சினையுடனான நிலைமையில் கணக்காய்வு விடயப்பரப்பு எல்லையில் தாக்கமளித்திருந்தது.

2.3.2 இலங்கைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணங்காமைகள் எண்ணிக்கப்பட்டன.

(அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07

(i) நிதிநிலைமைக் கூற்றில் காணப்படுகின்ற நிதி முதலீட்டின் கீழான பெறுமதி ரூபா 4,488 மில்லியன் தொகையான மீள்கொள்வனவுக் கணக்குகள் முதலீடு (Investment In Repos) மற்றும் ரூபா 1,559 மில்லியன் நிலையான வைப்பு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சிறந்த வட்டி விகிதத்தினை அடிப்படையாகக் கொண்டு காலக்கழிவு

செய்யப்பட்ட பெறுமதி தொடர்பாக போதியளவான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நகர அபிவிருத்தி சார்ந்த நிகழ்ச்சித்திட்டத்தை (UDSP) அமுல்படுத்துவதற்காக ரூபா 37.62 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருருந்த போதிலும், அது தொடர்பாக போதியளவான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07 (SLFRS) இன் பிரகாரம் முற்செலுத்தப்பட்ட பதவியணியினர் கிரயம் ரூபா 53 மில்லியன் பெறுமதிக்குரிய நியாயமான பெறுமதியை சீராக்கும் போது ஏற்பட்ட இழப்பு, நட்டங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01

(i) நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் தொடர்ந்து வரும் வருட காலத்தில் தீர்க்கப்பட வேண்டிய பொறுப்புக்கள், நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், எதிர்வரும் வருடங்களில் செலுத்த வேண்டிய ரூபா 3.2 மில்லியன் தொகையான பணிக்கொடை கொடுப்பனவுகள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மூலம், 2016 ஆம் ஆண்டிற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பல்வேறு செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 1,859 மில்லியன் மூலதன நிதிஏற்பாடு உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிறுவனத்தால் பேணப்படுகின்ற ஒதுக்கங்களின் தன்மை மற்றும் அவற்றைப் பேணிச் செல்வதற்கான நோக்கம் என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையின் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 55

மில்லியன் தொகையான நிச்சயமற்ற நிதியம் மற்றும் ரூபா 8.4 மில்லியன் தொகையான மூலதன ஒதுக்கங்களைப் பேணிச் செல்லும் நோக்கம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 07

(i) தொகுதிக் கடன் வட்டித் தொகையை மீளளிப்புச் செய்வதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 551.8 மில்லியன் தொகை, காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிப்பதற்குப்பதிலாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் தொழிற்படு மூலதன முரண்களில் சீராக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டுள்ள தொகை நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 16,272,210 ஆக இருந்ததுடன் காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா 17,519,171 ஆனமையால் அந்த மீதிகளுக்கிடையே ரூபா 1,246,961 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 17

நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்ட ரூபா 19,940 தொகையான பிற்போட்ட குத்தகை வாடகை (Differred Lease Rent) தொடர்பாக போதியளவான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 23

2010 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளின் போது நகர் புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் மாடி வீடுகளை நிர்மாணிப்பதற்காக விநியோகிக்கப்பட்ட தொகுதிக் கடன்களுக்கான வட்டிச் செலவினம் ரூபா 1,705.83 மில்லியன் தொகையான கடன் பெறுவனவுக் கிரயம் (Borrowing Cost) ஆக மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனினும், இலங்கை கணக்கீட்டு நியமம் 23 இல் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டில் தொகுதிக்கடன் வட்டி மீளளிப்பிற்காக பொதுத் திறைசேரியிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 2,759 மில்லியன் தொகைக்கு எதிராக மேற்கூறப்பட்ட மூலதனமாக்கப்பட்ட கடன்

பெறுவனவுக் கிரயம் ஈடுசெய்யப்பட்டமையால் புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்ட ரூபா 1,705.83 மில்லியன் கடன்பெறுவனவுக் கிரயத்தின் பெறுமதியில் அச் சொத்துக்கள் குறைத்துக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 1,053 மில்லியன் தொகை கடன் பெறுவனவுக் கிரயம் (Borrowing Cost) மீளளிப்பு இலாபமாக ஏனைய வருமானத்தின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. கடன் பெறுவனவுக் கிரயத்தை விஞ்சி பொதுத் திறைசேரியிலிருந்து பணம் பெறுவதற்கான காரணமான விடயங்கள் மற்றும் பொதுத் திறைசேரியிலிருந்து மேலதிகமாகப் பெறப்பட்ட தொகையொன்றை வருமானமாக இனங்கண்டமைக்கு காரணமான விடயங்கள் என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 24

மீளாய்வாண்டு காலப்பகுதிக்காக கணக்காய்வு செய்யப்பட்ட வோட்டர்ஸ் ஏஜ் துணைக்கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து ரூபா 5,438,553 தொகை கிடைக்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் இதனுடன் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்படவில்லை.

(எ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 28

மூன்று துணைக் கம்பனிகளின் முதலீடாக ரூபா 128.8 மில்லியன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த முதலீடுகளுக்குரிய நலன்களை இனங்காண முடியாமைக்கும் / வருமானத்தை அட்டுறு செய்யாமைக்கும் போதியளவான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஏ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 37

(i) அதிகாரசபையின் துணைக் கம்பனியான பேலியகொட வெயார் ஹவுஸ் கம்பனியின் முதலீட்டுப் பெறுமதி ரூபா 449 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த முதலீட்டுப் பெறுமதி குறைவடைந்தமைக்காக நூறுசதவீத நிதிஏற்பாடு 2012 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும், இந்தக் கம்பனி 2013 ஆம் ஆண்டு முதல் இலாபம் பெறுகின்ற நிலையில் அந்த நிதிஏற்பாட்டை மீண்டும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 ஆம் ஆண்டு முதல் 2012 யூலை வரை ஊழியர் சேமலாப நிதிய ஒதுக்கீட்டின் போது வாழ்க்கைச் செலவுப் படி உரித்தாக்கப்படாமையினால் காலப்பகுதிக்காக மிகைக் கட்டணமாக்கப்பட்ட ரூபா 60.5 மில்லியன் தொகையான மிகைக் கட்டணம் ஏற்றுக்கொள்ளல் நிச்சயமற்றதாக இருந்தது. நிகழத்தக்க பொறுப்பின் கீழ் இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டு அதற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மிகைக் கட்டணத்திற்குரியதாக மேலும் அதிகாரசபையினால் செலுத்த வேண்டிய ரூபா 6.5 மில்லியன் தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.3.3 கணக்கீட்டுக் கொள்கை

அதிகாரசபையினால் கையேற்கப்பட்ட காணிகளுக்குரிய இழப்பீடு செலுத்துதல் மற்றும் காணிகளை அகற்றும் போது வருமானத்தை இனங்காணும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.3.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் காணிக்காக அரசாங்கத்தின் விலை மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வாற்காக அதிகாரசபையினால் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 261 மில்லியன் தொகை பொறுப்பொன்றாக இணங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் பொறுப்புக்கள் அந்த செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் பொறுப்புக்கள் அந்த அளவால் குறைத்துக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் கொடுப்பனவு செய்யப்படாத இந்த செலவில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் சீராக்கப்படாமையின் காரணமாக அந்த ஆண்டின் இலாபம் மிகை மதிப்பீட்டிற்குள்ளாகியிருந்தது.

(ஆ) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடைப் பொறுப்புக்கள் ரூபா 245.9 மில்லியனாக இருந்ததுடன் ஆயுட்கால எண்ணிக்கை அறிக்கையிடல்களின் படி (Actuarial Valuation Report) அது ரூபா 242.2 மில்லியனாக இருந்த போதும் இந்த வேறுபாட்டிற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) தற்போது நாட்டில் அமுலில் இல்லாத வரி, அதாவது அரச பாதுகாப்பு வரி (NSL) மற்றும் பொருட்கள், சேவைகள் வரி (GST) ரூபா 36 மில்லியன் தொகை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது அறவிட வேண்டிய அரசாங்க வரி கடன்பட்டோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணமான ரூபா 1,355,452 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகாரசபையினால் 2014 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட 04 கம்பனிகள் தொடர்பாகவும் அதன் ஆரம்ப மூலதனமான 4,000 பங்குகளுக்காக அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மெரய்ன் ரைவ் (Marine Drive Project) வீதி நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக அதிகாரசபைக்குரிய கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள 02 காணிக் கூறுகள் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது கையேற்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காணிகளின் சரியான கிரயத்தை இனங்கண்டு ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் பெறுமதியில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட காணிகளின் பெறுமதி மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) சுய மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்காக ரூபா 10,029,259 தொகையான வரிப் பொறுப்பை இனங்கண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. வரி வருமானத்திற்காக சீராக்கப்பட்ட இலாபத்தை கணிப்பீடு செய்யும் போது குத்தகைக் கொள்வனவு

அடிப்படையில் வட்டி வருமானம் ரூபா 232 மில்லியன் அதாவது வருமானப் பாய்ச்சலாகக் கருதி அகற்றுதல், மீளாய்வாண்டின் காணி விற்பனை இலாபம் ரூபா 104,041,994 தொகை மற்றும் நிலையான சொத்துக்கள் விற்பனை இலாபம் ரூபா 4,702,160 தொகை வரி வருமானத்திற்காக சீராக்கப்பட்ட இலாபத்தை கணிப்பீடு செய்யும் போது ஏனைய வருமானப் பாய்ச்சலாக குறைத்து காண்பிக்கப்படாமையின் காரணமாக சுய மதிப்பீட்டு அடிப்படையில் வரிப் பொறுப்பைக் கணிப்பீடு செய்யும் போது வியாபார நடவடிக்கைகளில் சீராக்கப்பட்ட நட்டம் ரூபா 123,441,054 இனால் குறைத்துக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) பூர்த்தி செய்யப்பட்ட 05 செயற்திட்டங்களின் கிரயம் ரூபா 1,248.23 மில்லியன் தொகையை மூலதனமாக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் நடைமுறை வேலையாக (Capital Working Progress) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.3.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வோட்டர்ஸ் ஏஜ் துணைக்கம்பனியிலிருந்து அதிகாரசபைக்குக் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 4,000,000 ஆக இருந்த போதிலும், அக் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதிகாரசபையினால் அக்கம்பனிக்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 5,438,553 ஆனமையால் இந்த மீதிகளுக்கிடையே ரூபா 9,438,553 ஆன வேறுபாடு அதவானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அதனோடொத்த பட்டோலைகளில் காண்பிக்கப்பட்ட மீதிகளுக்கும் இடையே ரூபா 93.8 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

2.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே குறிப்பிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த

விடயங்களை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

	கணக்குகளின் விடயம்	பெறுமதி (ரூபா.மில்லியன்)	சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்
(அ)	முதலீடு செய்யப்பட்ட ஆதனம்	71,432	விரிவான பட்டோலை, காணிப்பதிவேடு
(ஆ)	உள்ளூராட்சி கடன்கள்	647	மீதி உறுதிப்படுத்தல் மற்றும் விரிவான பட்டோலை
(இ)	காணிக்காகச் செலுத்த வேண்டிய கடன், செலுத்த வேண்டிய வைப்பு மற்றும் முற்பணம்	21,156	
(ஈ)	(i) வருமானக் கணக்குகள் - 04	2,506	விரிவான பட்டோலை
	(ii) செலவினக் கணக்குகள் - 02	463	
(உ)	காணி கையேற்றல் (நகர புனர்வாழ்வு செயற்திட்டம் 58 ஏக்கர் அளவில்)	-	உபயோக ஆவணங்கள்
(ஊ)	நிலுவையாக இருந்த பதவியணியினர் கடன்கள்	200	விரிவான பட்டோலை, காலப்பகுப்பாய்வு, அறவிடுவதற்குள்ள வழிமுறைகள் தொடர்பான விபரங்கள்

2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 அரசாங்க நிறுவனங்களிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 123 மில்லியன் அதிகாரசபைக்குக் கிடைக்க வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 02 நிறுவனங்களிலிருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம், அந்த நிறுவனத்தின் மூலம் அதிகாரசபைக்கு எந்தத் தொகையும் செலுத்தப்படாதிருந்ததுடன் இரண்டு நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய தொகை

ரூபா 2.5 பில்லியனாக இருந்தது. அவ்வாறே ஏனைய அரச நிறுவனமொன்றிலிருந்து ரூபா 40 மில்லியன் கிடைக்க வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனத்தின் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அதிகாரசபையினால் அந்த நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 52 மில்லியனாக இருந்தது. மேலும் அதிகாரசபையினால் இரண்டு அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கு ரூபா 69 மில்லியன் செலுத்த வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அரசாங்க கூட்டுத்தாபனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதிகாரசபையிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 393 மில்லியன் ஆனமையால் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பொறுப்புக்களும் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதன் பிரகாரம் இந்த கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்ததுடன் அந்த மீதியும் கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையினால் பல்வேறு செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்த தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 2,900 மில்லியன் ஆகும்.

(இ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 315.5 மில்லியன் தொகையான நிலுவை மாதாந்த வாடகைக் கட்டணம், பயன்படுத்தல் கட்டணம் மற்றும் வாடகைக் கொள்வனவு தவணைப் பணத்திலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 91.9 மில்லியன் அதாவது 29 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதிவரை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அதிகாரசபைக்கு அறவிட வேண்டியிருந்த மாதாந்த வாடகை கடன்பட்டோர் மீதி ரூபா 55 மில்லியன் ஆகவும், வாடகை கொள்வனவு கடன் மீதி ரூபா 19 மில்லியன் ஆகவும் இருந்தன.. அவ்வாறே வாடகைப் பணம் செலுத்தாமையினால் வாடகை உடன்படிக்கை இரத்தான வாடிக்கையாளர்களிடமிருந்து 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 66 மில்லியன் மாதாந்த வாடகைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(உ) 03 நிறுவனங்களுக்கு நீண்ட கால வாடகை அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டிருந்த காணிகளிலிருந்து ஒரே தடவையில் கிடைக்க வேண்டிய ரூபா 119.14 மில்லியன் கூட்டுத்தொகையான வாடகை நீண்ட காலமாகக் கிடைத்திருக்கவில்லை. அதனால் ஒரு நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய தொகை 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல்வேறு மூலதன நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 4,163 மில்லியன் மீதியில் ரூபா 181 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வாடிக்கையாளரை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கோ அல்லது மீண்டும் வருமானமாகக் கணக்கீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவ்தானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் 5.2.6 ஆம் பிரிவு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.4 ஆம் பிரிவு	உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சைச் சபை 05 பேர்களை உள்ளடக்கியிருக்க வேண்டியிருந்தமை ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையின் சில ஆட்சேர்த்தல்களுக்காக நேர்முகப்பரீட்சை சபையில் 04 உத்தியோகத்தர்களும் 03 உத்தியோகத்தர்களுமாக பங்குபற்றியிருந்தனர்.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 380	அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது நியதிச் சட்ட அதிகார சபையினால் புதிய வங்கி நடைமுறைக் கணக்கொன்று திறக்கப்படும் போது திறைசேரியிலிருந்து அதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தேசிய அபிவிருத்தி வங்கியில் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்காக அதன் படி

அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ)	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்	
	(i) 383 ஆம் பிரிவு	கணக்குகளைத் தீர்த்து முடிவிடுதல் தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்குகளைத் தீர்த்து முடிவிடுதலை ஆரம்பிப்பதற்கு, முன்னைய இரண்டு வருடங்களில் கலைக்கப்பட்ட கம்பனியின் அல்லது தொடர்புடைய கம்பனியின் பணிப்பாளராக இருக்கும் ஒருவர் கலைப்பாளராக நியமிக்க முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தும் துணைக் கம்பனியின் பணிப்பாளரொருவர் கலைக்கப்படுகின்ற கம்பனியான பேலியாகொட வெயார் ஹவுஸ் தொகுதிக் கம்பனியின் கலைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.
	(ii) 330 ஆம் பிரிவு	ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்காக கணக்குகளைத் தீர்த்து முடிவிடுதல் இடம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் கணக்குகளைத் தீர்த்து முடிவிடுதலை ஆரம்பிக்கும் திகதி முதல் முதலாவது ஆண்டின் இறுதியின் போதும் மற்றும் அடுத்த ஒவ்வொரு ஆண்டின் இறுதியின் போதும் அல்லது வருட இறுதியிலிருந்து 03 மாதம் அல்லது பதிவாளரினால் அனுமதி வழங்கப்படக்கூடிய கால எல்லையில் அல்லது முன்னைய இலகுவான தினத்தில் கலைப்பாளரினால் கம்பனியின் பொதுச் சபைக் கூட்டம் கூட்டப்பட வேண்டிய போதிலும் மேற்கூறப்பட்ட நிறுவனத்தில் அந்த வகையில் நடாத்தப்பட வேண்டிய பொதுச் சபைக் கூட்டம் நடாத்தப்படவில்லை.
(ஈ)	1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1980 இன் 45 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம்	ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றைக் கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவுப் படி கவனத்திற் கொள்ளப்படாமையின் காரணமாக 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான பங்களிப்புப் பணம் மற்றும் மிகைக் கட்டணமாகச் செலுத்த வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 116,085,396 ஆகும்.

(உ) 2003 இன் 39 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) பொது வசதிகள் அதிகாரச் சட்டம்

வீடமைப்பு செயற்திட்டங்களில் வீட்டுத் தொகுதிக்காக கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையில் சான்றிதழ் பெறப்பட வேண்டிய போதிலும் நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் மூலம் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட அனேக வீட்டுத்தொகுதிகளுக்காக இந்தச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை

(i) 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை

சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் சிபாரிசு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியாலாளர்கள், பூகோள விஞ்ஞானிகள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், நகர வடிவமைப்பாளர்கள் மற்றும் அளவிடை ஆய்வாளர்கள் போன்ற தொழில்களுக்காக ரூபா 15,000 மாதாந்த தொழில்தகைமைப் படியொன்று 2014 யூலை 01 ஆந் திகதி முதல் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 171 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 27,930,000 தொகையும் முன்னைய ஆண்டிற்காக ரூபா 25,605,000 தொகையும் அதற்காகச் செலவிடப்பட்டிருந்தது.

(ii) 2016 மார்ச் 09 ஆந் திகதிய 05/2006 ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை

❖ மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாகவும் திறைசேரியின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ளாமலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அதிகாரசபையின் தலைவருக்கும் பணிப்பாளர் நாயகத்திற்கும் மாதத்திற்கு உரித்தான ரூபா 50,000 போக்குவரத்துப் படியை விஞ்சி முறையே மாதத்திற்கு ரூபா 80,000 மற்றும் ரூபா 70,000 வீதம் போக்குவரத்துப்படி செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது

		அதன் படி செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 960,000 ஆகும்.
		❖ அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடங்காத மற்றும் உரிய பதவியுயர்வு நடைமுறைகளுக்குப் புறம்பான பதவிகள் கையளிக்கப்பட்ட 04 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் இறுதிவரை வாகனபடியாக ரூபா 1,850,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.
(iii)	2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	❖ தனியார் வாகனமொன்றை தனது உத்தியோகபூர்வ பாவனைக்காப் பயன்படுத்தி படிகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரசபையின் 23 உத்தியோகத்தர்களுக்கு சாரதிகள் வழங்கப்பட்டு அந்த சாரதிகளின் சம்பளம் மற்றும் மேலதிக நேரடிப்படியாக ரூபா 30,186,085 தொகை மீளாய்வாண்டில் அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது.
(iv)	1994 யூன் 17 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 23/94	❖ அரசாங்கக் கூட்டுத்தாபனம் அல்லது நியதிச்சட்ட சபைகளில் நிரந்தர பதவிக்காக ஆட்சேர்க்கும் ஆகக்கூடிய வயதெல்லை 45 வருடங்களாக இருக்க வேண்டிய போதிலும், அதிகாரசபையிலிருந்து சேவையிலிருந்து சுயமாக விலகி ஓய்வூதியப் பணிக்கொடையும் பெற்றிருந்த 56 வருடங்களை விஞ்சிய ஒரு பெண் உத்தியோகத்தர் அதிகாரசபையின் பணிப்பாளர் (செயற்திட்ட முகாமையாளர்) பதவிக்கு மீண்டும் நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வாறே உரிய பதவிகள் ஆரம்ப சம்பளப்படி நிலையில் வைப்பதற்குப் பதிலாக அந்தப் பதவியின் பதினைந்தாவது சம்பளப்படி நிலையில் அமர்த்தி 06 மாதங்கள் கழிவதற்கு முன் பிரதி பணிப்பாளர் நாயகம் (ஆலோசனை) பதவிக்கு உயர்த்தப்பட்டிருந்தார்.

(v)	2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை	❖ அதிகாரசபைக்கான செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு பதவியுயர்வு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் பதவியின் புதிய சம்பளக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் அதனை அமுல்படுத்துவதற்கு தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. எனினும் உத்தேச பதவியணிக் கூட்டிணை பயன்படுத்தி முன்னைய அங்கீகாரத்தின் கீழ் அதிகாரசபையால் உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ❖ இந்த சுற்றறிக்கையின் பிரகாரம், பதவிகளுக்குரிய பதவியுயர்வுகளை வழங்கும் போது புள்ளி வழங்கும் திட்டம் தொடர்பாக உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்ததும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(எ)	அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை	
(i)	2001 சனவரி 26 ஆந் திகதிய PF/PE 12 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மற்றும் சபைகளில் கணக்குகள் மற்றும் வங்கி நடவடிக்கைகள் அரச வங்கிகளிலிருந்து மாத்திரம் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை மீறும் வகையில் தேசிய அபிவிருத்தி வங்கியான தனியார் வங்கியில் கணக்குகள் திறக்கப்பட்டு வீடுகளை விற்பனை செய்வதற்காக தவணை அடிப்படையில் பெறவேண்டிய பணத்தை வைப்புச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii)	2016 சனவரி 08 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	மதியுரையாளர்களைச் சேர்க்கும் போது வரிசை அமைச்சின் அமைச்சர் ஊடாக அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும் அவ்வாறான அங்கீகாரமின்றி 12 மதியுரையாளர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 9,496,252 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் சில மதியுரையாளர்கள் அமைச்சின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே சேர்க்கப்பட்ட மதியுரையாளர்களின் செயலாற்றல் தொடர்பான அறிக்கையும் காணப்படாதிருந்ததுடன் சில மதியுரையாளர்களின் சேவைக்காலம் வருடத்திற்கு வருடம் நீடிக்கப்பட்டிருந்தது.
(iii)	2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	
	❖ 4.2.6 ஆம் பந்தி	அதிகாரசபையின் காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கை காலாண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை.
	❖ 8.2.3 ஆம் பிரிவு	துணைக்கம்பனியாக அதிகாரசபையால் 2014 நவம்பர் 21 ஆந் திகதி தாபிக்கப்பட்ட Urban – Investment & Real State தனியார் கம்பனி, Urban – Investment & Hotel Development கம்பனி, Orchard Urban Housing Development கம்பனி, Waters Edge Hotel Develeopment கம்பனி என்பவற்றைத் தாபிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.
	❖ 9.2(ஈ) பிரிவு	அதிகாரசபையின் பதவியணியின் ஒட்டு மொத்தத்திற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

❖ 9.14 ஆம் பிரிவு	அதிகாரசபையினால் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான செயல் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அற்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறில்லையாயின் மனிதவள முகாமைத்துவத்திற்காக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(iv) நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் 1997 சனவரி 24 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றிக்கை இலக்கம் 116 மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தி	பொது முயற்சிகளின் உத்தியோகத்தர்கள் அமைச்சின் அல்லது ஏனைய அரச நிறுவனங்களில் சேவைக்காக விடுவிக்கப்பட முடியாதிருந்தமை தீர்மானிக்கப்பட்டிருக்கும் போது அதிகாரசபையின் 29 ஊழியர்கள் ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 16 பேர்களுக்காக 2016 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா. 11,511,730 தொகையை மீளளிப்புச் செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.
(v) 2004 சனவரி 03 ஆந் திகதிய 01/2003 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	அதிகாரசபையால் வயது 60 வருடங்களை விஞ்சிய ஓய்வுபெற்ற 08 உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு நடவடிக்கைகளுக்காக பொதுத் திறைசேரியின் இணக்கப்பாடின்றி சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மாதாந்தம் ரூபா 27,000 முதல் ரூபா 85,000 இற்கிடையிலான பல்வேறு வீச்சின் கீழ் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.
(ஏ) 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 597/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் V ஆவது பட்டோலையின் 7 ஆம் பந்தி	அதிகாரசபையினால் சில வருடங்களுக்கு முன்னர் 1868 அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் அனுமதியற்ற மாற்றங்கள் செய்தல் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதியற்ற நிர்மாணங்களை சட்டரீதியாக்க முடியுமாயின், மேவுகை அங்கீகாரத்திற்கான கட்டணத்தையும், பயன்பாட்டை மாற்றுவதற்கான

		கட்டணத்தையும் அதிகாரசபையினால் அறவிட்டு அந்த நிர்மாணங்களை (சட்டரீதியாக்குவதற்கோ அல்லது அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஐ)	1987 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 8 ஆம் இலக்க மற்றும் 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் சுற்றறிக்கை	அபிவிருத்தியடைந்த அதிகாரப் பிரதேசமாக தீர்மானிக்கப்பட்ட பிரதேசங்களுக்குரிய சில உள்ளூராட்சி நிறுவனங்களினால் அதிகாரசபையில் சேவைக் கட்டணத்தை வைப்புச் செய்வதற்குரிய வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டிருக்கவில்லை.
(ஒ)	2016 சனவரி 29 ஆந் திகதி SEC 2016/02 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (வற்) திருத்தம் தொடர்பான சுற்றறிக்கை	2016 சனவரி 01 முதல் 2016 சனவரி 13 வரையான காலத்தில் 12.5 சதவீத பெறுமதிசேர் வரி (VAT) விகிதத்தின் கீழ் மூலதன நிரற்படுத்தப்பட்ட பொதுக் கம்பனியிலிருந்து மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 9,278,763 வரித் தொகை வரிசெலவுத்தாள் மூலம் மீண்டும் அக்கம்பனிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தொகுதியில் இலாபம் ரூபா 817 மில்லியன் மற்றும் அதிகாரசபையின் இலாபம் ரூபா 198 மில்லியன் ஆக இருந்தன. முன்னைய ஆண்டில் தொகுதியினதும் அதிகாரசபையினதும் இலாபம் மற்றும் நட்டம் முறையே ரூபா 320 மில்லியன் மற்றும் ரூபா 133 மில்லியன் ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தொகுதியினதும், அதிகாரசபையினதும் நிதி விளைவுகள் முறையே ரூபா 497 மில்லியன் மற்றும் ரூபா 331 மில்லியன் தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அதிகாரசபையினால் மூலதனமாக்கப்பட்ட தொகுதிக் கடன் வட்டிக் கிரயத்தை மீளளிப்பதற்காக மிகையாகப் பெறப்பட்ட ரூபா 1,053 மில்லியன் ஏனைய

வருமானங்களின் கீழ் இனங்காணுதல் மேற்கூறப்பட்ட நிதிவிளைவுகளின் அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டைத் தவிர ஏனைய ஆண்டுகளின் போது இலாபம் பெறப்பட்டிருந்தது. எனினும் நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் வருமான வரி என்பவற்றை மீளச் சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,425 மில்லியன் தொகையான அதிகாரசபையின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,927 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

3.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் அதிகாரசபையின் நடைமுறை விகிதம் 0.35:1 ஆக இருந்ததுடன் சிறந்த தொழிற்படு மூலதன முகாமைத்துவமொன்றைப் பேணிச் செல்வதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. எனினும், நடைமுறை விகிதத்தில் மாற்றமொன்று இல்லாத போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் முறையே ரூபா 2,777 மில்லியன் மற்றும் ரூபா 7,555 மில்லியன் வீதம் மீளாய்வாண்டின் போது அதிகரித்திருந்தது.

3.3 அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

கறாபிட்டிய நகர அபிவிருத்திக்காக கறாப்பிட்டிய நகர மத்தியில் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்து கையேற்கப்பட்ட 2 ஏக்கர் 32 பேர்ச் அளவான காணியில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக, அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு எதிராக இடைக்காலத்தடை கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்தது. இந்த நீதிமன்றக் கட்டளைக்காக போதியளவான விடயங்கள் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்து இடைக்காலத் தடை உத்தரவை அகற்றுவதற்கு 04 வருடங்களுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதிலும், போதியளவான நடவடிக்கைகள் அதிகாரசபையின் சட்டப் பிரிவின் மூலம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதிகாரசபையின் உரிமைகளுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

நகர அபிவிருத்திக்குரிய ஒன்றிணைந்த திட்டத்தைத் தயாரித்து அமுல்படுத்துதல், நகர அபிவிருத்திக்குரிய செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு கையேற்றல் மற்றும் நகர காணிகளை பயன்படுத்துதல் தொடர்பான கொள்கைகளைத் தயாரித்தல் என்பன அதிகாரசபையின் பிரதான பணிகளாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நகர அபிவிருத்திக்குரிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டில் செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையின் படி அதிகாரசபையினால் 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 3,252.9 மில்லியன் தொகையான 22 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட ரூபா 409 மில்லியன் தொகையான 04 செயற்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் வேலைபூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 8,704 மில்லியன் கிரயமான 15 செயற்திட்டங்களில் பௌதீக செயலாற்றல் 50 சதவீதத்திற்கு குறைவாக இருந்தது.

(ஈ) 1978 இல் 41 ஆம் இலக்க நகர சபை அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் 243 நகர அபிவிருத்தி வலயங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதில் 42 வலயங்களுக்கு மாத்திரமே அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது நீண்ட கால குத்தகை முறையின் கீழ் அபிவிருத்திக்காக இரண்டு தனியார் நிறுவனங்களுக்கும் மருதானை மற்றும்

ராஜகிரிய இல் அமைந்துள்ள 03 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவினை உடைய 02 காணிக்கூறுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கை விநியோகிக்கப்பட்ட திகதி வரையிலும் அந்தக் காணிக் கூறுகளால் இரண்டிற்காகவும் மேலும் கிடைக்க வேண்டிய ரூபா 1,998.7 மில்லியன் எஞ்சிய நீண்ட காலக் குத்தகைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 11 வீடமைப்பு செயற்திட்டங்களில் வீட்டு நலனாளிகளிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபைக்கு அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 93 மில்லியனாக இருந்ததுடன் அதிலும் சிசிர உயன மற்றும் மூவதொர உயன வீடமைப்பு செயற்திட்டங்களில் வீட்டு நலனாளிகளிடமிருந்தும் அறவிட வேண்டிய நிலுவை வாடகைப் பெறுமதி முறையே ரூபா 18 மில்லியன் ரூபா 38 மில்லியனாக இருந்தன.

(இ) பலாங்கொடை நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கடைகளில் 02 கடைகள் 18 வருடங்களுக்கு மேல் நிலுவையாகக் காணப்பட்ட பயன்பாட்டுக் கட்டணங்களின் பெறுமதி (fee for use) ரூபா 1,932,056 ஆக இருந்ததுடன் பஞ்சிகாவத்த வீதி செயற்திட்டத்தின் 16 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் ஒரு வாடகையாளரிடமிருந்து நிலுவையாகக் காணப்பட்ட பயன்பாட்டுக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 2,685,860 ஆக இருந்தது. அவ்வாறே கொழுமபு வெல்லவீதி செயற்திட்டத்தில் 03 கடைகளில் இருந்து 17 வருடங்களுக்கு மேல் நிலுவையாகக் காணப்பட்ட பயன்பாட்டுக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 2,687,787 ஆக இருந்த போதிலும் நிலுவைத் தவணைப்பணத்தை அறவிடல், உடன்படிக்கை உரித்தை இரத்துச் செய்தல் அல்லது அந்தக் கடைகளில் உரிமைத்துவத்தை அதிகாரசபைக்குக் கையேற்றல் போன்ற வழிமுறைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 06 குத்தகை செயற்திட்டங்களுக்குரிய பெறுமதி சேர் வரி [VAT] மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி [NBT] தவிர்த்து வரித் தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் குத்தகைப் பெறுமதியின் அடிப்பயில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 25.1 மில்லியன் மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 2.24 மில்லியன் என்பன 05 வருடங்கள் முதல் வாடகையாளரிடமிருந்து அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(உ) அரச ஊழியர் வீடமைப்பு செயற்திட்டத்தின் நாளாந்த முதலீட்டு செயற்பாட்டு நடவடிக்கைகள் சரியான மேற்பார்வையுடன் இடம் பெறாமையினால் சில தினங்களில் நடைமுறைக் கணக்கில் ரூபா 5 மில்லியனுக்கு மேற்பட்ட மீதியொன்று காணப்பட்டமையால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பெறக்கூடியதாக இருந்த நாளாந்த வட்டி வருமானங்களில் ஒரு பகுதி இழக்கப்பட்டிருந்தது.

(ஊ) அரசாங்க ஊழியர் வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளைக் கொள்வனவு செய்த அரச ஊழியர்களிடமிருந்து பங்குப் பணமாக அறவிடப்பட்ட தொகையிலிருந்து ரூபா 1490.66 மில்லியன் தொகை உயர் வட்டி விகிதமொன்று கிடைக்கின்ற நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்வதற்குப் பதிலாக குறைந்த நலனொன்று கிடைக்கின்ற திறைசேரி உண்டியல்களில் மீள்முதலீட்டிற்காக பயன்படுத்தியதன் காரணமாக கிடைக்கக்கூடியதாக இருந்த உயர் வட்டி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. திறைசேரி மீள் முதலீடுகளில் பயன்படுத்துவதனை விட நிலையான வைப்புக்களில் ஈடுபடுத்தியிருக்குமாயின் வட்டி வீதம் 1 சதவீதத்தால் அதிகரிக்கும் போது வருடமொன்று காலத்தில் உரித்தற்றுப் போன வட்டி வருமானம் ரூபா 14.9 மில்லியன் அளவில் இருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

(எ) அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்ற வாடகை மற்றும் குத்தகை அடிப்படையில் வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கொழும்பு மத்திய உயர் சந்தைத் தொகுதி, கழம்பு கோல்ட் சென்டர், நடைபாதை சந்தைத் தொகுதி மற்றும் பொரளை பேமன் பார்க் சந்தைத்தொகுதி போன்ற செயற்திட்டங்கள், திட்டமிடல் நலிவுகள் மற்றும் அந்த சந்தைத் தொகுதிக்காக போதியளவான நுகர்வோர்கள் வருகை தராமை போன்ற காரணங்களினால் தோல்வியடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி அளவில் 204 கடைகள் மூடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டங்களை மீள செயற்படுத்துவதற்கும் மற்றும் அந்தச் தொகுதிகள் தொடர்பாக விரிவான விளம்பரம் ஒன்றை வழங்குவதற்கான போதியளவான நடவடிக்கைகள் அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நாவின்னப் பிரதேசத்தில் விளையாட்டுத் தொகுதி ஒன்றை நிர்தாணிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின் போது கைப்பற்றப்பட்ட 158 பேர்ச் காணிக்கு ஈடாகும் வகையில் அதிகாரசபையினால் கையேற்கப்பட்டிருந்த மாலபேயில் அமைந்துள்ள 296 பேர்ச் காணி நாவின்னவில் அமைந்துள்ள காணி உரித்துக் கம்பனிக்கு

வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தது. எனினும் கையேற்கப்பட்ட காணிக்காக பிரதான மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டு அறிக்கை பெறப்படாமல் ஈடுசெய்யப்பட்ட நாவின்னயில் அமைந்துள்ள காணியின் உரிமையாளருக்கு ரூபா 55 மில்லியன் தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் வட்டியாக செலுத்த வேண்டிய ரூபா 34.41 மில்லியனில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 5 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் அதிகாரசபையினால் வீட்டு நலனாளிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள வீடுகளில் இருந்து உரிய கட்டணம் அறவிடப்படாமையின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்படாது காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 104,209,943 ஆகும்.

(ஒ) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் துணைக் கம்பனியாக 2014 நவம்பர் 21 ஆந் திகதி உருவாக்கப்பட்ட Urban Investment & Real Estate தனியார் கம்பனி, Urban Investment & Hotel Development கம்பனி, Orchard Urban Housing Development கம்பனி மற்றும் Waters Edge Hotel Development கம்பனி தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் மேற்கூறப்பட்ட கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270(ஆ) பிரிவின் பிரகாரம் வருடமொன்று கடந்தவுடன் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தின் மூலம் மூடிவிடும் நிலைமையின் கீழ் காணப்பட்ட போதும் அது தொடர்பாக பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருக்கவில்லை.

(ஒ) (i) I ஆவது பகுதி மருதானை செயற்திட்டத்தின் 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 4,073,344 நிலுவை வாடகை மீதியொன்றுடன் வாடகையாளரிடமிருந்து வாடகை உரித்தை இரத்துச் செய்வதற்காக பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த உரித்தை இரத்துச் செய்வதற்கோ அல்லது கணனி கணக்கு

முறைமையின் மூலம் மாதாந்த தவணை கணக்கு வைத்தல்களை தவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒள) 2012 சனவரி 30 ஆந் திகதியின் பின்னர் தம்புள்ள சந்தைத் தொகுதியின் பொறுப்புத் தன்மை, ரங்கிரி தம்புலு விகாரைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், விகாராதிபதி தேரரினால் அந்தப் பொறுப்பளித்தன்மை கையேற்பதற்கு விருப்பமின்மையின் காரணமாக அந்தக் கையளித்தல் தற்போது அமுல்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. கடை உரிமையாளர்கள் தொடர்சியாக வாடகை செலுத்தாது புறக்கணித்தமையினால் தேவையான பிரகாரம் உடன்படிக்கை இரத்துச்செய்து மேற்கூறப்பட்ட நிலையங்களின் உரித்தை அதிகாரசபைக்குப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் ஏனைய முதலீட்டு செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) குணசிங்கபுர வணிக செயற்திட்டத்தின் ஒரு கடை உரிமையாளர் மரணமடைந்திருந்ததுடன் 16 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 12,639,906 நிலுவை வாடகை அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டில் இறுதியளவில் அந்தக் கடையின் உரிமையாளரின் பெயரில் மாதாந்த வாடகை வருமானம், கணனிக் கணக்குகள் முறைமையின் மூலம் இனங்காணப்பட்டிருந்த போதும் அந்த வாடகை வருமானத்தை கணக்கீடு செய்வதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்தக் கடையை மீளக் கைப்பற்றிக்கொள்வதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(கா) 1983 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட தலவத்துகொட தஹஅட்டலங்க மற்றும் தொலஸ்லங்க வயலின் (ஆரம்ப வரைபட நிலக்கூறு 5516 என்ற வரைபடத்தில் கூறு இலக்கம் 21 இல் காண்பிக்கப்படும் நிலப்பகுதி) 01 ஏக்கர் 29.7 பேர்ச் (189.7 பேர்ச்) அளவொன்று அருகில் இருக்கின்ற குடியிருப்பாளரினால் அனுமதியற்ற வகையில் கைப்பற்றப்பட்டிருந்த போதிலும் அந்த நிலக்கூறை மீண்டும் அதிகாரசபைக்கு கையேற்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) அதிகார சபையினால் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட ERP (Enterprise Resource Planning) செயற்பாடுகளை முன்கொண்டு வராமல் கணக்கீட்டு கணனி மென் பொருளொன்றை ஸ்தாபிப்பதற்கும், பராமரிப்பதற்குமாக தனியார்

நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையான ரூபா 8,300,000 இலிருந்து ரூபா 4,150,000 தொகை மீளாய்வாண்டின் இறுதியளவில் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கை செய்யப்பட்ட 120 நாள் ஒப்பந்தக் காலத்தில் கணக்கீட்டு கணனி மென் பொருள் (Customized Accounting Software Package) ஸ்தாபிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு இது வரையில் 1½ வருடங்களுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதிலும் அந்த மென்பொருளை உரிய பிரகாரம் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்திற்கான நிதி மதிப்பீடு மற்றும் அமைச்சரவை வழங்கிய ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளின் பிரகாரம் விடுவிக்கப்பட்ட காணிகள் முதலீட்டு செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தி நிதியம் கண்டறிய வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் விடுவிக்கப்பட்ட எந்த ஒரு காணியும் அவ்வாறான வருமானம் உழைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் வியாபார திட்டங்கள் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

2012 யூலை 31 இல் நடைபெற்ற விஷேட பொதுக்கூட்டத்தின் போது பேலியாகொட வெயார் ஹவுஸ் கம்லெக்ஸ் லிமிடெட் கம்பனி அத்திகதி முதல் செயற்படும் வகையில் சுயமாகவே கணக்குகளைத் தீர்த்து மூட வேண்டியதாக விஷேட முன் மொழிவொன்று அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் கம்பனியைக் கலைப்பதற்கோ அல்லது முன்மொழிவினை இரத்துச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமான கோட்டை டீ.ஆர்.விஜயவர்தன மாவத்தை எல்லையில் அமைந்துள்ள 2 ஏக்கர் 2 ரூட் 21.4 பேர்ச் அளவான காணி ஒன்றை அபிவிருத்தி செய்வதற்காக தனியார் கம்பனி ஒன்றுக்கு நீண்டகால

குத்தகை அடிப்படையில் கீழ் 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. தலைவரின் 2016 நவம்பர் 17 ஆந் திகதிய இலக்கமின்றிய கடிதத்தின் மூலம் அரசாங்க மதிப்பீட்டாளரின் பெறுமதியை விட ரூபா 330 மில்லியன் குறைவாக இந்தக் காணியை குத்தகைக்கு வழங்குவதற்காக இணக்கப்பாடு தெரிவித்தமையின் காரணமாக இந்தக் காணியை அகற்றும் போது ரூபா 330 மிலல்லியன் நட்டமொன்றை அதிகாரசபைக்கு ஏற்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகங்களில் சகல உத்தியோகத்தர்களையும் மற்றும் ஏனைய பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய 50 உத்தியோகத்தர்களுக்கு அந்த உத்தியோகத்தாவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 1/3 ஆன பிரகாரம் விஷேட படி ஒன்று திறைசேரி அங்கீகாரமின்றி முன்னைய சில வருடங்களில் தொடர்ச்சியாக செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 2,143,394 ஆகும். அவ்வாறு விஷேட படி செலுத்துவதற்காக உத்தியோகத்தர்களை தெரிவு செய்த அடிப்படை கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் துணைக்கம்பனியான நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக் கம்பனியினால் ரூபா 17,500,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட டொயோட்டா லேன்ட்குரூசர் வகையின் ஜீப் வண்டி கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் அதிகாரசபையின் தலைவரினால் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்தின் பராமரிப்புச் செலவினங்கள் யாவும் மீளாய்வாண்டின் போதும் துணைக்கம்பனியினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டமொன்றின் செயலமர்விற்காக செலவிடப்பட்ட ரூபா 1,195,046 தொகையான சிற்றுண்டிச்சாலை மற்றும் மண்டபக் கட்டணம் அதிகார சபையால் செலுத்தப்பட்டிருந்தது.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமான பம்பலப்பிட்டிய புகையிரத நிலைய வீதியில் ஒரு ஏக்கரும் 23.1 பேர்ச் பரப்பளவுடைய காணியில் 40 மாடிகளையுடைய டவர் கட்டிடம் (போடியம்) நிர்மாணிப்பதற்காக 1993 ஆம் ஆண்டின் இறுதியில் அதிகாரசபை ரூபா 92 மில்லியனையும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ரூபா 120 மில்லியனையும் செலவிட்டிருந்தன. 1993 ஆம் ஆண்டின் இறுதியில் கட்டிடத்தின் 3 மாடிகளில் (43,000 சதுர அடியைக் கொண்ட) கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கட்டிடத்தின் குறைபாடுகளான அபிவிருத்தி செய்தல், பராமரித்தல் மற்றும் வெளிக் காணிகளைக் கைப்பற்றி அபிவிருத்தி .செய்தல் போன்றவைகளுக்கு வ/ப ஒஷன் விச் டிவலப்மன்ட் தனியார் கம்பனி என்ற பெயரில் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் கூட்டுமுயற்சி வியாபாரமொன்றை ஆரம்பித்திருந்தது. அந்தக் தனியார் கம்பனியினால் கட்டிடத்தின் கடைகளை வாடகைக்கு வழங்கி வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் 1993 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையும் அதிகாரசபைக்கு எந்த ஒரு இலாபமும் கிடைத்திருக்கவில்லை. நீண்டகாலமாக குத்தகை அறவிடப்பட்டது வருடமொன்றிற்கு ரூபா 100 என்ற பெயரளவிலான வாடகையின் கீழ் 99 வருடங்களுக்கு குத்தகை அந்த ஆதனம் அத்தனியார் கம்பனிக்கு கையளிக்கப்பட்டமையினால் அதிகாரசபை இட்ட முதலீட்டிற்கு எந்தவொரு பிரதி பலனும் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபை தொடர்பான பணியல்லாத விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகரமொன்றை நிர்மாணிக்கும் ஆரம்ப விழாவிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 6,642,865 செலவினமொன்று அதிகாரசபையினால் செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 5,512,000 தொகை விழாவினை ஒழுங்கமைக்கும் நிறுவனத்திற்கும் மற்றும் ரூபா 828,894 தொகை அதற்கான பத்திரிகை அறிவித்தல்களை பிரசுரிப்பதற்காகவும் செலவிடப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையினால் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 500,000 தொகை மற்றும் கொழும்பு காணி மற்றும் அபிவிருத்திக் கம்பனியில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 36,309,841 தொகை என்பவற்றுக்காக மீளாய்வாண்டில் எவ்வித இலாபபங்கும் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) கொம்பனித்தெரு மீள் அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய காணியில் குடியிருந்து வரும் குடும்பங்களுக்காக மாடி வீட்டு அலகுகளை நிர்மாணிக்கும் பணிகள் 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட இருந்த போதிலும் காணி அபிவிருத்தியாளரினால் நிர்மாண நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்த ஒப்பந்தக்காரரின் தாமதத்தின் அடிப்படையில் உரிய செயற்திட்டம் தாமதம் அடைந்திருந்தது. அதன் காரணமாக 2016 ஆம் ஆண்டில் உரிய நிர்மாணப் பணிகளின் மதியுரை நிறுவனத்திற்கு ரூபா 5,496,000 தொகையான மேலதிக மதியுரைக் கட்டணமும் காணியில் குடியிருந்தவர்களுக்கான மாடி வீட்டு அலகுகளை வழங்கும் வரை மாதாந்த வாடகை ரூபா 61,198,000 ஆக கூட்டு மொத்தமாக ரூபா 66,694,000 தொகை அதிகாரசபையில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணி அபிவிருத்திக் கம்பனியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அத் தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமல் அதிகார சபையினால் Enterprise Resource Planning (ERP) செயல்முறை ஒன்றை ஸ்தாபிப்பதற்காக தேவையான மதியுரை சார்ந்த சேவைகளை வழங்குவதற்கு நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 195.7 மில்லியனாகும். அதில் மதியுரை சார்ந்த செயற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கான உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூபா 5,705,000 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதி அளவில் ரூபா 3,803,995 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் உரிய நடைமுறைகள் ஸ்தாபிக்கப்பட்டு அமுல்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

4.6 இனங்காணப்பட்ட நட்டம்

ஏனைய செயற்திட்டங்களுக்கு ஈடுபடுத்தும் நோக்கில் 2011 ஆம் ஆண்டில் சாமர்ஸ் கிரைனரிஸ் செயற்திட்டத்தின் கடைகள் உடைத்து அகற்றப்பட்டிருந்ததுடன் அக்கடைகளில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி அளவில் அறவிடவேண்டிய நிலுவை வாடகைத் தொகை ரூபா 13,870,076 ஆகும். எனினும் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்தக் காணியில் புதிய செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் உரிய சுற்றாடலில் வேறு எந்த முதலீட்டுப் பணிகளுக்கும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத 30 பதவிகளுக்காக 57 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் கடந்த சில வருடங்கள் முதல் அதிகாரசபையில் சிரேஷ்ட, நிறைவேற்று மற்றும் மத்திய மட்டங்களில் 22 முகாமைத்துவப் பதவிகளுக்கான 42 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் மற்றும் 8 பதவிகளுக்கான 13 உத்தியோகத்தர்களது மிகை என்பன காணப்பட்டமை அதிகாரசபையின் செயலாற்றல்களுக்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் துணைக் கம்பனியான நகர முதலீடு மற்றும் அபிவிருத்தி கம்பனியின் கீழ் சேவையாற்றுகின்ற 03 முகாமையாளர்களும் 04 கட்டிட வடிவமைப்பாளர்களும் அதிகாரசபையில் சேவைக்காக இரண்டாம் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு விடுவிக்கப்பட்ட ' உத்தியோகத்தர்களுக்காக துணைக் கம்பனியால் தொடர்ச்சியாக 03 வருடங்களுக்காக சம்பளம் மற்றும் படியாக ரூபா 7,046,465 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு கம்பனியின் நிரந்தர உத்தியோகத்தர்கள் அதிகாரசபையின் சேவைக்காக நியமிக்கப்படுவதனால் கம்பனியின் நடவடிக்கைகளும் சரியான முறையில் மேற்கொள்வதற்கு தடையாக இருக்கவில்லை என்பதை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

(இ) பதவிக்குரிய உத்தியோகத்தருக்கு காணப்பட வேண்டிய ஆகக்குறைந்த தகைமைகள் பூர்த்தி செய்யப்படாமலும் குறித்த பதவியுயர்வு நடைமுறைகளுக்கு புறம்பாகவும் பிரதிப் பணிப்பாளர் (காணி) பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு முறையற்ற வகையில் பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 05 பதவி வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை பதவியுயர்த்தும் போது விண்ணப்பங்கள் கோரி நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்துதல் போன்ற முறையான செயல்நடவடிக்கைகள் பின்பற்றப்படாமல் பணிப்பாளர் (திட்டமிடல் வடகிழக்கு) பணிப்பாளர் (அபிவிருத்தித் திட்டமிடல்) பணிப்பாளர் (காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்) மற்றும் பணிப்பாளர் (பூகோள தகவல் முறைமை) போன்ற பதவிகளுக்காக பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன.

(உ) 2003 யூன் 23 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை PED/12 ஆம் இலக்க 9.10 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரமின்றி அப்பிரிவின் தலைவர் என்ற பெயரில் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டு அந்த பதவிகளுக்காக 05 உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் அதில் பதவி ஏற்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட வேண்டிய முறையான செயல்நடவடிக்கைகள் எதுவும் பின்பற்றப்படாது இருந்ததுடன் உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய முறையான செயற்பாடுகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பணிப்பாளர் பதவிக்காக பதவியுயர்வு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த பதவியில் சேவை அனுபவம் 05 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக குறைந்த பதவியில் ஆகக் குறைந்த சேவை அனுபவம் 7 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையிலும் முறையான அங்கீகாரம் .பெறப்படாமல் மாற்றம் செய்யப்பட்டு 7 உத்தியோகத்தர்களுக்காக பதவிப்புயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. அதிலும் ஒரு பிரதிப் பணிப்பாளர் பதவிக்காக கீழ்ப்பதவியில் ஆகக்குறைந்த சேவை அனுபவம் 07 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரை சேவைமூப்பு அடிப்படையில் குறைக்கப்பட்டு 03 வருட சேவை அனுபவம் மாத்திரம் உள்ள உத்தியோகத்தருக்காக பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது.

(எ) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்திற்காக ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் நடவடிக்கைகளைச் செய்வதற்கு தேவையான ஊழியர் எண்ணிக்கைக்காக மேலதிக ஊழியர் எண்ணிக்கை தேவையானது எனக் காண்பித்து 217 உத்தியோகத்தர்களையுடைய பதவியணி ஒன்றுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதும் ஒப்பந்த அடிப்படையில் 60 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ii) செயற்திட்டத்தின் நடவடிக்கைக்காக அதிகாரசபையில் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 19 உத்தியோகத்தவஷர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு நியமிக்கும் போது மேலதிக செயற்திட்ட பணிப்பாளர் பதவி, 06 பிரதி செயற்திட்ட பணிப்பாளர் பதவி, 04 உதவி செயற்திட்ட பணிப்பாளர் பதவி மற்றும் 04 செயற்திட்ட முகாமையாளர் பதவி என செயற்திட்டத்திற்காக அசாதாரணமான உயர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதன் காரணமாக செயற்திட்டத்தின் பதவியணியினரின் கிரயம் அதிகரித்திருந்தது.

(iii) செயற்திட்டத்தின் பிரதி செயற்திட்டப் பணிப்பாளர் (செயற்திட்ட முகாமையாளர் மற்றும் ஒப்பந்த நிர்வாகம்) பதவிக்கு விண்ணப்பதாரர் ஒருவரை தெரிவு செய்யும் போது நேர்முகப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளி தெரிவு செய்யப்படாதிருந்ததுடன் இரண்டாவதாக புள்ளியைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு பதவி வழங்கப்பட்டிருந்தது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 2 ஆந் திகதிய பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மீளாய்வாண்டின் போதும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான கூட்டிணைந்த திட்டத்தில் அடங்கியுள்ள மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட வேண்டிய உபாய வழிகள், மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டம் காலரீதியில் மீளாய்வு செய்யப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் ஒவ்வொரு பிரிவினதும் இலக்கிடப்பட்ட பணிகளுக்குரிய உள்ளபடியான தரவுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்தப் பிரிவுகளின் செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

5.3 உள்ளகக் கணக்காய்வு

காணப்படுகின்ற சில உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளும் நலிவான நிலையில் காணப்படுவதாக அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை அமுல்படுத்துவதற்கான வழிகள் நிறுவனத்தில் காணப்பட்டாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதிகாரசபையின் பணிப்பொறுப்புக்களை விரிவுபடுத்தும் நோக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பதவியணியை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிப்பொறுப்புக்களில் அதிகாரசபையின் செயலாற்றல் கணக்காய்விற்கு போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

5.4 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்களை தீர்த்து வைப்பதற்கு அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் போதியளவான கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் சில அவதானிப்புகள் தொடர்பில் பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(அ) வோட்டர்ஸ் ஏஜ் கம்பனி அமைந்துள்ள காணியில் 7.35 ஏக்கர் அளவு 128 அனுமதியற்ற கைப்பற்றல் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த அனுமதியற்ற நபர்களை அகற்றுவதற்காக முறையான நடவடிக்கைகளை அதிகாரசபை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கண்டி மாநகரசபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி வலய திட்டமிடலின் இயற்கையான பாதுகாப்பு வலயத்தின் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்த போதும் அதிகாரசபையால் கட்டிட நிர்மாணத்திற்காக ஆரம்ப விடுவிப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையினால் கொட்டுவே கொட, ராஜகிரிய, பெரேரா மாவத்தையில் ஆரம்ப வரைபட இல. கொ 6399 ஆம் இலக்க நிலவரைபடத்தில் 6,7 மற்றும் 8 ஆம் இலக்க காணிக் கூறுகள் முறையற்ற வகையில் நீண்ட காலரீதியில் குத்தகை அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்காக தனியார் நிறுவனத்திற்கு

வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காணிக் கையளிப்பின் போது முன்னாள் பணிப்பாளர் (காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்) இனால் சாதாரண நடைமுறைகளுக்குப் புறம்பாக முறையற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) கண்டி மாநகர அதிகார பிரதேசத்திற்குரிய வெளியிடப்பட்ட அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் இடமளிக்கக்கூடிய கட்டின் விகிதம் 2.5 ஆக இருக்க வேண்டிய போதிலும் அதிகாரசபையின் மத்திய மாகாண கிளை மேற்கூறப்பட்ட கட்டின் விகிதத்தை விஞ்சி இருந்த கட்டிடங்களுக்காகவும் விடுவிப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

(உ) அதிகாரசபையின் மத்திய மாகாண கிளையினால் நிராகரிக்கப்பட்ட கட்டிடங்களின் ஆரம்ப விடுவிப்பு விண்ணப்பங்களுக்காக ஆரம்ப திட்டமிடல் விடுவிப்பு சான்றிதழ் வழங்குவதற்கு மாகாண பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.

(ஊ) அதிகார சபைக்குரிய நந்தாராம வீடமைப்பு தொகுதிக்கு அடுத்துள்ள இஹல சந்தையின் பெறுமதியுள்ள 5.32 பேர்ச் வெற்றிடக் காணி அனுமதியற்ற வகையில் வெளித்தரப்பினர் ஒருவர் கைப்பற்றி இருந்த போதிலும் அதனை விடுத்துக் கொள்வதற்கு அதிகாரசபை எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(எ) கொழும்பு மற்றும் பதுளை மாவட்டங்களுக்குரிய பிரதேச செயலாளர்களினால் அதிகாரசபையின் மேற்பார்வை கையேற்கப்பட்ட 11.44 ஏக்கர் காணியை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2002 ஆம் ஆண்டின் போது ரூபா 16 மில்லியன் செலவில் புறக்கோட்டை சோன்டர்ஸ் பிரதேசத்தில் நடைபாதை வியாபாரிகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட மாற்று விற்பனை நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நீதிமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் 2008 ஆம் ஆண்டின் போது அதிகார சபைக்குக் கையளிக்கப்பட்ட வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலுக்கு செலுத்துவதற்கு கட்டளை இடப்பட்ட ரூபா 406,483,000 தொகையிலிருந்து மேலும் ரூபா

261,483,000 தொகையைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஒ) 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் II ஆவது பகுதியில் 16(1) உ பிரிவின் பிரகாரம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு (USDA) ரூபா 207,331,767 தொகை அனுப்பி வைக்கப்படாது நகர அபிவிருத்தி அதிகார சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) கொழும்பு துரங்க தரங்க மைதானத்தை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 05 மில்லியனை விஞ்சிய ரூபா 40.64 மில்லியன் கூட்டுப்பெறுமதியான மூலதனப் பொருட்கள் மற்றும் ரூபா 72.36 மில்லியன் கூட்டுத்தொகையான ஏனைய செயற்திட்டங்களின் மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) வெள்ளவத்தை மயூரா பிரதேச வீடமைப்பு தொகுதியின் பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றுதல் மற்றும் உடைத்த பாகங்களை விற்பனை செய்வதற்காக இரண்டு ஒப்பந்தகாரர்களினால் முறையே ரூபா 12,200,240 மற்றும் 3,800,000 தொகைகளை நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு இரண்டு கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரர்களுக்கு அந்தப் பணிகள் கையளிக்கப்படாது அதிகாரசபையின் பணத்தில் ரூபா 6,296,440 தொகை செலவிட்டு அக்கட்டிடம் உடைத்து அகற்றப்பட்டு உடைத்த துண்டுகள் ரூபா 750,000 இற்கு விற்கப்பட்டமையின் காரணமாக அதிகாரசபைக்கு ரூபா 17,746,680 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(க) மாதிவல பிரதேசத்தில் அமைந்துள்ள ரூபா 85 மில்லியன் பெறுமதியான 103 பேர்ச் காணிக்காக உரிய பிரகாரம் எல்லை குறிப்பிட்டு பாதுகாப்பு வேலி அமைக்கப்படாமையின் காரணமாக வெளிநபர்களினால் காணியில் அனுமதியற்ற நிரந்தரக் கட்டிடங்களை நிர்மாணித்து நிரந்தர பயிர்களும் பயிரிட்டிருந்தனர்.

(கா) 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 229/2014 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் பேலியகொட வெயா ஹவுஸ் துணைக்கம்பனியின் வாகனங்களில் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பந்தம் கேள்வி கோரலின்றி (Unsolicited Proposal) கையளிக்கப்பட்டமை.

- நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் கைவிடப்பட்டமை.

- வங்கிப் பிணைகள், தரகு மற்றும் சட்ட சேவைக்காக ரூபா 222 மில்லியன் பயனற்றதாக செலவிடப்பட்டமை.

- 65 வீட்டு அலகுகளுக்காக ரூபா 2,098 மில்லியன் மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டமை, 13 ஒப்பந்த வேறுபாடுகளுக்காக ரூபா 1,066 மில்லியன் மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டமை, 39 வீட்டு அலகுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தை விட ரூபா 143 மில்லியன் மேலதிகமாக செலவிடப்பட்டமை.

- வாடகை உடன்படிக்கை இல்லாமையினால் அதிகாரசபை அறவிடவேண்டிய வாடகைப் பணத்தை குறித்த பிரகாரம் அறவிடுவதற்கு முடியாதிருந்தமை.

- கையளிக்கப்பட்டுள்ள 5203 மாடி வீடுகளை பராமரிக்கும் நடவடிக்கைகளுக்காக வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்படாமை.

- கொழும்பு மாநகர சபைக்கு நிர்மாணக் கிரயத்தை விட குறைவாக 157 வீட்டு அலகுகள் கையளிக்கப்பட்டமையால் ரூபா 137 மில்லியன் நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தமை மற்றும் புகையிரத விடுதிகளில் குடியிருந்து வரும் புகையிரத ஊழியர்களுக்காக நிரந்தர அடிப்படையில் 205 வீடுகள் வழங்கப்பட்டமையினால் புதிய ஊழியர்களுக்கு வீடுகளை வழங்க முடியாதிருந்தமை.

(கி) நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களில் இணங்காத செயற்திட்டமான கொழும்பு நகரத்தின் குடிசைகளில் குடியிருப்பவர்களுக்கு 68,000 நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய வேலைத் திட்டத்திற்கு நிதியினை வழங்கும் நோக்கில் அதிகாரசபையினால் 2010 ஒக்டோபர் மாதத்தின் போது ரூபா 10 பில்லியன் பெறுமதியான 5 வருடங்களில் விடுவிக்கக் கூடிய தொகுதிக் கடன்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. எனினும் தொகுதிக்கடன் விநியோகிக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கமான கொழும்பு நகரத்திலுள்ள 142 ஏக்கர் காணியை அபிவிருத்தி செய்தல் மற்றும் வியாபாரத் திட்டங்களைத் (Business Plan) தயாரித்தல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் உத்தேச வீட்டு அலகுகள் 68,000 இல் 5,203 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு மக்களுக்கு உரித்து கையளிக்கப்பட்டிருந்தது.

(கீ) 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/09 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தக மானியின் ஏற்பாடுகளுக் முரணாக பொரலஸ்கமுவ அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பொருத்தமற்ற நிலக்கூறு ஒன்றில் கீழ் மாடி உள்ளடங்கலாக 05 மாடிகளையுடைய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு அதிகாரசபை அனுமதி வழங்கியிருந்தது.

(கு) மத்திய மாகாண வலயத்திற்குரிய 1126.12 சதுர மீற்றர் கட்டிடம் ஒன்றிற்காக ரூபா 6,081,048 சேவைக்கட்டணம் அறவிட வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு அறவிடப்படாமல் கட்டிடம் நிர்மாணிப்பதற்கான ஆரம்ப திட்டமிடல் விருவிப்புச் சான்றிதழ் அந்த மாகாணத்தின் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது.

(கூ) நகர புனர்வாழ்வு செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- ❖ 10 வீடமைப்புத் தொகுதிகளின் 24 ஏக்கர் அளவான காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.

- ❖ அரசாங்கப் பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு முரணான நிர்மாண ஒப்பந்தம் கையளித்தமை, ரூபா 20.8 பில்லியன் தொகையான நிர்மாண

5.5 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனுமதியற்ற நிர்மாணங்களைப் பரீட்சித்துக் பார்ப்பதற்காக காணப்படுகின்ற அதிகாரசபையின் அமுலாக்கல் பிரிவினால் காலரீதியில் புலனாய்வை மேற்கொண்டு அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்கண்டு அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டின் இறுதியில் நிர்மாணிக்கப்பட்ட 09 மாடிவீட்டு செயற்திட்டங்களின் கீழ் 4,937 வீடுகள் வீட்டு நலனாளிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வீடுகளின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வீட்டு நலனாளிகளை உள்ளடக்கிய முகாமைத்துவ கூட்டிணைவைத் தாபிப்பதற்கு கூட்டுஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கு முறையான அதிகாரம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் வேண்டப்படுகின்றது.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்	அவதானிப்புக்கள்
(அ) கணக்கீடு	(i) இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது ஏனைய உப பிரிவுகள் மற்றும் துணைக் கம்பனிகளின் கணக்குகளின் தகவல்கள் சரியாக ஒன்றிணைக்கப்படாமை மற்றும் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் சரியாக நாளது வரையாக்கப்படாமை.

		(ii)	ஒரு கணக்கிற்கான வரவு மற்றும் செலவு மீதிகளை உள்ளடக்கிய கணக்குகளின் அனேகமானவைகள் பரீட்சை மீதியில் உள்ளடக்கியிருந்தமை மற்றும் முன்னைய ஆண்டின் சீராக்கங்களின் அனேகமானவை பின்னர் மேற்கொள்ளப்பட்டமை.
		(iii)	கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் குறைபாடுகளின் காரணமாக கணக்காய்வாளரின் விடயப்பரப்பு வரையறுக்கப்பட்டமை.
(ஆ)	கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு	(i)	கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் கடன்பட்டோர் மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக பிரச்சினைகள் காணப்பட்டமை.
		(ii)	கடன்பட்டோர் கணக்குகளை நாளது வரையாக்குதல் தாமதமடைந்தமை மற்றும் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாமை.
		(iii)	கடன்பட்டோரிடமிருந்து கடனை அறவிடுவதற்கு முறையாக செயல்நடவடிக்கைகள் பின்பற்றப்படாமை.
(இ)	பாதீட்டுக் கட்டுப்பாடு		சரியான மதிப்பீடு தயாரிக்கப்படாமை, செலவினங்களை செய்தல் பாதீட்டுக் கட்டுப்பாட்டின்றி மேற்கொள்ளப்பட்டமையால் போதியளவான முரண்கள் காணப்பட்டமை.

(ஈ)	சொத்துக்கள் முகாமைத்துவம்	குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை, சொத்துக்கள் சரியாக பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை, மெய்மையாய்வு அறிக்கை முறையாக பேணிச் செல்லப்படாமை, காணிப்பதிவேடு காணப்படாமை.
(உ)	பெறுகை நடைமுறைகள்	போட்டியாளர் கேள்வி கோராது புறக்கணிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை.
(ஊ)	மனிதவள முகாமைத்துவம்	பதவியுயர்வு மற்றும் ஆட்சேர்த்தல்கள் உரிய நடைமுறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படாமை மற்றும் வெற்றிடம் காணப்படுகின்ற பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வு அறிக்கை மீதான தலைவரின் விளக்கம்

2.2 நிதிக்கூற்றுகள் மீதான விளக்கம் - கூட்டு

(அ) அவதானிப்பு

2016 ஆண்டிற்குரிய கணக்குகளைத் தயாரிக்கும்போது அர்பன் இன்வெஸ்ட்மன்ட் டிவலப்மன்ட் (பிறைவேற்) லிமிற்றட் கம்பனியினதும், வோட்டர்ஸ் எட்ஜ் லிமிற்றட் கம்பனியினதும், லங்கா ரெஸ்ட்ஹவுஸ் (பிறைவேற்) லிமிற்றட் கம்பனியினதும், பேலியகொடை வெயார்ஹவுஸ் தொகுதி கம்பனியினதும் நிதிக்கூற்றுகள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லையாதலால், அதன் வரைவு நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் அதிகாரசபையின் வரைவு இணைந்த நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், அர்பன் இன்வெஸ்ட்மன்ட் டிவலப்மன்ட் (பிறைவேற்) லிமிற்றட் கம்பனியினதும், லங்கா ரெஸ்ட்ஹவுஸ் (பிறைவேற்) லிமிற்றட் கம்பனியினதும், வோட்டர்ஸ் எட்ஜ் லிமிற்றட் கம்பனியினதும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுகள் இந்த அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து அவை 2017.07.20 ஆந் திகதி அரசாங்க கணக்காய்வுப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அவதானிப்பு

நீதிமன்ற உத்தரவின் பேரில் இது அன்றைய ஏசியா பசுபிக் கோல்வ்கோர்ஸ் கம்பனி நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையேற்கப்பட்டதுடன், அதன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனம் நிறுவப்பட்டது. குறித்த கம்பனி நிறுவப்பட்ட வேளையில் ரூ.10 பெறுமதியான ஒரு பங்கு மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தமையால், குறித்த பெறுமானம் சரியான முறையில் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. பின்னர், நகர அபிவிருத்தி அதிகாரசபை வசமுள்ள அதன் கட்டிடங்களை வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனத்திற்கு உரிமைமாற்றம் செய்தமைக்காக அதிகாரசபைக்குக் கிடைக்கவேண்டியதான 642.5 மில்லியன் ரூபா தொகையும் அதன் திருத்தவேலைகளுக்கு வழங்கப்பட்ட 200 மி.ரூ. தொகையும் சார்பாக பங்குகளை விநியோகிக்குமாறு இந்த அதிகாரசபையின் முகாமைத்துவ சபையின் அனுமதிப்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, 842.5 மி.ரூ. தொகைக்காக தற்காலிக பங்கு விநியோக கணக்கொன்றின் ஊடாக வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனத்தினதும், நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனத்தின் மீள்மதிப்பீடுசெய்யப்பட்ட பெறுமானங்கள், சரியான முறையில் துணைக் கம்பனியின் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான விளக்கம் - அதிகாரசபை

2.3.1 கணக்காய்வு நோக்கெல்லை மட்டுப்பாடுகள்

(அ) அவதானிப்பு

இக்கூற்றுடன் உடன்பட முடியாது. அதற்குரிய காரணம், அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் இரட்டைப் பதிவுமுறையைப் பிரயோகித்து முன்பு காணப்பட்ட பழைய கணினி கணக்கு முறைமையினுள் பதியப்பட்டுள்ளதுடன், இன்றளவில் புதிய கணக்கு முறைமையைப் பிரயோகித்து இச்செயன்முறை மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலுக்கும் உரிய இரட்டைப் பதிவு இடம்பெற்றுள்ள விதம், குறித்த கணக்குப் பதிவுகளை மேற்கொள்வதற்கு உபயோகிக்கும் முக்கிய ஆவணங்களின் இலக்கத்தை (உறுதிச்சீட்டு இலக்கம், பற்றுச்சீட்டு இலக்கம், பேரேட்டுக்கு குறிப்பு இலக்கம்) உபயோகித்து கணினி முறைமையின் மூலம் (Retrieve) ஆராயலாம்.

(ஆ) அவதானிப்பு

மேற்படி பதில் 1க்கு மேலதிகமாக, காணப்பட்ட பழைய கணக்கீட்டு முறைமையில் கடன்படுநர், கடன்கொடுநர் கணக்குகளுக்கு ஒரே கணக்கிற்குப் பதிலாக 02 கணக்கு இலக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது, அன்று காணப்பட்ட கணினி முறைமையிலிருந்த தேவைப்பாட்டிற்காகவே என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இவ்வாறு 02 கணக்கு இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டபோதும், இரட்டைப் பதிவுச் சட்டத்தின்படியே தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டலாம்.

புதிய கணக்கு முறைமையை அறிமுகம்செய்யும்போது இந்நிலை குறித்து கவனம் செலுத்தப்பட்டது. அதன்படி கடன்படுநர், கடன்கொடுநர் கணக்குகள் சார்பாக தற்போது பயன்படுத்தப்படும் கணக்கு இலக்க முறைக்குப் பதிலாக தனிக் கணக்கு இலக்கமொன்றைப் பயன்படுத்துவதன்மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை மேலும் அறியத் தருகின்றேன்.

(இ) அவதானிப்பு

இந்த அதிகாரசபை தொடக்கத்தில் பயன்படுத்திய கணக்குப்பதிதல் முறையின் பிரகாரம், அதன் கணினி செய்நிரல்களை (Computer Programmes) உருவாக்கும்போது கடன்படுநர், கடன்கொடுநர் கணக்குகளுக்குப் பதிலாக தெரிவுசெய்யப்பட்ட கணக்கு இலக்க வீச்சினுள் 02 கணக்குகளைப் பயன்படுத்தும் தேவை ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிலுவை ஆய்வை உருவாக்கும்போது அவ்வாறு 02 கணக்கு இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், குறித்த ஒரு கணக்கு காலப்பகுதியின் இறுதியில் அவ்விரு கணக்குகளிலும் உள்ள நிலுவைகள் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போது பயன்படுத்தப்பட்டுள்ளன.

புதிய கணினிக் கணக்கு முறைமையை அறிமுகம் செய்யும்போது இவ்வாறு 02 கணக்கு இலக்கங்களைப் பயன்படுத்துவது சம்பந்தமாக நிலவிய சிக்கலான தன்மை குறித்து கவனம் செலுத்தப்பட்டது என்பதுடன், அத்தகைய சிக்கலான தன்மையைக் குறைக்கின்றவாறு புதிய கணினி செய்நிரல் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) அவதானிப்பு

பொறுப்புக் கணக்குகளுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளைப் பதிதல், கணக்குகளிலுள்ள தவறுகளைத் திருத்துவதற்காக பயன்படும் பேரேட்டுக் குறிப்புகள் குறித்த கணக்கின் பற்று மீதிகளாக பதிவாகலாம். அவை கணக்கீட்டுச் செயன்முறையின்போது பயன்படுத்தப்படும் கணக்குப் பதிவுகளாகும்.

(உ) அவதானிப்பு

அதிகாரசபையினால் இவ்வாறு பயன்படுத்தப்படுகின்ற கணக்கு முறைமை 1983 ஆம் ஆண்டளவில் இந்த அதிகாரசபையில் ஏற்படுத்தப்பட்டது என்பதுடன், அது காலத்திற்குக் காலம் குறிப்பிடத்தக்க அளவால் இற்றைவரைப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குறித்த கணினி முறைமையின் மூலம் அவசியமான அறிக்கைகள், கணக்கு முறைமையில் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்களை மேற்கொள்ளல் சம்பந்தமாக காணப்பட்ட சிரமங்கள் காரணமாக புதிய கணினி கணக்கு முறைமை தற்போது மேம்படுத்தி பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்கு தற்போது பயன்படுத்தப்படாத கணக்கு இலக்கங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மேலும் அறியத் தருகின்றேன்.

(ஊ) அவதானிப்பு

குறித்த நிதிப் பெறுவனவின்போதும் கொடுப்பனவின்போதும் வாடிக்கையாளரின் இலக்கம் (Customer Code) இன்றி இப்பெறுமானம் பல்வேறு வாடிக்கையாளர்களின் (Miscellaneous) குறியீட்டு இலக்கங்களின்கீழ் கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டுள்ளமை இக்கணக்கு நிலுவைகளிலிருந்து தோன்றுகிறது. எவ்வாறாயினும், இதனுடன் சம்பந்தப்பட்ட ஒப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமையால், முக்கிய ஆவணங்களைப் பரீட்சித்து சரியான வாடிக்கையாளர்களின் இலக்கங்களின் கீழ் கணக்கீட்டில் உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

(எ) அவதானிப்பு

இக்கூற்றுடன் உடன்பட முடியாது. அதாவது, முன்பு காணப்பட்ட கணினி கணக்கு முறைமையில் பிரவேசித்து குறித்த காலப்பகுதியை அதில் சரியான முறையில் வழங்குவதன் ஊடாக ஆண்டிற்குரிய கொடுக்கல் வாங்கல்களின் எல்லா விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். எவ்வாறாயினும், புதிய கணினி கணக்கு முறைமை தற்போது பூர்த்திசெய்யும் இறுதிக்கட்டத்தில் இருக்கிறது. அதனை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த பின் அரசாங்க கணக்காய்வுப் பிரிவிற்கும் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அதனைப் பயன்படுத்துவதற்கும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஏ) அவதானிப்பு

புதிய கணினி கணக்கு முறைமையைப் பயன்படுத்துவதன் ஊடாக வினைத்திறனான, சரியான கணக்கீட்டுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதை மேலும் அறியத் தருகின்றோம். அதேபோல், நிறுவனத்தின் கணினி வலையமைப்பிலுள்ள பலவீனங்களைத் தவிர்ப்பதற்காக முறையான ஒரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் கணினி வலையமைப்பின் சேவை உடைவுகளைக் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஐ) அவதானிப்பு

இக்கூற்றுடன் உடன்பட முடியாது. அதாவது, அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்ட பழைய கணினி முறைமையின் ஊடாக இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் வசதி காணப்படவில்லை என்பதுடன், நிலுவைப் பரீட்சிப்பை சரியாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆற்றல் காணப்பட்டது. மேலும், கணினி முறைமையில் உட்படுத்தப்பட்ட தரவுகளை மாற்ற முடியாதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆகையால், பழைய கணினி முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகள் திருத்தமானவை என்பதை மேலும் அறியத் தருகின்றோம்.

அதேபோல், கணக்குப் பிரிவில் தற்போது கணக்குப் பதியும் பிரிவு தவிர்ந்த ஏனைய எல்லாப் பிரிவுகளிலும் (வருமானங்கள், கொடுப்பனவுகள், காசேடுகள்) புதிய கணக்கு முறைமை அதன் பிரிவுத் தலைவர்களின் நெறிப்படுத்தலின்கீழ் வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுகிறது. கணக்குப் பதியும் பிரிவிற்கு உரிய கணக்கு அறிக்கைகளை புதிய முறைமையின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்திலும் தொடர்புபட்ட பணிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, புதிய முறைமையின் ஊடாக இறுதிக் கணக்குகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

2.3.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

---

v. அவதானிப்பு

மேற்படி சீராக்கல் சம்பந்தமான எல்லாக் கணக்கெடுப்புகளையும் சம்பந்தப்பட்ட விபரங்களையும் கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மேலும் விளக்கங்கள் தேவைப்படின், கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்க அவசிய நடவடிக்கை எடுக்கப்படும்.

vi. அவதானிப்பு

தங்கள் ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொகுதிக்கடன் வட்டித் தொகைக் கொடுப்பனவு, அத்தொகுதிக்கடன் தொகைகளுக்கு குறுகிய கால முதலீடுகளின் பேரில் கிடைத்த வட்டி மற்றும் தொகுதிக்கடன் வட்டித் தொகையை மீள்நிரப்பல்செய்வது கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டுள்ளது, இலங்கை கணக்கீட்டு நியம இல.1 இன்கீழ் அன்றி, இலங்கை கணக்கீட்டு நியம இல. 23 கடன் பெறல் கிரயத்தின் கீழாகும். அதன்படி, அதன் தேறிய பெறுமானத்தையே கடன்பெறல் கிரயத்தின் மூலதனமாக மாற்றமுடியும். அதன்படி, கடன் பெறல் கிரயத்தை தாண்டிய வருமானம் வேறு வருமானங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

vii. அவதானிப்பு

மீளாய்வு ஆண்டைத் தொடர்ந்துவரும் ஆண்டில் செலுத்தப்படவேண்டிய பணிக்கொடைக் கொடுப்பனவுகள் ரூ.3,266,648 பேரேட்டு இலக்கம் J25482 இன்கீழ் தனிவேறாக கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டுள்ளன.

viii. அவதானிப்பு

அதிகாரசபையினால் அமுல்படுத்த உத்தேசித்துள்ள பல்வேறு கருத்திட்டங்களுக்காக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவுத் தொகைகளை மீள்நிரப்பல் செய்வதாகவே மாநகரங்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினால் 2016 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் ரூ.1,901,237,825 தொகை வழங்கப்பட்டுள்ளது. அதில், அதிகாரசபையினால் அவ்வாறு வழங்கப்பட்ட தொகைகள் வாடிக்கையாளர்களின் வைப்புகளாக (6605) கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல், குறித்த தொழில்முயற்சியின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர்களுக்கு அந்நிறுவனத்தின் உரிமை மீது தாக்கம்செலுத்தும் கொடுக்கல்வாங்கல்கள் உரிமைமாற்றக் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக: மூலதனத்திலான மாற்றம், தேறிய இலாபம் அல்லது நட்டத்தின் தாக்கம் முதலியன.

ஸை. அவதானிப்பு

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் காணிகள் கையகப்படுத்தும்போது ஏற்படக்கூடிய நிகழ்சாத்தியப் பொறுப்புக்களுக்கான 55 மில்லியன் ரூபா ஒதுக்கீடு 1997 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த ஒதுக்கீட்டை திரண்ட இலாபத்திலிருந்து கழித்து நிகழ்சாத்திய ஒதுக்கீடுகளின்கீழ் கணக்குகளில் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல், 1997 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான கணக்குப் பதிவுகளின் கீழ் இது சம்பந்தமான விளக்கங்கள் காட்டப்பட்டுள்ளன.

அதேபோல், இந்த அதிகாரசபையின் கீழ் காணப்பட்ட ஒரு கருத்திட்டமான நகர அபிவிருத்திப் பிரிவுகள் கருத்திட்டத்தைப் பூர்த்திசெய்யும்போது அக்கருத்திட்டத்தில் காணப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் இந்த அதிகாரசபையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன்போது குறித்த கருத்திட்டத்தில் காணப்பட்ட இந்த ஒதுக்கங்கள் அதிகாரசபையின் ஒதுக்கக் கணக்கொன்றாகவே கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த ஒதுக்கத்தை தொடர்ந்தும் பேணிச்செல்வது சம்பந்தமாக முகாமைத்துவ சபையின் அனுமதியைப் பெற்று கணக்கீட்டில் உட்படுத்தப்படவேண்டிய சீராக்கங்களை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

(ஆ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம்-07

(i) அவதானிப்பு

நிதி முதலீடுகள் தொடர்பான குறித்த வெளிப்படுத்தல்கள், கணக்குக் குறிப்பு இல. 1.3.3(iii) இன்கீழ் காட்டப்பட்டுள்ளதுடன், பயனுறுதிவாய்ந்த வட்டி விகிதங்களின அடிப்படையில் இலதாக்கல் செய்யப்பட்ட பெறுமானங்கள் குறித்த எல்லாத் தகவல்களும் கணக்காய்வுக்காக வழங்கப்பட்டுள்ளன.

(ii) அவதானிப்பு

கணக்குப் பதிவுகள் கணக்குப் பதிவு இல. 1.3.3.(iii) இன்கீழ் காட்டப்பட்டுள்ளவாறு நிதி முதலீடுகள் பயனுறுதிவாய்ந்த வட்டி விகிதங்களின் அடிப்படையில் கணக்கீட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அங்கு வட்டி வருமான இலதாக்கல் (Amortisation) செய்யப்பட்ட பெறுமதிக்குச் சீராக்கம்செய்யும்போது ஏற்படும் தாக்கம் வட்டி வருமானத்தின் கீழ் முதலீட்டுச் சொத்துக்களுக்கு சீராக்கம் செய்யப்படவேண்டிய யாதேனுமோர் இழப்பீட்டு நட்டம் இருப்பின், அது 'முதலீட்டுச் சொத்துக்களின் இழப்பீட்டு நட்டமாக' வருமானக் கூற்றிலும் சீராக்கம் செய்யப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, 2016.12.31 ஆந் திகதிக்குச் செய்யப்பட்ட சீராக்கங்களின்படி முதலீட்டு வருமானங்களை பயனுறுதிவாய்ந்த வட்டி விகிதங்களின் அடிப்படையில் இலதாக்கல் செய்யும்போது 1,897,987 ரூபா சீராக்கம் சரியாக வட்டி வருமானத்தின்கீழ் கணக்கீட்டில் உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், முதலீட்டுச் சொத்துக்களுக்கு சீராக்கம் செய்யப்படவேண்டிய யாதேனும் இழப்பீட்டு நட்டம் ஏற்படவில்லை என்பதை அறிவிக்கின்றேன்.

(iii) அவதானிப்பு

நிதி அமைச்சின் பிரதிச் செயலாளருடன் 2016.12.22 ஆந் திகதி இடம்பெற்ற நிலுவைக் கடன் மீதிகளை அறவிட்டுக்கொள்ளல் சம்பந்தமான கூட்டத்தின் அறிக்கைப்படி இக்கடன் தொகைகளை அமைச்சரவை அங்கீகாரப்படி பதிவழிக்கத் தீர்மானித்தனர். அதன்படி, 2017.10.04 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபன இல. CP17/2245/724/094 மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து கிடைக்கவேண்டிய கடன் மீதிகளை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

(iv) அவதானிப்பு

இக்கூற்றுடன் உடன்பட முடியாது.
இந்த அதிகாரசபையினால் பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் ஊழியர் கடனை பயனுறுதிவாய்ந்த வட்டி விகிதத்தை அடிப்படையாகக்கொண்டு அவற்றின் வட்டி வருமானமும் கணக்காண்டின் இறுதியில் கிடைக்கவேண்டிய ஊழியர் கடன் மீதியும் இன்றைய பெறுமானத்திற்கு கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டுள்ளது. இழப்பீட்டு நட்டங்கள் கணக்கீடு பற்றி கணக்கீட்டுக் கொள்கை கணக்குப் பதிவு 1.3.4 இன்கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம்-16

அவதானிப்பு

உரிய விரிவான தகவல்களைப் பெற்றுக்கொண்டும் அதன் சட்டபூர்வ நிலைமையைக் கவனத்திலெடுத்தும் கணக்கீட்டு வெளிப்படுத்தல்கள் அவசியப்படுமாயின், அது குறித்து எதிர்காலத்தில் ஆவண செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம்-17

அவதானிப்பு

பிற்போடப்பட்ட குத்தகை வாடகை (Deferred Lease Rent) சம்பந்தமான உரிய கணக்கீட்டு வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுகளில் பதிவு இல. 1.3.9 மற்றும் 26 இன்கீழ் காட்டப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக மேலதிக கணக்கீட்டு வெளிப்படுத்தல்கள் அவசியப்படின், அது குறித்து எதிர்காலத்தில் ஆவண செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம்-18

அவதானிப்பு

அதிகாரசபை சேவை வருமானங்களை கணக்கீட்டில் உட்படுத்தும்போது மின்சாரம், நீர்க் கட்டணங்கள், முகாமைத்துவக் கட்டணங்கள் தவிர்ந்த ஏனைய வருமானம் அளித்த சேவையின் மீதும் சேவையைப் பூர்த்திசெய்தல் என்ற விடயத்தின் மீதும் அமைந்திருப்பதால், நிதி அடிப்படையின் பேரில் கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டுள்ளது.
அதேபோல், 2009 மே மாதம் 12 ஆந் திகதி அதிகாரசபையின் முகாமைத்துவத்தினால் அதிகாரசபை தமது வருமானத்தின் பேரில் செலுத்தவேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரியை மீட்டுக்கொள்வதற்காக அவ்வரியின் பேரில் அதிகாரசபைக்கு சுமக்க நேரிடும் மேலதிக வரிப் பற்றுக்களை குறித்த வருமானத்துடன் சேர்த்து அறவிடத் தீர்மானித்திருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின்

நியதிகளின்படி அவ்வாறு வருமானத்தை அதிகரித்து சேர்த்துக்கொள்வதாயின், அவ்வாறு அதிகரிக்கப்பட்ட தொகையையும் தொடக்க வருமானத்தின் ஒரு பகுதியாகவே கருத வேண்டும். அத்தீர்மானத்தின்படி அதிகாரசபையினால் மாதாந்த வாடகை வருமானத்தினதும் குத்தகை வட்டி வருமானத்தினதும் பேரில் சேர்க்கப்படும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரியை வருமானத்தின் ஒரு பகுதியாகக் கருதி முன்னைய ஆண்டுகளிலும் மீளாய்வு ஆண்டிலும் வருமானத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரியைச் செலுத்தும்போது அந்த முழுப் பெறுமதிக்கு 2% சதவீத வரி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, வருமானம், ரூ.55,858,753 இனால் மிகையாகக் கணிப்பிடப்படவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம்-23 (LKAS 23)

அவதானிப்பு

இக்கூற்றுடன் உடன்படி முடியாது.

இத்தொகுதிக்கடன் விநியோகத்திற்கு உரிய மூலதன மற்றும் வட்டித் தொகையை மீளச்செலுத்தல் சம்பந்தமாக திறைசேரி முறியொன்றைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், குறித்த வீடமைப்புக் கருத்திட்ட நிர்மாணப் பணிகள் இடப்பெற்றுவரும் காலமும் நகர அபிவிருத்தி அதிகாரசபை அக்கருத்திட்டங்களின் வர்த்தக ரீதியான வருமானம் பெறும் மட்டம் வரை 3 வருட காலத்தில் இத்தொகுதிக்கடன்களுக்கான வட்டிப் பெறுமதியான 3,291 மில்லியன் ரூபா தொகையை பொதுத் திறைசேரி அதிகாரசபைக்கு மீள்நிரப்பல்செய்ய உடன்பட்டிருந்தது. அதன்படி, அதிகாரசபைக்கு அவசியமான நிதிஒதுக்கீட்டை பொதுத் திறைசேரி மதிப்பீடுசெய்து வருடாந்த வரவுசெலவுத்திட்டம் மூலம் வழங்க மேற்படி அமைச்சரவை விஞ்ஞாபனம் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இத்தொகையில் 532 மில்லியன் ரூபா தொகை 2011 ஆம் ஆண்டில் இந்த அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், தொகுதிக்கடன் விநியோகத்திற்கு உரிய எஞ்சிய வட்டித்தொகையைப் பெற்றுத் தருமாறு பல தடவைகள் பொதுத் திறைசேரிக்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து எஞ்சிய 2,759 மில்லியன் ரூபா தொகையை 10 தவணைகளில் வழங்க பொதுத் திறைசேரி இணக்கம் தெரிவித்திருந்தது.

2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இத்தொகுதிக்கடன் விநியோகத்திற்காக அதிகாரசபையினால் 5,486 மில்லியன் ரூபா தொகை தொகுதிக்கடன் வட்டியாக கொடுப்பனவுசெய்யப்பட்டிருந்தது. அதேபோல், இந்த தொகுதிக்கடன் தொகை முதலீட்டிலிருந்து 3,529 மில்லியன் ரூபா வட்டி வருமானமொன்றும் பொதுத் திறைசேரியிலிருந்து 2011 ஆம் ஆண்டில் 532 மில்லியன் ரூபா தொகையும் கிடைத்த பின் தேறிய தொகுதிக்கடன் வட்டியாக 1,705 மில்லியன் ரூபா தொகை நகர புத்தெழுச்சிக் கருத்திட்டத்தின்கீழ் அதுவரை கடன் பெறல் கிரயமாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியிலிருந்து எஞ்சிய வட்டித் தொகையான 2,759 மில்லியன் ரூபா தொகை வழங்கப்பட்டதன் காரணமாக இந்த அதிகாரசபை அதுவரை 1,705 மில்லியன் ரூபா தொகையை நகர புத்தெழுச்சிக் கருத்திட்டத்தின்கீழ் கடன் பெறல் கிரயமாக மூலதனமாக்கியிருந்த பெறுமானத்தை கணக்குகளில் சரியாக சீராக்கம்செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. ஆகையால், உமது ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சொத்துக்கள் அதன் பெறுமதியில் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறுவது சரியானதல்ல.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமமம்-24

அவதானிப்பு

வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனி இந்த அதிகாரசபையின் பல்வேறு சந்தர்ப்பங்களுக்கு அவசியமான உபசரணை நடவடிக்கைகளை வழங்குவதற்காக செலுத்த வேண்டும் என வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனியின் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.5,438,553 தொகை ரூ.6,113,490.52 எனத் திருத்தப்பட வேண்டும். அதிகாரசபையின் நிதிக்கூற்றுகளில்

செலுத்தப்படவேண்டிய கடன்படுநர்கள் என்பதன் கீழ் இப்பெறுமானம் சரியாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமம்-28

அவதானிப்பு

பங்கு முதல்களுக்கான பங்கிலாபங்கள் வெளியீடு, குறித்த கம்பனியினால் வருடத்தின் இலாபமீட்டல்களையும் ஏனைய விடயங்களையும் அடிப்படையாகக்கொண்டு தீர்மானிக்கப்படுவதுடன், அவ்வாறு பங்கிலாபங்கள் கிடைக்காத நிறுவனங்கள் சம்பந்தமாக அதிகாரசபையின் முகாமைத்துவத்தினால் எதிர்காலத்தில் பரிசீலிக்கப்பட்டு அவசிய நடவடிக்கை எடுக்கப்படும்.

எவ்வாறாயினும், அதிகாரசபைக்கு துணைக் கம்பனிகளினால் மீளாய்வு ஆண்டிற்கு பங்கிலாபக் கூற்றுக்கள் வெளியிடப்பட்டிருக்குமாயின் மாத்திரம் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் பங்கிலாப வருமானங்களுக்கு அட்டுறுவாக வைக்கப்படும். இலங்கை கணக்கீட்டு நியமம் இல.-28 இன்பிரகாரம் அவ்வாறு பங்கிலாபங்களுக்கு அட்டுறு கட்டாயமாக மேற்கொள்ளப்படவேண்டும் எனக் குறிப்பிடப்படவில்லை.

(ஐ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37

(i) அவதானிப்பு

நகர அபிவிருத்தி அதிகாரசபை, பேலியகொடை களஞ்சியாலைத் தொகுதிக் கம்பனியில் செய்துள்ள முதலீடு கிடைக்காமல் செல்வதற்கான வாய்ப்பு சம்பந்தமாகவே இந்த ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு தொடக்கம் பேலியகொடை களஞ்சியசாலைத் தொகுதிக் கம்பனி இலாபமீட்டும் நிலையைச் சுட்டிக்காட்டியபோதும், இக்கம்பனியை ஒழிவுக்குட்படுத்தும்போது ஏற்படக்கூடிய நிகழ்சாத்தியப் பொறுப்புக்களை செலுத்தித் தீர்க்கும்போது மேற்படி முதலீட்டுப் பெறுமானத்தை மீட்டுக்கொள்வதிலுள்ள ஆற்றல் குறித்து பரிசீலித்து இந்த ஒதுக்கத்தை மேலும் கணக்குகளில் பேணுவது உகந்ததாகையால், குறித்த ஒதுக்கம் மாற்றமின்றி கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அதிகாரசபையின் முகாமைத்துவ சபையினால் பேலியகொடை வெயார்ஹவுஸ் கம்ப்லெக்ஸ் லிமிற்றட் கம்பனியை 2017.07.31 ஆந் திகதியிலிருந்து ஒழிவுக்குட்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமையால், அது சம்பந்தமான கணக்கீட்டுச் சீராக்கங்களை 2017 ஆம் ஆண்டிற்குரிய இறுதிக் கணக்குகளில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) அவதானிப்பு

ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவின்போது 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரிய நிலுவைத் தொகைகள் சம்பந்தமாக விதிக்கப்பட்டிருந்த மிகைக் கட்டணங்களை விடுவித்துக்கொள்வது சம்பந்தமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் ஊழியர் சேமலாப நிதியம் திணைக்கத்துடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து 2017 ஆம் ஆண்டில் அந்நடவடிக்கை அதிகாரசபையிடம் ஆற்றுப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த மிகைக் கட்டணத்தை நீக்கிக்கொள்ள முடியாமல் இருந்ததுடன், குறித்த தொகையை 10 தவணைகளில் கொடுப்பனவுசெய்வதற்கு நீதிமன்றத்தின் உடன்பாடு பெறப்பட்டது. அதன்படி, இது சம்பந்தமான எந்தவொரு பொறுப்பும் இன்றளவில் இல்லை என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன்.

(ஒ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40

அவதானிப்பு

இந்த அதிகாரசபையினால் முதலீடுசெய்த சொத்துக்களை கணக்கீட்டில் உட்படுத்தும்போது இலங்கை கணக்கீட்டு நியம இல. 01 இன் பிரகாரம் 2011.01.01 ஆந் திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் Deem Cost முறையில் கணக்குகளில் பதியப்பட்டுள்ளது. அதன்படி, அன்றைய தினத்திற்கு எல்லா முதலீட்டுச் சொத்துக்களும் அவற்றின் நியாயமான பெறுமானத்தில் (Fair Value) மதிப்பீடுசெய்யப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியம இல. 01 இன்பிரகாரம் முதலீட்டுச் சொத்துக்கள் கணக்கீட்டில் உட்படுத்தப்படும் அடிப்படையில் கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல், கணக்கீட்டு நியம இல. 40 இன்பிரகாரம் கிரய அடிப்படையின் பேரில் அல்லது நியாயமான பெறுமானத்தின் பேரில் கணக்கீட்டில் உட்படுத்தல் என்ற இரண்டு அடிப்படைகளில் ஓர் அடிப்படையின்கீழ் கணக்கீட்டில் உட்படுத்தக்கூடிய வாய்ப்பு உள்ளது. இது சம்பந்தமாக உரிய தெளிவுபடுத்தலை கணக்குப் பதிவு இல. 1.3.5 தொடக்கம் 1.3.8 வரையான குறிப்புகளில் காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த அதிகாரசபையினால் முதலீட்டுச் சொத்துக்களை கணக்கீட்டில் உட்படுத்தும்போது பின்பற்றப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை இலங்கை கணக்கீட்டு நியம இல. 40 இற்கு இயைபுடையது என்பதை அறியத் தருகின்றேன்.

2.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) அவதானிப்பு

அதிகாரசபையின் காணிகளின் அரசாங்க விலைமதிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்ட சேவைகளுக்காக செலுத்தப்படவேண்டிய தொகைகள் சம்பந்தமாக இந்த அதிகாரசபைக்கு முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கைகளுக்கும் அத்திணைக்களத்தினால் அரசாங்க கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள அறிக்கைக்கும் இடையில் முரண்பாட்டை அவதானிக்கலாம். அதேபோல், அவ்வாறு செலுத்தப்படவேண்டிய தொகைகளை அடையாளம் காண்பதற்கு இந்த அதிகாரசபையின் கோப்பு இலக்கங்கள் அல்லது தொடர்புஇலக்கங்கள் பற்றிய எந்தவொரு குறிப்பையும் காண முடியவில்லை.

அதன்பிரகாரம், அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செலுத்தவேண்டிய பெறுமானத்திற்கு உரிய சரியான விபரங்களுடன்கூடிய ஓர் ஆவணத்தைப் பெற்றுத்தருமாறு கோரப்பட்டுள்ளதுடன், அந்த ஆவணம் கிடைக்கப்பெற்ற பின் அதன் சரியாந்தன்மை குறித்து பரீட்சித்த பின் கணக்கீட்டில் உட்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

(ஆ) அவதானிப்பு

இலங்கை கணக்கீட்டு நியம இல. 07 இன் பிரகாரம், ஊழியர் கடன் மற்றும் வட்டி வருமானத்தை இலதாக்கல் என்ற அடிப்படையில் சீராக்கம் செய்யப்பட்டது. அதன்பிரகாரம், ஊழியர் கடனை கணக்குகளுக்கு இலங்கை கணக்கீட்டு நியம இல. 7 இன்பிரகாரம் மேற்கொள்ளப்படவேண்டிய சரியான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் (உரிய கணிப்பீட்டு விபரங்கள் கணக்காய்விற்காக வழங்கப்பட்டுள்ளது) அத்தகைய சீராக்கங்களின் ஊடாக ஊழியர் கடன் கணக்குகளில் மிகைக் கணிப்பீடு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடுவது சரியானதல்ல என்பதை அறியத் தருகின்றேன்.

(இ) அவதானிப்பு

2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான சடடத்தின் பிரிவு 02 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆள் ஒவ்வொருவரும் தமது வருமானத்தின் பேரில், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான வரி சதவீத அடிப்படையில் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரித் தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க வேண்டியுள்ளது.

குறித்த சட்டத்தில், அவ்வரித்தொகையை வாடிக்கையாளர்களுக்கு இடமாற்ற முடியும் என்றோ அல்லது முடியாது என்றோ தெளிவாகக் குறிப்பிடப்படவில்லையாதலால்,

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து அது சம்பந்தமாக வினவப்பட்டபோதும் அவ்வாறு செய்வது சம்பந்தமாக குறித்த சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதுடன், அவ்வாறு வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்படுமாயின், அதனையும் வருமானத்தின் ஒரு பகுதியாகக் கருத வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, அதிகாரசபையின் முகாமைத்துவ சபையின் அனுமதியின் பேரில் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரித் தொகை காரணமாக இந்த அதிகாரசபைக்கு சுமக்க நேரிடும் மேலதிக கிரயத்தை உட்படுத்திக் கொள்ளக்கூடிய விதத்தில் குறித்த வருமானங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய வருமானங்களை அடையாளம் காணக்கூடிய விதத்தில் அதனை தனிவேறான கணக்கு இலக்கமொன்றின் கீழ் கணக்கீட்டில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல், மாதாந்த வாடகை வருமானமும் குத்தகை வாடகை வருமானமும் மீதன கிடைக்கவேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரிப் பெறுமானம் அக்கடன்படுநர்களின் கீழ் காட்டப்பட்டுள்ளபோதும், அதற்கான தனிவேறான கணக்கு இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) அவதானிப்பு

மேற்படி பதில் ஏற்புடைத்தாகும்.

(உ) அவதானிப்பு

அதிகாரசபையினால் பராமரிக்கப்பட்டுவரும் சுற்றுலா பங்களாக்களிலிருந்து அறவிட்டுக்கொள்ளப்பட்ட அறைக் கட்டணங்கள் இப்பெறுமானத்திலிருந்து காட்டப்படுகிறது. இப்பெறுமானம் நிலுவை விசாரணைக் கணக்கு இல. 4534, 4535 ஆகியவற்றின் கீழ் காட்டப்பட்டுள்ளது. கணக்கு இல. 4321 இன்கீழ் எந்தவொரு கொடுக்கல்வாங்கலும் இடம்பெறவில்லை.

(ஊ) அவதானிப்பு

பொதுத் திறைசேரியினால் வழங்க உடன்பட்ட இத்தொகைகள் கடன்படுநர்களின்கீழ் கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டுள்ளதுடன், இப்பணப்பெறுவனவு கடன்படுநர்களின் கணக்குகளில் குறைவு மற்றும அதிகரிப்பு என்பதன்கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(எ) அவதானிப்பு

2015 ஆம் ஆண்டில் கொள்வனவுசெய்யப்பட்டு அட்டுறு கொடுப்பனவுகளாக கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டிருக்கையில் சொத்துக்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது, 2016 ஆம் ஆண்டில் சொத்துக்கள் கொள்வனவு ஒன்றாக செய்யப்பட்ட கணக்குப்பதிவை சீர்செய்வதாகவே இப்பெறுமானம் காட்டப்பட்டுள்ளது.

(ஏ) அவதானிப்பு

பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்காக இன்றைய பெறுமானம் கணிப்பிடப்படவில்லை என்பதுடன், எதிர்காலப் பொறுப்பை மதிப்பீடுசெய்வதற்கு பொருளாதார மற்றும் குடித்தொகையியலுடன் சம்பந்தப்பட்ட கருதுகோள்களைப் பயன்படுத்துவதன்மூலம் செய்யப்படும் விலைமதிப்பீடொன்றே கணக்கீட்டு நியமத்தில் காட்டப்பட்டுள்ளது என்பதுடன், இக்கருதுகோள்கள் புள்ளிவிவரவியல் கற்கைகள், அனுபவங்கள், நியாயித்தல்கள் என்பவற்றின் மீதமைந்துள்ளது.

காப்பீட்டுக் கணிப்பீட்டு கணக்கர் அறிக்கையைத் தயாரிக்கும்போது குறித்த கணக்கு ஆண்டினுள் சேவையிலிருந்து விலகல்கள், ஆட்சேர்ப்புக்கள், சேவையில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் குறித்த மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரிக்கும்போது கவனத்தில் எடுக்கப்படுகின்றன.

சேவையிலிருந்து விலகிச்சென்ற ஊழியர்களிற் சிலர் சார்பாக செலுத்தப்படவேண்டிய நிலுவை பணிக்கொடைக் கொடுப்பனவுகளையே இப்பெறுமானம் காட்டுவதுடன், அப்பெறுமானம் ஆயுட்கணக்கர் அறிக்கையைத் தயாரிக்கும்போது கவனத்தில் எடுக்கப்பட முடியாததது என்று மேற்படி ஆயுட்கணக்கர் அறிக்கையைத் தயாரிக்கும்போது சுட்டிக்காட்டப்பட்டது.

(ஐ) அவதானிப்பு

நிலுவை வாடகை கடன்படுநர்களிடமிருந்தும் குத்தகை வாடகை கடன்படுநர்களிடமிருந்தும் உரிய காலப்பகுதிகளில் இந்நாட்டில் அமுலிலிருந்த வரிகள் சார்பாக அறவிடப்படவேண்டிய நிலுவை வரித் தொகைகளையே இப்பெறுமானம் காட்டுகிறது. இப்பணத்தொகைகளை அறவிட்டுக்கொள்வதற்கான ஆற்றல் சம்பந்தமாக பரிசீலித்து கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

(ஒ) அவதானிப்பு

நீதிமன்றத்தினால் இந்த ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய மிகைக் கட்டணத்தை 10 தவணைகளில் கொடுப்பனவுசெய்வதற்குரிய உடன்பாடு 2017 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, தவணைத் தொகைகள் செலுத்தப்படுவது 2017 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு செலுத்தவேண்டிய தொகை 2017 ஆம் ஆண்டில் கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டுள்ளது.

(கி) அவதானிப்பு

குறித்த காணி அளவிலிருந்து தெபானம அமைந்துள்ள 85 பேர்ச் கொண்ட காணி அளவு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வீடமைப்பு கட்டுமானம் தொடர்பாக விலக்கப்பட்ட காணியில் திறந்த பிரதேசமென அடையாளங் காணப்பட்டுள்ளது. அபிவிருத்தி ஒழுங்குவிதிகளுக்கமைய அவ்வாறு திறந்த பிரதேசமாக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பொது அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள் ஆகையால், சந்தைப்பெறுமதி ரூபா 51 மில்லியனாக மதிப்பிடுதல் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருப்பதனால்,அதிகாரசபையின் புத்தகங்களில் காட்டுதல் தவறாகும். இந்த திறந்த பிரதேசமாக ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பகுதிகள் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு (மஹரகம நகர சபை) ஒப்படைக்கப்பட வேண்டியிருப்பதுடன், இது வரை அக்குறித்த நடவடிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. அக்ககுறித்த திறந்த பிரதேசங்கள் மஹரகம நகர சபையிற்கும் கையளிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(கீ) அவதானிப்பு

பொருளாதார கட்டணங்கள் செலுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அத்தொகை அதிகாரசபையினால் உரிய வருடத்தில் செலுத்தப்படவேண்டிய வருமான வரித்தொகைக்கு ஈடு செய்ய முடியுமான வரித்தொகையாக கணக்கில் காட்டப்படுவதால் அத்தொகை இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட முடியுமான தொகையாக வெவ்வேறாக கணக்கிடப்படவில்லை.

(கு) அவதானிப்பு

இந்த துணைமைக் கம்பனிகளைக் கூட்டிணைக்கும்போது ஆரம்ப பங்கு மூலதனம் உரிய தாபன உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருப்பினும் அது தொடர்பாக எதுவித நிதி பங்களிப்பும் இப்போதாகும்போது இந்த அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படவில்லை. அதேபோன்று இந்தக் கம்பனிகள் செயற்படாததனால் அக்குறித்த துணைமைக் கம்பனிகளின் செயற்பாடு குறித்து முகாமைத்துவ சபை தீர்மானம் எடுத்ததும் அது தொடர்பாக தேவையான வெளிப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

(கூ) அவதானிப்பு

காணிகளின் அனுபோக உரிமை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருப்பினும், அதற்காக கிடைக்கவேண்டிய நட்டஈடு மதிப்பீடு 2015 ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டிருப்பதுடன், நட்டஈடு தொகை 2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றுள்ளது.

உரிய காணிகள் அப்புறப்படுத்துவது தொடர்பில் 2010 மற்றும் 2011 வருடங்களில் அசைவுகள் பற்றிய அறிக்கைகளுக்குள் சீராக்கம் செய்யப்பட்டிருப்பின், காணிகளுக்காக கிடைக்க வேண்டிய நட்டஈட்டுப்பறுமதி தொடர்பாக சரியாக அறியாமையின் அடிப்படையில் ஏற்கப்பட்டுள்ள மூலதனச் செலவு ரூபா 1,699,148.00 ஆன நிதி நட்டத்துடனான விடுவிக்கப்பட்ட கொடுப்பனவாக மேறகொள்ளப்பட்ட காணிகள் அப்புறப்படுத்தல் குறித்து சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

2016 ஆம் ஆண்டிலும் ஆரம்ப வருடத்தின் இலாபகரமான கணக்குகள் சீராக்கங்களுடன் மீண்டும் அக்கொகடுக்கல் வாங்கல்கள் கணக்கிடுவதற்கு நேரிடும். இதற்கமைய, மிகவும் திருத்தமான முறையான நிதி கிடைப்பனவுகள் இடம்பெற்ற 2016 ஆம் வருடத்திலேயே காணிகள் அப்புறப்படுத்துவதும் கணக்கில் வைக்கப்பட்டது.

(கெ) அவதானிப்புகள்

காணிகள் விற்பனை கணக்கில் வைப்பது தொடர்பாக இது வரை அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயல்முறைாக அமைவது, விற்பனை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட வருடத்துக்குரிய கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்வதாகும். அதற்கமைய, காணியின் உரிமை சட்டரீதியாக மூன்றாம் தரப்பினருக்கு கையளிக்கும்போது / விற்பனை செய்யும்போது கணக்குகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்வதாகும்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட காணிகளின் விற்பனை இலாபம் மற்றும் செலவு பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

கணக்கிடப்பட்டுள்ள நட்டஈட்டுத்தொகை -	G 59831 - 14.01.16	ரூ. 2,846,000.00	
	G 59832 - 14.01.16	ரூ. 102,791,000.00	
	G 74640 - 14.12.16	ரூ. 104,000.00	
		ரூ. 105,741,000.00	
ஏற்கப்பட்டுள்ள செலவு - இழப்பீட்டுக் கொடுப்பனவு		அளவைக்கட்டணங்கள்	
583.50			
	83/3065	36,900.00	
	86/4720	1,629,166.00	
	இழப்பீட்டு வட்டி	32,499.00	ரூ. 1,699,148.50
விற்பனை இலாபம்			ரூ. 104,041,851.50

எவ்வாறாயினும், இலாபத்தை கணக்கிடும்போது அதனை சரியான முறையில் அடையாளங்காணல் மற்றும் இலாபம் கைகூடியிருத்தல் என்ற காரணங்களைக் கவனத்திற்கொள்வது முக்கியமானதாகும். அதற்கமைய, குறித்த காணிகள் கையளிப்பு 2010 மற்றும் 2011 வருடங்களில் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அதற்காக கிடைக்கவேண்டிய நட்டஈட்டுத்தொகை 2015 ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டமை மற்றும் 2016 ஆம் ஆண்டில் அத்தொகை அதிகாரசபைக்கு கிடைத்தமை என்ற காரணங்களின் அடிப்படையில் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட இந்த சீராக்கங்கள் மூலம் அதிகாரசபையின் மீளாய்வு வருடத்தில் இலாபம் இந்த பெறுமதியிலிருந்து மிகை மதிப்பிடப்படவில்லையென மேலும் அறியத்தருகின்றேன்.

(கே) அவதானிப்பு

வருமான வரி கணக்கிடும்போது வியாபார நடவடிக்கைகளின் மூலம் உழைக்கப்பட்ட இலாபம், வட்டி வருமானம், ஈவுத்தொகை சார்பாக வெவ்வேறான அடிப்படையில் வருமான வரி செலுத்துதல் வேண்டும். அதற்கமைய அதிகாரசபையின் வருமான வரி செலுத்துதல் வேண்டும். அதற்கமைய அதிகாரசபையின் வருமானம் மேற்குறிப்பிட்ட வருமான மூலகங்களுக்கு வகைப்படுத்தும்போது குத்தகை தவணைகளின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற வட்டி வருமானம் இந்த அதிகாரசபையின் வியாபார வருமானமாக கருதப்பட்டுள்ளது. அதற்கமைய உமது விசாரணையில் காட்டப்பட்டுள்ளவாறு வேறு வருமான மூலமாக கருதி அப்புறப்படுத்துகையாக காட்டுவது சரியானதாக இல்லை.

வருமான வரி கணக்கிடும்போது வியாபார நடவடிகைகளிலிருந்து சம்பாதித்த இலாபம், வட்டி வருமானம், இலாப பகிர்வு வருமானம் சார்பாக வெவ்வேறான அடிப்படையில் வருமான வரி செலுத்துதல் வேண்டும். அதற்கமைய அதிகரசபையின் வருமானம் மேற்குறிப்பிட்ட வருமான மூலகங்களுக்கு வகைப்படுத்தும்போது குத்தகை வரியின் மீது அறிவிடப்படுகின்ற வருமானம் இந்த அதிகாரசபையின் வியாபார வருமானமாக கருதப்பட்டுள்ளது. அதற்கமைய உமது வினவலின்படி காடடப்பட்டுள்ளவாறு வேறு வருமான மூலமாக கருதி நீக்குவது சரியானதாக இல்லை.

2016 ஆம் ஆண்டில் வருமான வரி அறிக்கை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு 2017 நொவெம்பர் 30 ஆந் திகதியிற்கு முன்பாகவே ஒப்படைக்கப்பட வேண்டும். அந்த இறுதி அறிக்கை வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மீளாய்வு வருடத்தில் காணிகள் விற்பனை மூலம் பெற்ற இலாபம் மற்றும் நிலையான சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் பெற்ற இலாபமும் வேறு வருமான மூலமாக காட்டுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

எவ்வாறாயினும் இந்த சொத்துக்கள் விற்பனையின் மூலம் பெற்ற கணக்கியல் இலாம் மற்றும் குத்தகை அடிப்படையில் பெற்ற இலாபத்துக்குமிடையே எதுவிதமாற்றமும் இல்லாதிருப்பதுடன் அதன் மூலம் செலுத்தப்பட்ட வருமான வரி பொறுப்பு குறித்து எதுவித தாக்கமும் ஏற்படாதெனவும் அறிவிக்கின்றேன்.

பணியாளர் செலவினங்கள் மூலம் கணக்கியல் நியமங்களின் பிரகாரம் வட்டி வருமானத்துக்கு மேற்கொள்ளப்படுகின்ற தாக்கத்தை கணக்கிடுவதும் அப்பெறுமதியே பணியாளர் செலவினங்களாக கணக்கில் காட்டுவதும் மேற்கொள்ளப்படகின்றது. அதற்கமைய ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட பணியாளர் செலவின கணக்குக்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கம் மூலம் அதிகாரசபையின் இலாபத்துக்கு எதுவித தாக்கமும் ஏற்படாததனால் அப்பெறுமதி மீண்டும் இலாபத்துக்கு சேர்த்து காட்டுவதன் மூலம் மிகை கணக்கெடுப்பு ஏற்படுவதனை அறியத்தருகின்றேன். மேலும் செலுத்தப்பட்ட வருமான வரி பொறுப்பு குறித்து எதுவித தாக்கமும் ஏற்படாதெனவும் அறிவிக்கின்றேன்.

(கொ) அவதானிப்பு

நிறைவு செய்யப்பட்ட 5 கருத்திட்டங்களுக்குரிய நிறைவு செய்தமைக்கான சான்றிதழ் (COC) இது வரைக்கும் பெற்றுக்கொள்ளவில்லையென்பதால் அதனைப் பெற்றுக்கொண்டதும் அக்குறித்த கருத்திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்ற வேலைகளிலிருந்து நீக்கப்பட்டு முதலீட்டு சொத்துக்களுக்கு மாற்றப்படும்.

2.3.4 தெளிவற்ற வித்தியாசங்கள்

(அ) அவதானிப்பு

அதிகாரசபையின் நிதிக்கூற்றுகளுக்குள் கடனாளிகளின் கீழ் வோட்டர்ஸ் எட்ஜ் நடப்புக் கணக்கினூடாக பிரதிபலிக்கின்ற ரூபா 4 மில்லியன்கள் தொகையிலிருந்து குறிப்பிடப்படுவது, அதிகாரசபையினால் இதற்கு முன்னர் உரிய கம்பனியிற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 10 மில்லியன் முற்பணக் கணக்கிலிருந்து மேலும் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையாகும். இத்தொகை கம்பனியின் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை. அதற்கமைய அதிகாரசபையின் புத்தகங்களில் அது தொடர்பில் சரியான முறையில் கணக்கீட்டு நடவடிக்கைகள் அறிக்கையிடப்படவில்லை.

வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனி இந்த அதிகாரசபையில் பல்வேறு சந்தர்ப்பங்களுக்காகதேவையான உபசரணை பணிகள் வழங்கியமைத் தொடர்பில் செலுத்த முடியுமானமைக்கு வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனி கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் ரூபா 5,438,553 /-ஆன தொகை ரூபா 6,113,490.52/- ஆக திருத்தப்பட வேண்டும். இந்தப் பெறுமதி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களுள் செலுத்தப்பட வேண்டிய கடன்கொடுத்தோரின் கீழ் சரியான முறையில் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) **அவதானிப்பு**

இந்த அதிகாரசபை 2016 ஆம் ஆண்டிற்குள் செலுத்தியுள்ள பணிக்கொடைத்தொகை ரூபா 17,519,171ஆகும். இத்தொகையிலிருந்து ரூபா 16,272,210 ஆன தொகை காப்பீட்டு கணிப்பு அறிக்கைக்கமைய வருடத்துக்குள் பணியிலிருந்து விலகிய ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற தொகையான மீதி ரூபா 1,246,961 ஆன தொகை 2005,2008 மற்றும் 2015 வருடங்களில் பணியிலிருந்து விலகிய 05 பணியாளர்கள் சார்பாக 2016 ஆம் ஆண்டிற்குள் செலுத்தப்பட்ட தொகையாகும். இந்த பெறுமதி முன்னைய வருட்களுக்குரியவையாக இருந்ததனால் அது ஆயுள் அறிக்கையில் உள்ளடக்கப்படும். அதற்கமைய அத்தொகை சரியான முறையில் நிதிப்பாய்ச்சல் கூற்றில் மற்றும் ஆயுள் அறிக்கைக்குரிய கணக்கு குறிப்புகளில் சரியான முறையில் காட்டப்படடுள்ளது.

(இ) **அவதானிப்பு**

விபரம்	இறுதிக் கணக்குகளுக்கமைய நிலுவை (ரூபா)	அட்டவணைக்கமைய நிலுவை (ரூபா)	மாற்றம் (ரூபா)	அவதானிப்பு
ஊழியர் கடன்பட்டோர்	200,773,988	199,260,309	1,513,679	இந்த பெறுமதியிலிருந்து எடுத்துரைக்கப்படுவது 2016.12.31 ஆந் திகதியிற்கு நடைமுறை விழா முற்பணங்கள், பண்டிகைக் கடன்கள், செயற்படாற்ற கடன் நிலுவைகள் சேர்ந்தவைகளாகும். இந்த பெறுமதிக்குரிய அட்டவணைகள் கணக்காய்விற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
ஊழியர் சேமலாப நிதி செலவு	92,244,312	157,598.746	65,354.434	இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா .92,242,312 ஆன பெறுமதியில் எடுத்துரைக்கப்படுது அதிகாரசபையினால் ஏற்கப்பட வேண்டிய 15% பெறுமதியாகும்.ஆனாலும் உங்களால் அட்டவணைக்கமைய நிலுவையாக காட்டப்பட்டுள்ள ரூபா 157,598,746 ஆன தொகை காட்டப்பட்டிருப்பது ஊழியர் சேமலாப நிதியாக செலுத்தப்பட்டுள்ள (ஊழியர்களின் பங்களிப்பு நிதியான 10% உள்ளடக்கப்பட்டு) மொத்த தொகையான 25% பெறுமதியாகும். இந்த தொகையில் லங்கா

				ரெஸ்ட் ஹவுஸ் நிறுவனம், UNIDEP நிறுவனம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் சார்பாக கொடுப்பனவுகள் செலுத்துவது தொடர்பாக ஈடு செய்யப்பட்ட ரூபா 3,902,349.97 ஆன தொகை உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் கணக்கு கூற்றுகள் மற்றும் அட்டவணைக்கிடையே மாற்றம் காணக்கூடியதாக இல்லை.
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் செலவு	18,448,863	18,911.849	462,986	இந்த மாற்றத்தின் மூலம் எடுத்துரைக்கப்படுவது அதிகாரசபையினால் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியமாக செலுத்தப்பட்டுள்ள மொத்த தொகையாகும். இந்ததொகையில் லங்கா ரெஸ்ட் ஹவுஸ் நிறுவனம், UNIDEP நிறுவனம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் சார்பாக கொடுப்பனவுகள் செலுத்துவது தொடர்பாக விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் சார்பாக கொடுப்பனவுகள் செலுத்துவது தொடர்பாக ஈடு செய்யப்பட்ட தொகை இந்த மாற்றத்தால் எடுத்துரைக்கப்படுவதுடன் அவை அக்கம்பனிகளின் கணக்குகளின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளது. அதற்கமைய கணக்கு கூற்றுகள் மற்றும் அட்டவணைக்கிடையே மாற்றம் காணக்கூடியதாக இல்லை.
ஓப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்கள்	4,090,254,398	4,090,161,467	92,931	ஓப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்கள் கணக்கில் காட்டப்பட்டுள்ள மாற்றத்துக்குரிய அட்டவணை கணக்காய்வுக்காக வழங்கப்பட்டுள்ளது.

சொத்து ஆதன உபகரணங்களின் தேய்வு	480,270,016	455,127,345	25,142,671	கடந்த ஆண்டுகளில், வருடத்துக்கான தொகுதியின் கணக்குகள் தயாரிக்கும்போது துணைமைக் கம்பனிகளின் வரையுள் கணக்குகளின் அடிப்படையில், முதன்மை வரையுள் தொகதிக் கணக்குகள் கணக்காய்வுக்காக வழங்கப்படுவதுடன் அக்கம்பனிகளின் கணக்காய்வுகள் முடிவடைந்ததும் அதற்கமைய அதிகாரசபையின் தொகுதியின் இறுதிக் கணக்குகளுக்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதிக் கணக்குகளுக்காக கணக்காய்வுக்காக வழங்குவது மேற்கொள்ளப்பட்டது. ஆனாலும் 2015 ஆம் வருடத்திலிருந்து கண்ககாய்வு தலைமை அதிபதி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலுக்கமைய அவ்வாறு வரையுள்படுத்தப்பட்ட கணக்குகளாக அல்லாத இறுதிக் கணக்குகளுக்காக வழங்கப்பட வேண்டியமைக்கு மதியுரை வழங்கப்பட்டது. இதன் காரணமாக உரிய கணக்குகளில் கண்காய்வின்போது வழங்கப்படுகின்ற காரணங்களின் அடிப்படையில் கணக்குகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள சீராக்கங்கள் தொகுதியின் கணக்குகளுக்கு அடுத்த வருடத்திலேயே மேற்கொள்வதற்கு நேரிடும்.இந்த மாற்றதால் எடுத்துரைக்கப்படவது அவ்வாறு துணைமைக் கம்பனிகளின் முன்னைய வருடங்களுக்குரிய தேய்வு செலவினங்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள சீராக்கங்களாகும். எவ்வாறாயினும் தொகுதியின் நிலையான சொத்துக்கள் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதி 2016 ஆம் ஆண்டில் அக்கம்பனிகளில் கணக்குகளுக்கமைய சரியானதாகும்.
பணிக்கொடை செலவு	39,727,961	38,481,000	1,246,961	இந்த அதிகாரசபை வருடத்துக்கள்' செலுத்தப்பட்டுள்ள பணிக்கொடைத்தொகை ரூபா 17,519,171 ஆகும். இந்த தொகையிலிருந்து ரூபா 16,272,210ஆன தொகை காப்பீட்டு

				கணக்கெடுப்பு அறிக்கைக்கமைய 2016 ஆம் வருடத்துக்குள் பணியிலிருந்து விலகிய பணியாளர்களுக்கு செலுத்தப்பட்ட தொகையான மீதித் தொகை ரூபா 1,246,961 ஆன தொகை2005,2008 மற்றும் 2015 வருடங்களில் பணியிலிருந்து விலகிய 05 ஊழியர்கள் சார்பாக செலுத்தப்பட்ட தொகையாகும். அதற்கமைய அக்குறித்த நிதி சரியான முறையில் காசு பாய்ச்சல் கூற்றில் மற்றும் ஆயுள் கணக்கெடுப்பு அறிக்கைக்குரிய கணக்குகள் குறிப்புகளில் திருத்தமான முறையில் காட்டப்பட்டுள்ளது.

2.3.5 கணக்காய்விற்காக அத்தாட்சிபடுத்தாமை.

(அ) அவதானிப்பு

முதலீடு செய்யப்பட்ட சொத்துக்கள், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் ஊழியர்களுக்கான கடன்கள் என்ற கணக்குகளுக்குரிய அட்டவணைகள் மற்றும் கணக்குகள் தொடர்பான கால பகுப்பாய்வு அரச கணக்காய்வு பிரிவுக்கு 2017.05.05 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அவதானிப்பு

காணிகளுக்காகச் செலுத்தப்பட வேண்டிய நட்டஈடு, வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தப்ப வேண்டிய கடன்கள் மற்றும் முற்பணக் கணக்குகளுக்குரிய அட்டவணை மற்றும் கால பகுப்பாய்வுகளிலிருந்து அதிகமானளவு அரச கணக்காய்வு பிரிவுக்கு 2017.09.29 ஆந் திகதி வழங்கப்பட்டிருப்பதுடன் மீதித் தொகையும் மிக விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

(இ) அவதானிப்பு

2016.12.31 ஆந் திகதியிற்கு அதிகாரசபையிற்கு கிடைக்க வேண்டிய மற்றும் அதிகாரசபையினால் செலுத்தப்பட வேண்டிய நிதி தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட கடிதங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அரசின் கணக்காய்வு பிரிவு மற்றும் அதிகாரசபையிற்கும் பிரதியொன்றுடன் வழங்குமாறு அனுப்பப்பட்டுள்ளன.

(ஈ) அவதானிப்பு

கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள வருமான கணக்குகள் 4 மற்றும் செவின கணக்குகள் 2 இல் உள்ளடங்கப்பட்டுள்ள நிலுவைகள் மீளாய்வு வருடத்தக்குரிய கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுந்த கொடுக்கல் வாங்கல்களினாலானது. இந்த கணக்குகளுக்கான உரிய அட்டவணைகள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(உ) அவதானிப்பு

இந்த கருத்திட்டத்துக்காக பொருத்தமான வங்கியினை தேர்ந்தெடுக்கும்போது ஏற்கனவே இந்த அதிகாரசபையின் அரச வங்கிகளில் பராமரிக்கப்படுகின்ற கணக்குகளின் மீது வழங்கப்படுகின்ற வட்டி விகிதாசாரம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அதேவாறு கணக்குகளை பராமரித்தல் மற்றும் ஆரம்பித்தல் தொடர்பில் செலுத்தப்ட வேண்டிய கட்டணம் குறித்தும் கவனம் செலுததப்பட்டிருப்பதுடன் அதற்கமைய அச்சந்தர்ப்பமாகும்போது தேசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் வழங்குவதற்குவதற்கு இணங்கிய வட்டி விகிதாசாரங்கள் மற்றும் சேவைகள் ஏனைய அரச மற்றும் தனியார் வங்கிகளுடன் ஒப்பிடும்போது அவை இந்த அதிகாரசபைக்கு நன்மைபயக்கக்கூடியவாறு காணக்கூடியதாக இருந்ததனால் அப்போதிருந்த கட்டுப்பாட்டு அதிகாரசபையினால் முகாமைத்துவ சபையின் முன் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த

கணக்குகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதை குறிப்பிடுவதில் விரும்புகின்றேன்.

(ஊ) **அவதானிப்பு**

கையகப்படுத்தப்பட்ட 30 காணித் துண்டுகளிலிருந்து 12 காணித்துண்டுகளின் உரிமை அதிகாரசபையினால் கையகப்படுத்தியிருப்பதுடன், அது தொடர்பாக இப்போதாகும்போது கணக்காய்வு பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

2.4 கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

(அ) **அவதானிப்பு**

2016.12.31 ஆந் திகதியில் இருந்த கருத்திட்டத்துக்காக ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தீர்க்கப்படாத முற்பண நிலுவை ரூபா 2.9 பில்லியன் தொகையிலிருந்து2017.07.31 ஆந் திகதியாகும்போது ரூபா 763 மில்லியன் நிதி தீர்க்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறு தீர்க்கப்படாத நிலுவைகள் உரிய ஒப்பந்தங்களில் விலைப்பட்டியல்கள் கிடைப்பதற்கமைய தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஆ) **அவதானிப்பு**

மீளாய்வு வருட ஆரம்பத்தில் நிலுவைத்தொகை அக்குறித்த வருடத்துக்குள் கிடைப்பனவுகளுடன் ஒப்பிடும்போது அறவிடப்பட்டுள்ள சதவீதம் 29% ஆக காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2017ஆம் ஆண்டில் முதல் ஆறு மாத காலத்துக்குரிய அறவீடுகளுடன் ஒப்பிடுகையில் காணக்கூடியதாக இருப்பது 2016 ஆம் ஆண்டில் 33% ஆன வாடகை வருமானம் அறவிடும் சதவீதம் 2017 முதல் 06 மாத காலங்களுக்குள் 36% வரை அதிகரித்திருப்பதேயாகும். முறதலையாக 4மூ ஆக இருந்த குத்தகை வருமானங்கள் அறிவிடும் சதவீதம் 2017 முதல் 06 மாத காலங்களுக்குள் 11% வரை அதிகரித்துள்ளது. மொத்த பெறுபேற்றை நோக்கும்போது 2016 வருடத்துக்கு நிகராக 2017 முதல் 06 மாத காலங்களுக்குள் வாடகை மற்றும் ஏனைய வருமானங்களை திரட்டும் சதவீதம் 29% முதல் 31.7% வரை முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது.

(இ) **அவதானிப்பு**

2016 12.31 ஆந் திகதியாகும்போது ரூபா 66 மில்லியன் அறவிடப்பட வேண்டுமென காட்டப்பட்டுள்ளது. இதில் ரூபா 14 மில்லியன்கள் கொழும்பு, கோட்டை சார்மஸ் தானியக்கிடங்கு வளாகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ளது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உடைத்து அப்புறப்படுத்தப்பட்ட இந்த களஞ்சியசாலை வளாகத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு இப்போதைக்கு அந்தந்த வியாபாரிகளுக்கு நிலுவை வாடகைத் தொடர்பில் அறிவிக்கப்பட்டு விழிப்பூட்டப்படடுள்ளன. மறுபுறும் நிலுவைத் தொகை அறவிடுவதற்கான சட்டரீதியான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுப்பதற்குள்ளது.

)ஈ(**அவதானிப்பு**

நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ரூபா 153.9 மில்லியன் ஆன தொகை இந்த அதிகார சபையினால் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இதற்கு 20 - 15 உம் இடைப்பட்ட கால எல்லைக்கு முன்னர் ஏற்கப்பட்ட செலவுகளாகும்.இந்த செலவுகளை அறவிட்டுக் கொள்வதற்காக உரிய நிறுவனங்களுடன் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கடிதங்கள் மூலம் மற்றும் பேச்சு வார்த்தைகள் மூலமும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அக்காரணம் தொடர்பில் எதவித சிறந்த பதில்வினையும் இது வரைக்கும் கிடைக்கப் பெறவில்லை.

அதற்கமைய, அக்கடனாளிகளை புத்தகங்களிலிருந்து பதிவளிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றிருப்பதுடன் அதற்காக உரிய ஒதுக்கீடுகளும் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அக்குறித்த ஒவ்வொரு கடனாளிகளுக்குரிய விபரங்களுக்கமைய பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

நிறுவனம்	2016/12/31 **ஆந் திகதியிற்கான நிலுவை**	**விபரம்**
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார	84,615,679	விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அலுவல்கள் அமைச்சின் ரூபா 84.6 மில்லியன் காலாவதியான கடன்பட்டோர் மீதியாக

அலுவல்கள் அமைச்சு		காட்டப்படுவது சுகததாச விளையாட்டு அரங்கின் திருத்தப் பணிகள் தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டிற்காக கிடைக்கப்படவேண்டிய பெறுமதியாகும். 1996 ஆம் ஆண்டில் நிகழ்ந்த இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கைகளை கண்டறிவது கடினமானதாக இருக்கின்றது. எவ்வாறாயினும் திறைசேரியின் அங்கீகாரத்துக்கமைய இத்தகைய நிலுவைகள் புத்தகங்களிலிருந்து பதிவளிப்பதற்காகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு பொது தொழில்முயற்சிகள் தொடர்பான செயற்குழு மூலம் விதித்துரைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக திறைசேரியிடம் அங்கீகாரம் கோரப்பட்டிருப்பதுடன் அதற்காக இது வரை எதுவித பதிலும் வழங்கியில்லாததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மூலம் சிபார்சுகளை பெற்றுக்கொள்வதற்காக சமர்பிக்கப்பட்டுள்ளது. இந்த கொடுக்கல் வாங்கலானது ஏறத்தாழ 20 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்திருப்பதனால் அக்குறித்த நிறுவனங்களுடன் ஏற்படுத்தியுள்ள உடன்படிக்கைகள் மற்றும் தொடர்புடைய தகவல்களை கண்டறிவதற்கு கடினமானதாக இருப்பதை பணிவுடன் அறியத்தருகின்றேன்.
தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் செலுத்தப்பட வேண்டிய விலைப்பட்டியல்கள்	39,836,941	தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை காலாவதியான கிடைக்க வேண்டிய விலைப்பட்டியலாக ரூபா 39.83 மில்லியன் பெறுமதியைக் காட்டுகின்றது. இந்த பெறுமதியானது கம் உதாவ கருத்திட்டம், இரத்தினபுரி நவ நகர அபிவிருத்தி மற்றும் குணசிங்ஹபுர காணி மிஹிந்து மாவத்தைக்காக முகாமைத்துவ சேவைக்காக கிடைக்க வேண்டிய பெறுமதியாகும். நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினுடைய கணக்கு அறிக்கைகளின்படி நிலுவைகளுக்கிடையே வேறுபாடுகள் இருப்பதை காட்டியிருப்பினும், அது தொடர்பான அறிக்கைகளை கண்டு பிடித்து கொள்வது கடினமானதாக இருந்திருக்கிறது. இந்த வித்தியாசம் தொடர்பிலான தகவல்கள் தேசய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கோரியிருப்பதுடன், பதில்கள் இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை.
நகர அபிவிருத்தி மற்றும் பொது பயன்பாடுகள் அமைச்சு	25,007,130	2001 ஆம் ஆண்டில் செத்சிறிபாய கட்டம் 1 வளாகத்தில் இருந்த நகர அபிவிருத்தி மற்றும் பொது பயன்பாடுகள் அமைச்சினை புனரமைப்பு செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஏற்கப்பட்ட செலவினங்களை இந்த கடன்பட்டோர்கள் நிலுவைகள் மூலம் காட்டப்படுகின்றது. 2001 ஆம் ஆண்டாகும்போது, நகர அபிவிருத்தி மற்றும் பொது பயன்பாடுகள் அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபை செயற்பட்டது.
கொழும்பு மாநகர சபை	4,447,302	1976 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சதுட்டு உயன கருத்திட்டத்துக்காக WHO UHP தனியார் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் மேற்பார்வை கட்டணங்களாக அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 4,447,302/= இந்த நிலுவைகள் காட்டுகின்றன. மிக நீண்ட காலத்திற்கு முன்பு நிகழ்ந்த இந்த கொடுக்கல் வாங்கல்களை தீர்த்துக் கொள்வதற்கு தேவையான தகவல்களை பெற்றுக் கொள்வது முடியாமலுள்ளது.

(உ) **அவதானிப்பு**

எமது கணக்கு புத்தகங்களின் பிரகாரம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் கிடைக்கவேண்டிய கடனாளி நிலுவை சரியானதாகும். இவ்வாறு உரிய நிறுவனத்துடன் உள்ள மாற்றங்களைத் தீர்ப்பதற்காக அக்குறித்த நிறுவனத்துடன் கலந்துரையாடல் சுற்றுக்கள் பல நடாத்தப்பட்டிருப்பதுடன் அதன் மூலம் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடுகளின் பிரகாரம் அவர்களின் நிலுவை உருவாகியுள்ள முறைக்காக தேவையான ஆவணங்களை வழங்குதல் அவர்களுக்கும் பிரச்சினையாகவுள்ளது. அதற்கமைய, இந்த அதிகாரசபையின் நிலுவைகள் சரியானதென பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஊ) **அவதானிப்பு**

03 நிறுவனங்களுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் வழங்கப்பட்ட காணிகளிலிருந்து ரூபா 119.14 மில்லியன் அறவிடப்பட வேண்டுமென காட்டப்பட்டுள்ளது. அந்நிறுவனங்களின் மத்தியிலிருந்து கொழும்பு கொமர்ஷல் பொறியியல் தனியார் கம்பனியிற்கு 2000.03.15ஆந் திகதி முதல் ரூபா 108,000,000.00ஆன

குத்தகைப் பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்த காணி 2013.11.15ஆந் திகதி 842 ஆம் இலக்கம் கொண்ட உடன்படிக்கை மூலம் இரத்துச் செய்யப்பட்டு குத்தகை தவனை அறவிடுதல் நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் 1995.10.11ஆந் திகதி முதல் குத்தகைப் பெறுமதி ரூபா 3,228,750.00 தொகைக்கு கட்டுமான நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணியிலிருந்து உரிய தொகை அறிவிடப்படாதுள்ளதை காட்டப்பட்டிருப்பினும் , அக்காணி இந்த நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடுவதற்கு முன்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருப்பதுடன், கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டிருந்த 1986/34 கிடைப்பட இலக்கம் துண்டு இலக்கம் 1 மற்றும் 2 என்ற முழு காணியிற்குரிய 99 வருட குத்தகைப் பெறுமதியான ரூபா .9,765,000.00 இந்த அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன், பின்னர் 184.5 பேர்ச் துண்டு இலக்கம் 2 கொண்ட நிலப்பகுதிகள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மீள் கட்டுமான நிறுவனம் (ICATD) இற்கு குத்தகைக்கு விடுவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. அங்கு கூட்டுத்தாபனத்தினால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்த துண்டு இலக்கம் 02 நிலப்பகுதியின் பெறுமதி ICTAD இனால் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டு இந்த அதிகாரசபையால் காணி குத்தகையின் அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ளது. அதற்கமைய இப்போதைக்கு அதிகாரசபைக்கு பெயரளவினாலான நில வாடகை மாத்திரமே அறவிடப்பட வேண்டியுள்ளது.

இந்த நிலப்பகுதி 1983 ஆம் ஆண்டிலிருந்து ஈஸ்ட் வெஸ்ட் கம்பனியிற்கு 99 வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், அங்கு மொத்த குத்தகை பெறுமதி ரூபா 7, 920,000/- ஆன தொகை இந்த குத்தகை உரிமை அப்போதிருந்த கையளிக்கும் கொள்கைக்கமைய உரிய அங்கீகாரங்கள் மற்றும் கட்டணங்கள் அறவிடப்பட்டு மீதி குத்தகைக் காலத்துக்காக CIC உரைக் தனியார் கம்பனியிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆகையால் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குத்தகைத் தவணைத் தொகை மேலும் ஒப்படைப்பாளரிடமிருந்து அறவிடப்பட தேவையில்லை. வருடாந்தம் நில வாடகை மாத்திரம் ஒப்பந்தத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட்டுள்ளது.

கணக்காய்வு விசாரணையில் காட்டப்பட்டுள்ள விதத்துக்கு 2014.02.24 குத்தகைப் பெறுமதியல்லாது திருமதி டீ.ஜீ. அசோக்க அவர்களுக்கு காணி ரூபா 100.00 ஆன பெயரளவிலான நில வாடகைக்கே வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய குத்தகைப்பெறுமதி இல்லை.

(ஏ) **அவதானிப்பு**

இந்த காணிகள் குத்தகைக்கு விடும் தொழிற்பாட்டில் ஆரம்ப நடவடிக்கை அதிகாரசபையின் காணிப் பிரிவினால் மேற்கொள்ளப்படும்.அதற்கமைய இந்த கொடுக்கல் வாங்கல்கள் இன்னும் முடிவடையவில்லை. கொடுக்கல் வாங்கல்கள் இறுதிக் கட்டத்தில் முழு தொகைக்கான உரிய நாட்டைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் மதிப்பு கூட்டிய பெறுமதியின் அடிப்படையில் குத்தகை அறவிடுவதற்குள்ளது.

2.5 சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் உடன்படாதவைகள்

	சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் குறிப்புகள்	உடன்படாதவைகள் ----------
(அ)	1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஊழிய நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டம்	**அவதானிப்பு** இலக்கம் 2.3.2 (ஏ) (ii) இல் உள்ள பதில்கள் ஏற்புடையதாகும்.
(ஆ)	2007 ஆம் ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்(i) 383 ஆம் பிரிவு (ii) 330 ஆம் பிரிவு	**அவதானிப்பு** கம்பனிகள் சட்டத்தின் 383 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு, கணக்குகள் தீர்க்கப்பட்டு கலைப்பது தொடர்பாக ஆரம்பிப்பதற்கு முன் இரண்டு வருடங்களுக்குள் ஒழித்துக்கட்டுநர் வரையறுக்கப்பட்ட பேலியகொட களஞ்சிய வளாக கம்பனியின் அல்லது தொடர்புடைய கம்பனியான நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக செயலாற்றியில்லாததனால், உமது கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டவாறு கம்பனிகள் சட்டத்தின் 383 பிரிவுக்கு முரணாக ஒழித்துக்கட்டுநர் நியமிக்கப்படவில்லை. **அவதானிப்பு** கம்பனிகள் கலைக்கப்பட்டு அக்கம்பனியிற்குச் சொந்தமான களஞ்சியசாலை வளாகம் அமைந்துள்ள காணி இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்டிருப்பினும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அக்குறித்த காணி பொறுப்பேற்பதற்குத் தேவையான நடவடிக்கை

		எடுக்காமையின் காரணமாக கம்பனியின் கலைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அதன் ஒழித்துக்கட்டுநருக்கு முடியாதிருந்தது. எவ்வாறாயினும், அமைச்சரவையின் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெற்று அதன் சொத்துக்கள் 2017.07.31 ஆந் திகதி முதல் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
(இ)	2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க பொது வசதிகள் (திருத்த) சட்டம்	**அவதானிப்பு** நகர புத்துயிரூட்டல் கருத்திட்டத்தின் கீழ் மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட முதல் வீடமைப்பு கருத்திட்டமான" மிஹிது சென்புற வீடமைப்பு கருத்திட்டத்திற்காக" 2 சந்தர்ப்பங்களில், கூட்டுரிமை முகாமைத்துவ சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 12,984,037.99 மற்றும் ரூபா 47,467.41 படியான மொத்த தொகை செலுத்தி கூட்டுரிமை முகாமைத்துவ சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாவது இந்த அதிகார சபையிற்கு " சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14 இல் அமைந்துள்ள "சிறி முத்து உஹன" வீடமைப்பு கருத்திட்டத்துக்கான கூட்டுரிமை முகாமைத்துவ சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஆவணங்கள் அனைத்தும் தயார்படுத்தியதன் பின்னர் அக்குறித்த அதிகார சபையின் மூலம் அதற்காக முன்னுரிமைக் கட்டணமாக ரூபா 15,262,782.96 தொகை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
(ஈ)	2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் V ஆம் அட்டவணையின் 7 ஆம் பந்தி	அவதானிப்பு அது தொடர்பில் எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக 2017.08.31 ஆந் திகதி முகாமைத்துவ சபைக்கு முகாமைத்துவ சபை ஆவணத்தின் மூலம் சமர்பிக்கப்பட்டதுடன், அக்குறித்த முன்மொழிவுக்காக பின்வரும் நிபந்தனைகளின் கீழ் அங்கீகாரம் பெற்றுள்ளது. (i) முறைகேடான கட்டுமானங்களுக்காக தண்டப்பணம் சரியான முறையில் கணக்கிடப்பட்டு முன்வைத்தல் (ii) மேற்குறிப்பிட்ட முன்மொழிவை நடைமுறைப்படுத்தும் பொருட்டு சட்டரீதியான தொழிற்பாடு சரியான முறையில் நிறுவுதல். (iii) விடயத்துக்குப்பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற ஆலோசனைக் குழுவுக்கு உரிய முறைகேடான கட்டுமானங்கள் தொடர்பான முன்மொழிவுகளை சமர்பித்தல். அடையாளங் காணுகின்ற முறைகேடான கட்டுமானங்களிலிருந்து இப்போதாகும்போது 28 சொத்துக்களில் முழு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், 2017.08.31 ஆந் திகதி முகாமைத்துவ சபைக்க முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கமைய 06 சொத்துக்களுக்காக உரிய உள்ளடக்க கட்டணங்கள் அறிவிடப்பட்டதன் பின்னர் மதியுரைக்குழு ஊடாக சட்டரீதியாக்கும் இயலுமை காணப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட மதியுரைக் குழு நியமிப்பதற்காக இப்போதாகும்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்கலத்தில் அடையாளங் காணப்பட்ட கட்டுமானங்கள் தொடர்பாக முழு மதிப்பாய்வு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகின்றன.
(உ)		

	1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் (திட்டமிடல் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கட்டளைகள்) (i) இல. 18(1) (ii) ஐந்தாவது அட்டவணையில் இலக்கம் 09 பந்தி	**அவதானிப்பு** இந்த காணி தொடர்பான அங்கீகாரத்தை வழங்கும்போது சரியான நடைமுறையை பின்பற்றப்படாததைக் காணக்கூடியதாகவுள்ளது. அதற்கமைய சம்பந்தப்பட்ட அலவலருக்கு எதிராக ஒழுக்காறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **அவதானிப்பு** இந்த கட்டிடத்தில் அடிப்படை திட்டங்களின் தீர்மானத்தை வெளியிடுவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை அறவிடப்பட்டுள்ள கட்டணம் 37/2013 ஆம் இலக்க மற்றும் 2013.01.23 ஆந் திகதிய முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அளவு அமைய அறவிடப்பட்டுள்ளது. கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ச.மீ அறவிடப்பட வேண்டிய சேவைக் கட்டணம் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் (Development Permit) வெளியிடும்போது அறிவிடப்பட வேண்டும். எவ்வாறாயினும் இந்த விண்ணப்பபத்திரத்திற்காக இது வரை அபிவிருத்தி அனுமதிப்பத்திரமொன்று அதிகாரசபையினால் வெளியிடப்படவில்லை.
(ஊ)	2009 மே மாதம் 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகள்	**அவதானிப்பு** நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இணை நிறுவனங்களில் தொழில் நெறிஞர்களுக்காக தொழில்சார் கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதுடன் தொழில்சார் தகைமைகளோடுகூடிய அனுபவமுள்ள அலுவலர்கள் மேலும் நிறுவனத்தின் நிறுத்தி வைப்பதற்கு மற்றும் சேவை தேவையின் அடிப்படையில் புதிய தொழில் நெறிஞர்களை ஆட்சேர்க்கும்போது நிலவிய சிக்கலான நிலைமையின் அடிப்படையில் முகாமைத்துவ சபைக்கு காரணங்களை முன்வைத்ததன் பின்னர் 2014 ஆம் ஆண்டில் இந்த கொடுப்பனவுக்காக முகாமைத்துவ சபை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த படி கொடுப்பனவு செய்யும் நடைமுறை முறைசார்படுத்துவது தொடர்பில் அதிகாரசபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு சிபார்சுகள் சமர்பிக்கப்பட்டதுடன் அக்குறித்த சிபார்சுகளுக்காக நிகழ்கால முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது. அதற்கமைய எதிர்காலத்தில் இந்த கொடுப்பனவு தொடர்பில் திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.
(எ)	2016 மார்ச் 09 ஆந் திகதி 05/2006 ஆம் இலக்கம் கொண்ட அரச நிர்வாக மற்றும் முகாமைத்து அமைச்சின் சுற்றறிக்கை	**அவதானிப்பு** 2012 வருடத்தில் முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்ட போக்குவரத்து கொடுப்பனவு போதுமானதாக இல்லாததனால் மற்றும் பொருத்தமான நிலைமையில் வாகன அதிகாரசபையின் மூலம் வழங்கப்பட்டிருந்த அதிகாரசபை மூலம் வழங்கப்பட்டிருந்த சிக்கலான நிலைமையின் அடிப்படையில் 2015 வருடத்தில் முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் மூலம் இந்த கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டது. அக்குறித்த அங்கீகாரத்தின் பிரகாரம் தவசாளர் மற்றும் பணிப்பாளர் நாயகத்துக்காக பொருத்தமான நிலைமையில் வாகனமொன்று அதிகாரசபை மூலம் வழங்கும் வரை இந்த கொடுப்பனவு வழங்கப்படும். (ii) அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குள் உள்ளடக்கப்படாத குறிப்பிட்ட பதவியுயர்வு நடைமுறையிலிருந்து விலகப்பட்ட 04 பதவிகளுக்காக மீளாய்வு வருட இறுதி வரை ரூபா

		1,850,000 வாகன கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. **அவதானிப்பு** சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் இந்த பதவிகளுக்காக பதவியுயர்வு வழங்கப்பட்டிருப்பதுடன்இ இப்போதைக்கு தயார்படுத்தியுள்ள புதிய புதிய பதவியணியினர் தொகுதியிற்கு அவர்கள் பணிப்பாளர்களாக உட்கிரகிக்கப்பட்டுள்ளது.
(ஏ)	1987 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 08 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் சுற்றறிக்கை மற்றும் 1993 நொவெம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்கம் கொண்ட திட்டமிடல் சுற்றறிக்கை	**அவதானிப்பு** இது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து பணிப்பாளர்கள், பிரதி பணிப்பாளர்கள், உதவி பணிப்பாளர்கள் மற்றும் நிலைய பொறுப்பதிகாரி விழிப்பூட்டப்படடுள்ளனர். அதற்கமைய சில போதுமானளவு தகவல்கள் உரிய கணக்குகள் தொடர்பாக இப்போதாகும்போது வழங்கப்பட்டுள்ளது.அதற்கமைய, சில உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்போதுள்ள கணக்குகள் நிலுவை அனுப்பப்பட்டிருப்பதுடன் இன்னும் கணக்குகள் திறக்கப்படாதுள்ள பிரதெச சபைகள் குறிப்பிடப்பட்டு கடிதங்கள் அனுப்பியுள்ளன.இப்போதாகும்போது உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கணக்குகள் திறக்குமாறு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது.
(ஐ)	2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை 4.2.6 பந்தி	அவதானிப்பு 2016 ஆம் ஆண்டில் முதல் தவணையாகும். முன்னேற்ற அறிக்கை 2016 மே மாதம்17 ஆந் திகதி மற்றும் ஏனைய தவணைகளில் முன்னேற்ற அறிக்கை குறிப்பிட்ட திகதியிற்கு முன்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்புகள் 01,02,03,04,05) மேலும்,2015/12/31 ஆந் திகதி "2016 வரவு செலவு திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்ட கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்துதல்" என்ற வாசகத்தால் வெளியிடப்பட்ட கடிதத்தின் மூலம் (இணைப்புகள் 06) பின்னர் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளதால் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைய புதிய கருத்திட்டங்களை அடையாளங் காணல் மற்றும் புதிய செயல்முறைத் திட்டங்கள் தயாரித்தல் போன்ற அடிப்படைக் காரணங்களை மேற்கொள்வதற்கு காலம் எடுத்தல் மற்றும் செயல்முறைத் திட்டம் முதலாவது தவணைக்குள் திருத்தம் செய்தல் பல தடவைகள் இடம்பெற்றுள்ளதால் முதலாவது தவணையில் முன்னேற்ற அறிக்கை 2016 மே மாதம் 17 ஆந் திகதி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
	(ii) 8.2.3 பிரிவு	**அவதானிப்பு** நகர அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி குறிக்கோள்களுக்கு இயைவாக மற்றும் அப்போதைய அபிவிருத்தி தகவுதிறன்களுக்கு அமைய Urban Investment & Hotel Development Company, Urban Investment & Real Estate Company Pvt Ltd, Orchard Housing Development Company Pvt. Ltd සහ Waters Edge Hotel Development Limited என்ற துணைமைக் கம்பனிகள் முகாமைத்துவ சபை முடிவுக்கு இயைவாக நிறுவப்பட்டது. (முகாமைத்துவ சபை முடிவு இல. 318/2014, 319/2014, 320/2014, 311/2014). இத்தகைய முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் அடிப்படையில், அமைச்சரவையின் அனுமதியினை பெற்றுக் கொள்வதற்காக கடித தலை இலக்கங்கள் MOD /UD /E10/CP/05 , MOD /UD /E10/CP/04 , MOD /UD /E10/CP/03 , MOD /UD /E10/CP/02 இன் கீழ் அப்போதைய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அமைச்சரவை பத்திரங்கள் ஒப்படைக்கப்பட்டிருப்பினும் அரசியல் அதிகார சபையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக, சம்பந்தப்பட்ட

	1 (iii) 9.2 (ஈ) பிரிவு (iv) 9.14 பிரிவு	அமைச்சரவை அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள துணைமைக் கம்பனிகளில் தொழிற்பாடு தொடர்பாக புதிய முகாமைத்துவ சபையுடன் கலந்துரையாடி அது தொடர்பாக இறுதி தீர்மானமாக Urban Investment & Hotel Development Company, Urban Investment & Real Estate Company Pvt Ltd என்ற இரு கம்பனிகள் மாத்திரம் பராமரிப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக சட்டமா அதிபரின் சிபார்சுகளுக்கமைய அதிகாரசபையின் சட்டத்தை திருத்தம் செய்வதற்காகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **அவதானிப்பு** இப்போதாகும்போது பதவியணியின் இணைப்பாக்கத்திற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **அவதானிப்பு** தாபன விதிக்கோவைக்கமைய செயலாற்றுவதற்கு முகாமைத்துவ சபை அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருப்பதுடன், இப்போதைக்கு அதற்கமைய செயலாற்றப்பட்டு வருகின்றது.
(ஓ)	2008 ஜூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை 2015 மே 25 ஆந் திகதி පීඊඒ 1/2015 ஆம் இலக்கம் கொண்ட அரச தொழிற்முயற்சிகள் சுற்றறிக்கை	**அவதானிப்பு** அரச நிர்வாக சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதி குத்தகை முறைக்கு வாகனங்களை கொள்வனவு செய்து அக்குறித்த வாகனங்கள் பணிப்பாளர்களின் உத்தியோகபூர்வ வாகனங்களாக இணைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கையெடுக்கப்படும்.
(ஔ)	1994 ஜூன் 17 ஆந் திகதி அரச அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 23/91	**அவதானிப்பு** இப்போதைக்கு இந்த நியமனம் ஒப்பந்த நியமனத்திற்கு மாற்றப்பட்டிருப்பதுடன், இந்த அலுவலர் எதிர்காலத்தில் நடவடிக்கை ஒப்படைப்பின் அடிப்படையில், அதிகாரசபையின் சேவைக்காக ஈடுபடுத்திக்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.
(க்)	2006 செப்டெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை	**அவதானிப்பு** தன்முனைப்பாற்றல் ரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பங்களிப்புச் செய்கின்ற முக்கிய நிறுவனமான நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கடமைப்பொறுப்பு மற்றும் பரந்தளவு விடயபரப்பு இருப்பதன் காரணமாக அவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டு அவர்களின் ஊழியர்களின் ஆர்வத்தை மேம்படுத்தும் பொருட்டு மற்றும் அவர்களின் தலைமைத்துவத்தின் மூலம் அக்குறித்த கடமைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் தேவைப்படுவதால் இவ்வாறு பதவியுயர்வு வழங்கப்பட்டிருப்பதுடன் அதற்காக இப்போதைக்கு புதிய ஆட்சேர்ப்புகள்/ பதவியுயர்வு நடைமுறைக்காக தாயரித்திருப்பதுடன் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படும். மேலும் 2017 வருடத்தில் தயார்படுத்தப்பட்ட பதவியுயர்வு நடைமுறை செயலாற்றுகையையும் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் அதற்கமைய பதவியுயர்வு வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கையெடுக்கப்படும்.
(க)	2006 செப்ரெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2006 ஏப்ரல் மாதம் 25 ஆந் திகதிய 06/ 2006 ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை	**அவதானிப்பு** எதிர்காலத்தில் நடைப்பெறும் நேர்முக பரீட்சைகளின்போது இந்த சுற்றறிக்கைக்கையை செயல்புரிவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.
(கா)	தாபன விதிக்கோவையின் 5.2.6 பிரிவு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின்	**அவதானிப்பு** ஏற்கனவே நேர்முக பரீட்சைக் குழுவுக்காக 05 அலுவலர்களை பங்கேற்கச் செய்வதற்கு

	ஆட்சேர்க்கும் நடைமுறையில் 4.4	நடவடிக்கையெடுக்கப்படும்.
(கி)	இலங்கை சனாநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவையின் நி.பி.. 380	**அவதானிப்பு** இந்த கருத்திட்டத்துக்காக பொருத்தமான வங்கியொன்றினைத் தேர்நதெடுக்கும்போது ஏற்கனவே இந்த அதிகாரசபையில் அரச வங்கிகளில் பராமரிக்கப்படுகின்ற கணக்குகள் மீது வழங்கப்படுகின்ற வட்டி விகிதாசாரங்களில் கவனம் செலுத்தப்படட்டுள்ளது. அதேபோன்று கணக்குகளை பேணுதல் மற்றும் ஆரம்பிக்கும் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டிருப்பதுடன் அதற்கமைய அச்சந்தர்ப்பமாகும்போது தேசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்குவதற்கு இணங்கிய வட்டி விகிதாசாரங்கள் மற்றும் வங்கி சேவைகள் ஏனைய அரச மற்றும் தனியார் வங்கிகளுடன் ஒப்பிடும்போது அவை இவ் அதிகாரசபைக்கு பயனுடையதாக இருப்பதனைக் காணக்கூடியதாக இருந்ததனால் அப்போதிருந்த நிர்வாக அதிகாரசபையினால் முகாமைத்துவ சபையினால் ஆரம்ப அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த கணக்கை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக காட்டுவதில் விரும்புகின்றேன்.
(கீ)	2001 சனவரி 26 ஆந் திகதி PF/PE 12 ஆம் இலக்கம் கொண்ட அரச நிதி சுற்றறிக்கை	**அதானிப்பு** 2001 சனவரி 26 ஆந் திகதி அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் PF/PE 12 சுற்றறிக்கை திருத்தம் செய்து 2001 மார்ச் 20 ஆந் திகதி அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் PF/PE 13 சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருப்பதுடன் அத்திருத்தங்கள் மூலம் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அரச வங்கிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துவது தேவையற்றதெனவும் அக்குறித்த வங்கி நடவடிக்கைகள் தாபனத்திற்கு அதிக நன்மைகள் மற்றும் பயன்படும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் காட்டப்பட்டுள்ளது.
(கு)	நிதி மற்றும் திட்டமிடல் செயலாளரின் 1997 சனவரி 24 ஆந் திகதி அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 116 ஆம் இலக்கம் கொண்ட அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள் அழைக்கப்பட்ட சுற்றறிக்கை பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் இலக்கம் PED/12 கொண்ட சுற்றுநிருபத்தின் 9.4 பந்தி	**அவதானிப்பு** 2016 ஆம் ஆண்டில் இவ்வாறான 09 அலுவலர்களின் சம்பளமான ரூபா 2,194,327.52 ஈடு செய்யப்பட்டிருப்பதுடன் மீதிச்சம்பளம் ஈடுசெய்தல் இந்த வருடத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.
(கூ)	2016 சனவரி 08 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்கம் கொண்ட அரச நிதி சுற்றறிக்கை	**அவதானிப்பு** நகர புத்துயிராக்கல் கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக அத்தேவைப்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் கண்டறிந்து இந்த மதியுரையாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதுடன் மேலும் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் பெற்றுள்ள தகைமைகளைக் கருத்திற்கொண்டு சேவை நீடிப்புகளை வழங்கும்போது இந்த மதியுரையாளர்கள் அதிகாரசபையின் பொருத்தமான பதவிக்கு அமர்த்துவதற்கு நடவடிக்கெடுக்கப்படும்.
(கெ)	2004 சனவரி 3 ஆந் திகதி 01/2003 ஆம் இலக்கம் கொண்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை	**அவதானிப்பு** இந்த அடிப்படையில் தற்போது சேவையில் 06 உத்தியோகத்தர்கள் மாத்திரமே ஈடுபடுத்தியுள்ளனர்.மேலும் எதிர்காலத்தில் சேவைத் தேவையின் அடிப்படையில் முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் கீழ் செயல் ஒப்படைப்பு அடிப்படையில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அக்குறித்த உத்தியோகத்தர்களின் சேவை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.
(கே)	2016 சனவரி 29 ஆந் திகதி SEC 2016/02 கொண்ட மதிப்பு கூட்டும் வரி திருத்தம் தொடர்பான சுற்றறிக்கை	**அவதானிப்பு** 2016 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் மூலம் மதிப்புக் கூட்டிய வரி மற்றும் நாட்டைக் கட்டியெழுப்பும் வரி விகிதாசாரம் 2016.01.01 ஆந் திகதியிலிருந்து முறையே 12.5% மற்றும் 4% ஆக திருத்தியமைக்கப்பட்டு அமுல்படுத்துவதற்கு 2016வரவு செலவுத்திட்ட முன்மொழிவுயப்பட்டிருந்தது.

		காலி ஹெரிடேஜ் லங்கா தனியார் கம்பனியிற்கு 99 வருட குத்தகை அடிப்படையில் காலி ஹில்டொப் காணி குத்தகைக்கு வழங்கியதன் மூலமாக கிடைக்கவேண்டிய நிதி குறித்த நிறுவனத்தால் இந்த அதிகாரசபைக்கு 2016.01.06 செலுத்தப்பட்டிருப்பதால் அத்திகதியில் உள்ளபடியான வரி விகிதாசாரங்களான அதாவது மதிப்புக் கூட்டிய பெறுமதியின் மீது வரி 12.5% மற்றும் நாட்டைக் கட்டியெழுப்பும் வரி 4% ஆக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக அதிகாரசபையினால் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ள குத்தகை வருமானம் மற்றும் அத்திகதியில் உள்ளவாறான 12.5% விகிதாசாரத்தின் கீழ் அறவிடப்பட்ட குத்தகை வருமானத்துக்கிடையே நிலவும் வித்தியாசம் குத்தகைதாரருக்கு திருப்பிச் செலுத்துவதற்கு அல்லது அதிகாரசபையின் வருமானமாக கருதுதல் தொடர்பாக முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்று எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுப்பதாகவும் மேலும் அறியத்தருகின்றேன்.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி பெறுபேறுகள்

அவதானிப்பு

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் 2016 ஆம் வருடத்துக்குள் அதிகாரசைபக்குச் சொந்தமான வளங்கள் மிகவும் வினைத்திறன் மற்றும் விளைவுபெருக்கமான முறையில் பயன்படுத்தியதன் மூலம் செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கும் , வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் மூலம் 2016 ஆம் வருடத்துக்குள் முன்னைய வருடத்துக்கு நிகராக இவ்வாறு தேறிய இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்கு அதிகாரசபைக்கு முடியுமாக உள்ளது.

3.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

அவதானிப்பு

2015 ஆம் ஆண்டில் 0.34:1 ஆன நடைமுறை விகிதாசாரம் 2016 ஆம் ஆண்டில் 0.35:1 ஆக திருத்தியமைக்கப்பட வேண்டும். அதற்கமைய, 2015 ஆம் ஆண்டில் நடைமுறை விகிதாசாரத்தை கணக்கிடும்போது நடைமுறைச்சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புகள் முறையே ரூபா.9,578,231,882 மற்றும் ரூபா 27,665,347,785 ஆக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் அக்குறித்த பெறுமதிகள் முறையே ரூபா 12,355,346,517 மற்றும் ரூபா.35,220,993,820 ஆக இருந்தது. அதற்கமைய, முன்னைய வருடத்துக்கு நிகராக மீளாய்வு வருடத்தில் நடைமுறை பொறுப்புகளுக்குள் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்கள் மற்றும் பிடித்துவைக்கப்பட்ட நிதியங்களில் வளர்ச்சி ஏற்பட்டள்ளது. அதேபோன்று முன்னைய வருடத்துக்கு நிகராக மீளாய்வு வருடத்துக்குள் நடைமுறைச் சொத்துக்குகளுக்குள் உளளடக்கப்பட்ட திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய நிதியங்களில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதற்கமைய இரு வருடங்களுக்குரிய வகையில் கணக்கிடப்பட்ட நடைமுறை விகிதாசாரம் சரியென அறியத்தருகின்றேன்.

3.3 அதிகார சபைக்கு எதிராக அல்லது அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நிகழ்வுகள்

அவதானிப்பு

மேற்குறிப்பிட்ட விடயத்துடன் தொடர்புடைய வழக்கு தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவு முடிவுசெய்வதற்காக சட்டப் பிரிவினால் நீதிமன்றிற்கு போதுமான தகவல்களை வழங்கியதன் மூலம் மனுதாரர்களின் வேண்டுகோள் இரத்துச் செய்யப்பட்டு 2016.11.18 ஆந் திகதி மேன்முறையீட்டு அதிகாரசபையினால் உத்தரவு பிறப்பித்திருப்பதுடன் அதன் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய காணியின்

அபிவிருத்தி நடவடிக்கைகளைள் முன்னெடுத்து செல்வதற்காக எதுவித சடடரீதியான தடங்களும் இல்லாதிருப்பதுடன் எதிர்கலத்தில் உரிய அபிவிருத்தி நடவடிக்கைகைள் மேற்கொள்ளப்படும்.

4. தொழிற்பாட்டு மீளாய்வு

4.1 செலயாற்றுகை

(අ) அவதானிப்பு

2016 ஆம் ஆண்டிற்குள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கிருந்த 22 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற தலைப்பின் கீழ் வரும் அவதானிப்புகள்.

	கருத்திட்டம்	விபரம்
01	குரிகடுவான் காட்சி மேடை (Kurikadduwan Viewing Deck)	இந்த கருத்திடடம் 2015 ஆம ஆண்டில் கருத்திட்ட நிர்மாண பணிகளுக்காக ஒப்படைத்த ஒப்பந்ததாரர் உரிய பணிகள் முடிவு செய்திருக்காமை காரணமாக அக்குறித்த ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. (Contract Terminated) உரிய ஒப்பந்ததாரர் நடுத்தீர்ப்பிற்காக (Arbitration) நடுவர் குழுவிற்கு (Arbitration Board) முன்வைக்கப்பட்டுள்ளார்.அத்தொழிற்பாடு 2016 வருடமாகும்போது முடிவடையுமென எதிர்பார்க்கப்பட்டு, 2016 செயல்முறைத் திட்டத்திற்கு இந்த கருத்திட்டம் உள்ளடக்கப்பட்டிருப்பினும் அத்தொழிற்பாடு முடிவடையவில்லை. ஆனாலும் 2017 ஆம் ஆண்டாகும்போது இந்த தொழிற்பாட்டை முடிவு செய்து மீண்டும் வேலைகள் தொடங்கப்பட்டு கருத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது
02	கராபிட்டிய மருத்துவமனையுடன் தொடர்புடைய கலப்பு அபிவிருத்தி கருத்திட்டம் (Hospital Related mixed Development at Karapitiya)	இந்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்தும்போது குறித்த பிரதேசத்தில் குடியமர்ந்திருந்த முஸ்லீம் மக்கள் மற்றும் கடை உரிமையாளர்களினால் எதிர்ப்பு தெரிவித்து வழக்கு தொடுக்கப்பட்டிருப்பதுடன் அவ்வழக்கு விசாரணை 2016 ஆம் ஆண்டில் முடிவடையுமென எதிர்பார்த்து செயலாற்றுகை திடட்டத்திறகு உள்ளடக்கப்பட்டது. ஆனாலும் அவ்வழக்கு விசாரணை எதிர்பார்த்த காலப்பகுதியில் முடிவடையாததனால் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை. ஆனாலும் 2017 ஆம் ஆண்டாகும்போது வழக்கு விசாரணை முடிவடைந்ததனால் கருத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்காக வெற்றிகரமான நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
03	பிரம்மஞானம் கட்டிடம் சீரமைப்பு (Refurbishment of Theosophical Building)	இந்த கருத்திட்டம் மேற்கத்திய பிராந்திய மாநகர திட்டத்தின கீழ் வரும் போக்குவரத்து திட்டத்தின் உப திட்டத்தின் கீழுள்ள பிரதேசமாக இருப்பதனால் அதன் உப திட்டத்தை மேற்கொள்ளும் வரை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ குழு முடிவு செய்துள்ளது.
04	ஜா எல நகர அபிவிருத்தி (Ja-Ela Township Development)	ஜா- எல வர்த்தக வளாகத்தினை நிர்மாணித்தல் இந்த கருத்திட்டத்தின் நோக்கமாகும். அங்கு வியாபாரிகளின் கடைகளின் சீரமைப்பு பணிகள் நகர சபையினால் மேற்கொள்வதற்கு இருப்பினும், நகர சபையினால் உரிய சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்கிருந்த காணி, நிர்மாணப் பணிகளுக்காக ஒப்படைக்கப்படாததனால் இந்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது.
05	இரத்மலானை நகர அபிவிருத்தி (Rathmalana Town shift Development)	பெலன்கடே சந்தை நிர்மாணித்தல் இந்த கருத்திட்டத்தின் நோக்கமாகும். அங்கு கடைகள் மற்றும் 6 வீடுகளின்

		சீரமைப்பு பணிகள் நகர சபையினால் மேற்கொள்வதற்கு இருப்பினும், நகர சபையினால் உரிய சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்கிருந்த காணி, நிர்மாணப் பணிகளுக்காக ஒப்படைக்கப்படாததனால் இந்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது.
06	வெல்லம்பிட்டிய நகர அபிவிருத்தி (Wellampitiya Township Development)	வெல்லம்பிட்டிய பொது சந்தை நிர்மாணித்தல் இந்த கருத்திட்டத்தின் நோக்கமாகும். அங்கு கடைகள் மற்றும் பொலிஸ் களஞ்சியசாலைகள் சீரமைப்பு பணிகள் நகர சபையினால் மேற்கொள்வதற்கு இருந்தது. எனினும் நகர சபையினால் பொலிஸ் களஞ்சியசாலையின் ஒரு பகுதி மாத்திரம் சீரமைக்கப்பட்டது. உரிய சீரமைப்பு பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்கிருந்த காணி, நிர்மாணப் பணிகளுக்காக ஒப்படைக்கப்படாததனால் இந்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது.
07	பாதுக்க நகர அபிவிருத்தி (Padukka Town Development)	பாதுக்க விளையாட்டரங்கு நிர்மாணித்தல் இந்த கருத்திட்டத்தின் நோக்கமாகும். இங்கு, அதிகளவு காணிகள் நிரப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அரசியல் அதிகாரசபையினர் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததுடன், குறித்த மதிப்பீட்டு தொகைக்கமைய அதனை நிறைவேற்ற முடியவில்லை. அதற்கமைய 2017 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டுடன் கருத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.
08	அவிஸ்ஸாவெல நகர அபிவிருத்தி (Awissawella Town Development)	அவிஸ்ஸாவெல பாலம் நிர்மாணித்தல் இந்த கருத்திட்டத்தின் நோக்கமாகும். அதற்காக காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், குறித்த பணம், காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படும்.
09	ஹுனுப்பிட்டிய பாலம் கட்டுமானம் (Hunupitiya Bridge Construction)	நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அடிப்படை திட்டங்கள் தாயரிக்கப்பட்டதுடன், விவரங்கோடுகூடிய திட்டங்களை தாரிக்கும்போது பாலத்தின் நீளத்துக்கமைய செயல் ரீதியாக அப்பாலத்தைக் கட்டுவதற்கு கடினமானதாகவுள்ளதால் அக்கருத்திட்டத்தை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.,
10	மஹர ஸ்ரீ சுமனதிலக்க பிரிவென பல்நோக்கு கட்டிடம் நாரங்வல (Multipurpose Building at Naranwala Sri Sumanakirthi Pirivena at Mahara)	தேசிய பௌதீக திட்டமிடல்கள் திணைக்களம்
11	அத்தனகலை ஸ்ரீ நீலகாராம பல்நோக்கு கட்டிடம் மீவித்தகம்மன (Multipurpose Building at Meevitigammana Sri Neelakerama Viharaya at Attanagalla)	தேசிய பௌதீக திட்டமிடல்கள் திணைக்களம்
12	இமதுவ நகர அபிவிருத்தி (Imaduwa Town Development)	பகுதியொன்று முடிவு செய்துள்ள இந்த நடவடிக்கையின் மீதி வேலைகள் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் பூர்த்தி செய்யப்பட்டதுடன், இந்த நிதி அக்குறித்த நிறுவனத்துக்கு கொடுப்பனவு செய்வதற்காக 2017 வருடத்தில் கோரப்பட்டுள்ளது.
13	லுணுகம்வெஹெர பேருந்துகள் தரிப்பிடத்தை நிர்மாணித்தல் (Construction of Lunugamwehera Bus Stand)	கருத்திட்டத்தின் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

14	வலஸ்முல்ல பேருந்துகள் தரிப்பிடத்தை நிர்மாணித்தல் (Walasmulla Bus Stand)	கருத்திட்டத்தின் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
15	வலஸ்முல்ல சந்தைக் கட்டுமானம் (Walasmulla Pola Development)	கருத்திட்டத்தின் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
16	ருஹுணு ரிதியகம அம்பலங்கொட தடுப்புக் காவல் கட்டுமானம் (Detention Home – Ruhuna – Ridyagama Ambalangoda Contruction)	கருத்திட்டத்தின் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
17	தங்காளை வர்த்தக கட்டிடத்தொகுதி வேலைகள் முடிவுசெய்தல் (Tangalle Commercial Complex Finishing Work)	கருத்திட்டத்தின் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
18	அகுணுகொலபெலஸ்ஸ வர்த்தக கட்டிடத்தொகுதி வேலைகள் முடிவுசெய்தல் (Augunukolapelessa Commercial Complex Finishing Work)	கருத்திட்டத்தின் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
19	மித்தெனிய நகர அபிவிருத்தி (Middeniya Town Development Balance work)	கருத்திட்டத்தின் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
20	நுவரெலியா வர்த்தக கட்டிடத்தொகுதியின் வடிகாலமைப்பு மேம்பாடுகள் (Nuwara Eliya Commercial Complex Drain Improvements)	கருத்திட்டத்தின் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன
21	04 பாஞ்சாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் (Development of 4 Temples by National Physical Planning Department)	தேசிய பௌதீக திட்டமிடல்கள் திணைக்களம்
22	வெள்ளப்பெருக்கு மற்றும் இடர் முகாமைத்துவ நிலைய கட்டுமானம் (Establishment of Flood Control and Mitigation Center)	இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

(ஆ) அவதானிப்புகள்

	கருத்திட்டத்தின் பெயர்	2016/12/31 ஆந் திகதியிற்கான செலவிடப்பட்ட தொகை (ரூ.மி)	அவதானிப்பு
01	கொடகளை ஈரநில பூங்கா அபிவிருத்தி கருத்திட்டம் (Kotagala Wet Park Development Project)	5.0	02 மேலதிக நீர் தேக்கி வைக்கக்கூடியவாறன குளம் அமைத்தல், 02 இரு மதகுகள் கட்டுமானம் மற்றும் தாங்கு சுவர்கள் கட்டுமானம் போன்ற கருத்திட்ட கூறுகளுக்காக ஈடுபடுத்தியுள்ளன. கருத்திட்ட நிலத்தின் உரிமைத் தொடர்பாக சிக்கல்கள் இருப்பதால் அரசியல் அதிகாரசபையின் எதிர்ப்பு

			தெரிவித்தமைக் காரணமாக கருத்திட்டம் இடைநிறுத்தப்பட வேண்டி ஏற்பட்டது.
02	பிரம்மஞானம் கட்டிடம் சீரமைப்பு (Refurbishment of Theosophical Building)	0.07	இந்த கருத்திட்டம் மேற்கத்திய பிராந்திய மாநகர திட்டத்தின் கீழ் வரும் போக்குவரத்து திட்டத்தின் கீழ் இருக்கும் பிரதேசமாக இருப்பதால் அதன் உப திட்டம் மேற்கொள்ளப்படும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபை குழுமுடிவு செய்துள்ளது. கட்டிடத்தின் தர அறிக்கைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய கட்டிடங்கள் மற்றும் அராய்ச்சி நிறுவனத்துக்கு கொடுப்பனவுகள் செய்துள்ளது.
03	வெல்லம்பிட்டிய நகர அபிவிருத்தி (Wellampitiya Township Development)	3.13	வெல்லம்பிட்டிய பொது சந்தை நிர்மாணித்தல் இந்த கருத்திட்டத்தின் நோக்கமாகும். அங்குள்ள கடைகள் மற்றும் பொலிஸ் களஞ்சியசாலைகள் சீரமைப்பு பணிகள் நகர சபையினால் மேற்கொள்வதற்கு இருந்தது. எனினும் நகர சபையினால் பொலிஸ் களஞ்சியசாலையின் ஒரு பகுதி மாத்திரம் சீரமைக்கப்பட்டது. உரிய சீரமைப்பு பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்கிருந்த காணி, நிர்மாணப் பணிகளுக்காக ஒப்படைக்கப்படாததனால் இந்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. குறித்த தொகை அடிப்படை சீரமைப்பு பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
04	இரத்மலானை நகர அபிவிருத்தி	-	செலவு ஏற்கப்படவில்லை.

(இ) **அவதானிப்பு**

கருத்திட்டமொன்றினை ஆரம்பிக்கும்போது ஏற்படமுடியுமான தொழிற்பாடான கருத்திட்ட தத்துவபடியான திட்டங்களைத் தயாரித்தல், கட்டிடக்கலை திட்டங்களைத் தயாரித்தல், பொறியியல் ரீதியான திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் கொள்முதல் தொழிற்பட்டினை மேற்கொண்டதன் பின்னர் ஒப்பந்தம் வழங்கப்படும். அதற்கு அமைவாக மேற்கொள்ளபடும் கருத்திட்டங்களின் முன்மொழிவுகளைத் தயாரித்தல், அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல், மும்மொழிகளில் அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல் போன்ற கருத்திட்டக் கூறுகள் மேற்கொள்வதற்கு 05 மாத காலங்கள் எடுக்கப்படும். மேற்கறிப்பிட்ட காரணங்களை மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு எடுக்கப்படும் காலம் பௌதீக முன்னேற்றத்துக்காக யாதாயினுமொரு தாக்கத்தை ஏற்படுத்தும்.

மேலும் கருத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்ற நிலம் தொடர்பாக எழக்கூடிய பிரச்சிகனகளாக காணிகளை கையகப்படுத்துதல் திட்டமிட்டவாறு இடம்பெறாமை, தொடர்புடைய நிறுவனங்களால் சீரமைப்பு பணிகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படாமை, திட்டமிடப்பட்ட காலத்துக்குள் காணிகளை விடுவிக்கப்படாமை, கருத்திட்ட வளாகத்தின் உரிமைத் தொடர்பாக நிலவிய சிக்கல் காரணமாக கருத்திட்டத்தை மேற்கொள்ளும்போது குறித்த பிரதேசத்தில் அரசியல் அதிகாரசபையின் மற்றும் மக்களின் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டமை, முறைகேடான குடியிருப்பாளர்களால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள்,

ஒப்பந்ததாரரகளுக்கு ஒப்படைக்கப்பட்ட வேலைகள் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படாமைக் காரணமாக ஒப்பநதத்தை முடிவுக்கு கொண்டு வரப்பட்டு (contract termination) நடுத்தீர்ப்பிற்காக(Arbitration) நடுத்தீர்ப்பு குழுவுக்கு (Arbitration Board) முன்வைத்தல் மற்றும் முடிவை வழங்குவது தாமதித்தமை போன்ற காரணங்களை கருத்திற்கொள்ளப்பட்டு 2016 ஆம் ஆண்டு முடிவடையும்போது கருத்திட்டங்களின் குறைந்த செயலாற்றுகை காணக்கூடியதாக இருப்பினும் 2017 ஆம் ஆண்டில் அக்குறித்த கருத்திட்டங்களில் அதிகமானோரின் வேலைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், மக்களின் பாவனைக்காகவும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கணக்காய்வு ஐய வினாக்கள் மூலம் காட்டப்பட்டுள்ள மதிப்பீட்டுப் பெறுமதி 2016 ஆம் வருடத்துக்காக திறைசேரி ஏற்பாடுகள் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியில்லாதிருப்பதுடன், அந்தந்த கருத்திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட இயலளவு மொத்த வருமானமாகும். அத்தொகை பல வருடங்களுக்காக செலவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட பெறுமதியாகும். சூன்யம் செயல்முறைக்கமைய ஒப்பந்தம் வழங்கப்பட்டதனால் உரிய கருத்திட்டத்துக்காக அக்குறித்த வருடத்தின் நிறைவு செய்வதற்குள்ள பகதிகள் மாத்திரம் ஒப்பந்தத்தை வழங்கப்பட்டது.

(ஈ) **அவதானிப்பு**

2017 ஆம் ஆண்டில் 28 அபிவிருத்தி திட்டங்களை தயார்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதில் 20 திட்டங்களை தாயரிக்கும் நடவடிக்கைகள் 2018 மார்ச் மாதமாகும்போது முடிவு செய்யப்படும். (வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாததைத் தவிர்ந்த)

எதிர்காலத்தில் சகல வருடங்களிலும் 25 அபிவிருத்தி திட்டங்கள் படி நிறைவு செய்வதற்கிருப்பதுடன் அதற்கமைய நாடு பூராவும் அபிவிருத்தி திட்டங்கள் 05 வருடங்களால் நிறைவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

4.2 முகாமைத்துவ செய்றபாடுகள்

(அ) **அவதானிப்பு**

.

சென்ட்ரல் சினமா காணிக்காக அதிகாரசபைக்கு செலுத்தவேண்டியிருந்த முழு தொகை செலுத்தி குத்தகை உறுதி வெளியிடப்பட்டுள்ளது. ராஜகிரிய காணிக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்துவதற்கு எஞ்சியிருந்த தொகை செலுத்துவதற்கு 2017.12.31 ஆந் திகதி வரை காலம் வழங்கப்பட்டிருப்பதுடன், அத்திகதியிற்கு முன்னர் அத்தொகை செத்தாதுவிடின் அக்காணி ஒதுக்கீடு இரத்துச் செய்யப்பட்டு கேள்விப்பத்திர நடைமுறையின் அடிப்படையில் வெளியேற்றுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

(ஆ) **அவதானிப்பு**

இந்த இரு வீடமைப்பு கருத்திட்டங்கள் மூலம் உங்களால் காட்டப்பட்டுள்ளவாறு ரூபா 18 மில்லியன்கள் நிலுவையாயுள்ள சிறிசரண உயன வீடமைப்பு கருத்திட்ட கட்டிடம் ஆரம்பத்தில் திட்டமிடும்போது ஏற்பட்டுள்ள சிக்கலான தன்மையின் காரணமாக இவ்வாறு நீர் பட்டியல்கள் பற்றாக்குறையாக காணப்படுகின்றன. என்னவென்றால் பொதுவாக நிலுவையாக இருந்த நீர் பட்டியல்களை அறிவிடுவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற செயல்முறையாக அமைவது நீர் மீட்டருக்கு முத்திரையிடுவதாகும். ஆனாலும் சிறிசரண உயன வீடமைப்பு கருத்திட்டம் திட்டமிடும்போது அக்குறித்த நீர் மீட்டர் அந்தந்த அலகுகளின் சுவரின் உள்ளே பொருத்தப்பட்டிருப்பதால் நிலுவை நீர் கட்டணங்களை அறிவிடுவதற்காக அம்மீட்டர்களுக்கு முத்திரையிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக இவ்வாறு நீர் பட்டியல்களில் அதிகளவு நிலுவைகள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் இப்போதைக்கு அதிகாரசபையினால் இந்த பிரச்சினைகளுக்கான தீர்வாக இந்த நீர் மீட்டர்கள் முத்திரையிடுவதற்காக வெளியே கொண்டுவந்து பொருத்தும் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தியுள்ளது. அக்குறித்த கருத்திட்டம் முடிவடைந்த பின்னர் இந்த பிரச்சினை தீர்த்துக்கொள்ள முடியுமென அதிகாரசபை நம்புகின்றது.

மறுபுறம், முவதொர உயன வீடமைப்பு கருத்திட்டத்தில் வாங்குபவர்களுக்கு வீடுகளை வழங்கும்போது அவர்கள் அதிகாரசபைக்கு பணம் செலுத்தும் முறைத் தொடர்பாகவுள்ள விதிமுறைகள் சரியான விதத்தில் அறியாதுள்ளதை அவதானிக்கப்பட்டுள்ளது. வீடுகளை பாவனைசெய்து குறித்த காலம் சென்றதும் அவர்களுக்கு வீடுகளை வழங்கும் நிபந்தனைகள் பற்றிய சட்ட விதிமுறைகள் அதிகாரசபையினால் அறிவிக்கப்பட்டுள்ளன. அப்போதாகும்போது அவர்களினால் வீடுகளை பாவனை செய்தமைக்காக அதிகாரசபைக்கு போதியளவு பணம் நிலுவை வாடகையாக செலுத்துவதற்கிருப்பதனை கணக்குகளுக்கமைய காணக்கூடியதாகவுள்ளன. அவ்வாறு வாடகைப் பணம் சரியான அடிப்படையில் நீண்ட காலமாக அறவிடப்படாது போதியளவு காலம் அவர்களுக்கு வீடுகளை பாவனை செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கியதால் இந்த இவ்விரு வீடமைப்பு கருத்திட்டங்களிலிருந்தும் அறிவிப்பட வேண்டிய வாடகைப் பணம் பெரிய தொகையாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

2017.09.07திகதி 07/2017 ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவ சபை முடிவுக்கமைய நிலுவையாயிருந்த வாடகைத்தொடர்பாக, அவற்றை அறவிடுவதற்காக வீடுகளை பெற்றவர்களின் நீர் விநியோகம் துண்டிப்பதற்கான உரிய அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய எதிர்காலத்தில் இந்த நிலுவை வாடகைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும், நீர் விநியோகம் துண்டிப்பதற்கான செயல்முறை நடைமுறைப்படுத்துவதற்காகவும் எதிர்பார்க்கப்படும்.

(இ) **அவதானிப்பு**

பலாங்கொடை நகர அபிவிருத்தி புதிய கருத்திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள கடைத்தொகுதிகள் மற்றும் அலுவலக தொகுதியில் நிறுவப்பட்டுள்ள வியாபார நிலையங்களில் இப்போதைக்கு வாடகைப்பணம் நிலுவையாகவுள்ள வியாபாரிகளுக்கு வழங்குவதற்கிருப்பதுடன், அவ்வாறு வழங்கும்போது நிலுவை வாடகைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய வியாபார நிலையங்கள் வழங்குவதற்குள்ளது. அதற்கமைய எதிர்காலத்தில் இந்த நிலுவைப் பணம் அறவிடப்பட முயுமான செயல்முறை இதன் மூலம் உருவாகியுள்ளது. மேலும் கொழும்பு கோட்டை வேல்ல வீதி கருத்திட்டத்தின் நிலுவை வாடகைதாரர்களுக்காக வழக்குகளைத் தொடுப்பதற்காக தேவையான அங்கீகாரம் இப்போதாகும்போது விடயபரப்பு அமைச்சரிடமிருந்து பெற்றுக்கொண்டிருப்பதுடன், எதிர்காலத்தில் அதற்கான சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குள்ளன.

(ஈ) **அவதானிப்பு**

இந்தப் பெறுமதி அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறு கருத்திட்டங்களில் மூலதனச் செலவு மீளளிப்புச் செய்வதற்காக வாடிக்கையாளர்களினால் இந்த அதிகாரசபையில் வைப்பீடு செய்துள்ள ரூபா 4,163,063,850 ஆகும். அத்தொகையிலிருந்து உரிய கருத்திட்டங்களின் செலவு ஈடுசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(உ) **அவதானிப்பு**

இந்த நேர்முகப் பரீட்சையின்போது முதல் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர் தொலைபேசி மூலம் தொடர்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படினும், அவரை தொடர்படுத்திக் கொள்வதற்கு இயலாது போனதால் நேர்முகப் பரீட்சைகுழுவின் முடிவுக்கமைய இரண்டாம் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஊ) **அவதானிப்பு**

குறித்த அலுவலரின் கல்வித்தகைமைகள் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், இது தொடர்பாக ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(எ) **அவதானிப்பு**

திரு. வை. ஏ.ஜீ. கே. குணதிலக்க அவர்கள் நேர்முகப் பரீட்சைக்காக கலந்துகொள்ளும்போது வட மாகாண அலுவலகத்தில் பதில்கடமைபுரி பணிப்பாளராக

செயலாற்றியுள்ளதுடன் உரிய பதவிக்குத் தேவையான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் பூர்த்தி செய்துள்ளார்.

பணிப்பாளர் (பூகோள தகவல்கள் அமைப்புமுறை) பதவிக்காக செல்வி ஜே.பி.எஸ். சோமசேக்கர 2016.12.10 ஆந் திகதி நடைப்பெற்ற நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமிக்கப்பட்டுள்ளார். அப்போதாகும்போதும் செல்வி ஜே.பி.எஸ். சோமசேக்கர அவர்கள் பூகோள தகவல்கள் அமைப்புமுறை துறையில் பதில்கடமைப்புரி பணிப்பாளராக வினைத்திறன் வாய்ந்த முறையில் செயலாற்றியிருப்பதுடன் உரிய பதவிக்கரிய கல்லிவ மற்றும் தொழில்சார் தகைமைகள் பூர்த்தி செய்துள்ளார்.

திரு. ஜீ. என் பிரேமவர்தன அவர்கள் பணிப்பாளர் (கருத்திட்ட முகாமைத்துவம்) திரு. என்.பி.கே ரணவீர அவர்கள் பணிப்பாளர் (அபிவிருத்தி திட்டமிடல்கள்/ வடக்கு- கிழக்கு) மற்றும் எச்.ஜே. சி. ரணவீர அவர்கள் பணிப்பாளராகவும் (மேல் மாகாணம்) சேவையாற்றுவதுடன் , இவர்கள் மூவரும் இப்போது சேவையாற்றும் பதவிக்கு தேவைப்படுகின்ற கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை பூர்த்தி செய்துள்ளனர்.

எவ்வாறாயினும் வேறு கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டுள்ளவாறு மேற்குறிப்பிட்ட பதவிகள் வழங்கும்போது சரியான நடைமுறைக்கமைய பராமரிக்கப்பட வேண்டிய சில ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளின் குறைப்பாடுகள் முகாமைத்துவத்தினால் கண்டறியப்பட்டிருப்பதுடன் அக்குறைப்பாடுகள் எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்காக நடடிக்கைகள் மேற்கொள்வதறகு மனிதவள பிரிவின் அலவலர்களுக்கு தேவையான மதியுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஏ) அவதானிப்பு

2.5ஏ (இல் ii விடைகள் பொருந்தும்)

(ஐ) அவதானிப்பு

அதிகாரசபையின் பல வருட உயர் முகாமைத்துவத்திற்குரிய பதவிகள் வெற்றிடமாக இருந்ததுடன், அதற்காக அலுவலர்களின் சேவைக்காலத்தை கண்காணித்தபோது அலுவலர்களின் சிறியளவு எண்ணிக்கைக்கு மாத்திரமே பதவியுயர்வு வழங்கக்கூடியதாக இருந்தது. அதற்கமைய அதிகாரசபையின் கடமைப்பொறுப்பு மற்றும் சேவைத் தேவைப்பட்டின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட பதவிகளுக்காகத் தேவைப்படுகின்ற சேவை அனுபவம் 03 வருடங்கள் மற்றும் 05 வருடங்கள் வரை குறைப்பதற்கு முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்று அதற்கமைய நடவடிக்கைகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இவ்வாறு பதவியுயர்வு பெற்றுள்ள அலுவலர்களின் அப்பதவிக்கு கீழ் பதவியிலிருந்த சேவைக்காலம் குறைவாக இருப்பினும் அவ்விடயப்பரப்பு தொடர்பாக பல வருட கால சேவை அனுபவம் பெற்றுள்ளார்களெனவும் குறிப்பிடுகின்றேன்.

(ஒ) அவதானிப்பு

2016.12.31 ஆந் திகதியிற்கு வங்கியிலுள்ள நிலுவை உருவாகியுள்ள விதம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

2016.12.3ஆந் திகதி முதலீடுகளை மேற்கொண்டதன் பின்னர் வங்கியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள வைப்புக்கள்	ரூபா 35.27மில்லியன்கள்
2016.12.31ஆந் திகதி வங்கியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள வைப்புக்கள்	ரூபா 12.40 மில்லியன்கள்
கூட்டுத்தொகை	ரூபா 47.67 மில்லியன்கள்

2016.12.31ஆந் திகதி சனிக்கிழமை நாளாக இருந்ததனால் அத்தொகை இந்த அதிகாரசபையின் அடுத்த அலுவலக தினத்திலேயே முதலீடு செய்துள்ளது. மேலும் இந்த கணக்கிலுள்ள நிதி முதலீடு செய்வதற்கான வேண்டுகோள் கடிதங்கள் முதலீடுகள் செய்யப்படுகின்ற நாள் பிப. 2.45 இற்கு முன்னர் வங்கிக்கு வழங்கவேண்டியிருப்பதால் அத்திகதியில் பி.ப 2.15 ஆகும்போது இருந்த கணக்கு நிலுவை அடிப்படையாகக் கொண்டு இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்படும். ஆனாலும் பி.ப 2.15 இலிருந்து, அத்திகதியில் வங்கி நடவடிக்கைகள் முடிவடையும் நேரம் வரை கணக்குக்கு வைப்பீடு செய்யப்படுகின்ற நிதி அதற்கு அடுத்த நாள் முதலீடு செய்யப்படும். எவ்வாறாயினும் இந்த கணக்கில் காணப்படுகின்ற நிலுவை அடிப்படையாகக் கொண்டு மாதாந்தம் வட்டி தொகை பெற்றுக்கொள்வதனையும் அறிவிக்கின்றேன்.

(ஒ) **அவதானிப்பு**

இக்கணக்கில் சேரும் பணம் நிலையான வைப்புக்களில் அல்லது திறைசேரி மீள் கொள்வனவு பத்திரகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் கணிப்பின் அடிப்படையிலேயே முதலீடு மேற்கொள்ளப்படுகின்றது. உரிய கணக்குக்கு 2016 ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் முறையே ரூபா 398 மில்லியன்கள், ரூபா ,146மில்லியன்கள் . ரூபா 592மில்லியன்கள் கணக்குக்கு கிடைத்திருப்பதுடன் அத்தொகை குறுகிய கால திறைசேரி மீள் கொள்வனவு பத்திரகளில் 2016ஓகஸ்ட் மாதம் மேற்கொள்வதற்கிருந்த ரூபா 899மில்லியன்கள் தொகை தொடர்பாகவே முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர்nr 2016செம்தெம்பர், ஒக்டோபர், நொவெம்பர மற்றும் திசெம்பர் மாதங்களில் முறையே ரூபா 171 மில்லியன்கள், ரூபா 68 மில்லியன்கள், ரூபா 12 மில்லியன்கள், ரூபா 521 மில்லியன்கள் கணக்குக்கு கிடைத்திருப்பதுடன் அத்தொகை அவ்வாறு திறைசேரி மீள் கொள்வனவு பத்திரங்களில் 2016திசெம்பர் மாதம் ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 449மில்லியன்கள் ஆன தொகை சார்பாகவே முதலீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 2017சனவரி மாதம் முதல் கருத்திட்டத்தின் கொடுப்பனவு தேவைப்பாடுகள் அடிப்படையாகக் கொண்டு நிலையான வைப்புகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு சந்தை வட்டி விகிதாசாரங்களில் காணப்பட்ட அனுகூலான மாறுபாடு காரணமாக அவ்வாறு ஒரே தடவையில் ஒரு வருட கால எல்லை தொடர்பில் முதலீடு செய்வதிலும் பார்க்க கூட்டு வட்டியும் சேர்த்து மீண்டும் முதலீடு செய்வதன் மூலம் அதிக வட்டி வருமானம் சம்பதித்துக் கொள்ள முடியுமென காணக்கூடியதாக இருப்பதனால் ஒப்பந்ததாரரக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளப்பட வேண்டிய கால எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஔ) **அவதானிப்பு**

அதிகாரசபையின் முகாமைத்துவ குழு அங்கீகாரத்தின் கீழ் இந்த கருத்திட்டங்கள் மிகவும் விளைவு பெருக்கமான விதத்தில் பேணுவதற்கு புதிய முகாமைத்துவ குழு நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழு இப்போதாகும்போது தனது கடமைகளை ஆரம்பித்துள்ளது.

(க்) **அவதானிப்பு**

தகவல் தொழில்நுட்ப பூங்கா, மாலபேயில் அமைந்துள்ள காணி மற்றும் மஹரகம, நாவின்னவில் அமைந்துள்ள இந்த அதிகாரசபைக்கு கையகப்படுத்தப்பட்ட காணிப்பகுதிகள் இரண்டிலும் கையகப்படுத்தும் நடவடிக்கைகைள் இது வரை பூர்த்தி செய்யப்படாதுள்ளதால், உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகள் வழங்கும் நடவடிக்கைகைள் மேற்கொள்வதற்கு இந்த அதிகார சபைக்கு முடியாதுள்ளது. ஏற்கனவே நாவின்ன காணியின் நட்டஈடு செலுத்து நடவடிக்கைகளுக்காக அடிப்படை வைப்புத்தொகையான ரூபா 55 மில்லியன்கள் தொகை மஹரகம பிரதேச செயலகத்துக்கு விடுவித்துள்ளது.

(க) **அவதானிப்பு**

வீடுகளைப் பெற்றவர்களிடமிருந்து நீர் கட்டணங்களை அறவிடுவதற்காக தற்போது கையாளப்படுகின்ற செயல்முறையாக அமைவது அறிவித்தலின்றி அவர்களின் நீர் விநியோகம் துண்டிப்பதேயாகும். நிலுவை வாடகைப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் இதே செயல்முறையைப் பின்பற்றுமாறு 2017.09.04 ஆந் திகதி ஒன்றுகூடிய 17/2017 கொண்ட முகாமைத்துவ சபைக் கூட்டத்தின்போது அங்கீகரித்துள்ளது. அதற்கமைய இப்போதைக்கு இந்த செயல்முறை பின்பற்றுவதற்கான ஆலோசனைகள் உரிய பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(கா) **அவதானிப்பு**

கொழும்பு மற்றும் புறநகர பிரதேசங்களில் வாழ்கின்ற குறைந்த வருமானம் பெறுவோர்களின் வாழ்கை மற்றும் சமூக அந்தஸ்தினை மேம்படுத்தும் நோக்கில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நகர

புத்துயிரூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 50,000 அலகு வீடுகள் நிர்மாணிப்பதற்காகத் தேவைப்படுகின்ற நிதி ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு 5 ஆண்டுகளால் முதிர்வடைகின்ற ரூபா 10 பில்லியன் பெறுதி வாய்ந்த கடன்பத்திர வெளியீடு அமைச்சரவை முடிவின் அடிப்படையில் (10/1830/403/039ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம்) மேற்கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட வீடளிப்பு கருத்திட்டம் தொடர்பில் 2015 ஜூலை இறுதியாகும்போது ஒப்பந்தாரர்களுக்கு கிட்டத்தட்ட ரூபா 20 பில்லியன் ஆனளவு நிதி செலுத்தப்பட்டுள்ளது. இந்த தொகையில் கடன்பத்திர வெளியீட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 10 பில்லியன்களும், குறுகிய கால வங்கிக் கடன் மூலம் ரூபா 3.5 பில்லியனும் மற்றும் அதிகாரசபை மூலம் உள்வாரியாக ஏற்படுத்திக்கொண்ட ரூபா 6.5 பில்லியனகள் கொண்ட நிதியிலிருந்து நிதியீடு செய்யப்பட்டிருப்பினும், 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கடன்பத்திர் 2015 முதிர்வு பெறும் வேளையில் அதாவது 2015 ஒக்டோபர் மாதத்தில் கடன்பத்திரங்களை வெளியிடும் பொருட்டு மற்றும் அதற்காக 2015 வருடத்துக்குச் செலுத்த வேண்டிய வட்டித்தொகையாக செலுத்த வேண்டிய ரூபா 11 பில்லியன்கள் நிதியீடு செய்வதற்காக அதிகாரசபையிடம் நிதியில்லாதிருந்ததனால் மற்றும் தேவையான நிதி ஏற்பாடு செய்து கொள்வதற்காக அதிகாரசபையினால் இந்த கருத்திட்டத்தின் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டவாறு இரண்டாவது கடன்பத்திர வெளியீட்டிற்கு செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. எவ்வாறாயினும், இரண்டாம் கடன்பத்திர வெளியீட்டுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டன.பின்னர் நிதிச் சந்தையின் செயற்பாட்டினைக் கருத்திற் கொண்டு திறைசேரியின் ஆலோசனையின் பிரகாரம் மற்றும் இந்த அதிகாரசபையின் முகாமைத்துவ குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் இரண்டாம் கடன்பத்திர வெளியீட்டினை நிறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

அதற்கமைய, அதிகாரசபையினால் 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கடன்பத்திரங்களை விடுவிப்பதற்காக இலங்கை வங்கியிலிருந்து ரூபா 11 பில்லியன்கள் குறுங்கால கடன் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் இலங்கை வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிட்ட கடன் தொகையிலிருந்து ஒரு பகுதி மீளளிப்பற்காக திறைசேரியினால் 2017 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் 15 ஆந் திகதி ரூபா 8.5 பில்லியன் ஆன தொகை அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

(கி) **(கி) (i), (ii) அவதானிப்பு**

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அபிவிருத்தி நோக்கங்களுக்கு இயைவாகவும் மற்றும் அப்போதிருந்த அபிவிருத்தி தகவுதிறன்களுக்கமையவும் Urban Investment & Hotel Development Company, Urban Investment & Real Estate Company Pvt Ltd, Orchard Housing Development Company Pvt. Ltd සහ Waters Edge Hotel Development Limited என்ற துணைமைக் கம்பனிகள் முகாமைத்துவ சபைத் தீர்மானங்களுக்கமைய நிறுவப்பட்டன.(முகாமைத்துவ சபை முடிவு இலக்கங்கள் 318/2014 ,319/2014 ,320 /14,311/2014). இந்த முகாமைத்துவ சபை முடிவு அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டு கடித தலைப்புகள் MOD /UD /E10/CP/05 , MOD /UD /E10/CP/04 , MOD /UD /E10/CP/03 , MOD /UD /E10/CP/02 இன் கீழ் அப்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் ஒப்படைக்கப்பட்டிருப்பினும் அரசியல் அதிகாரசைபயில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக உரிய அமைச்சரவை அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளுதல் தற்காலிகாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், மேலே குறிப்பிடப்பட்ட துணைமைக் கம்பனிகளில் செயற்பாடுகள் தொடர்பில் புதிய முகாமைத்துவ சபையுடன் கலந்துரையாடி அவைத் தொடர்பாக இறுதி முடிவைப் எடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த துணைமைக் கம்பனிகளுக்குரிய கருத்திட்டங்கள் பல்வேறு தகவுதிறன்களுக்கு இயைவாக நடைறைப்படுத்தியமைத் தொடர்பாக அப்போதிருந்த அரசியல் அதிகாரசபையின் முடிவுகள் செயற்படுத்தப்படாமைக் காரணாக மேலே குறிப்பிடப்பட்ட துணைமைக் கம்பனிகளின் செயற்பாடுகளும் இப்போது வரை இடைநிறுத்தப்படவில்லை.

(ii) அவதானிப்பு

மேலே குறிப்பிடப்பட்ட துணைமைக் கம்பனிகள் அடையாளங் காணப்பட்ட கருத்திட்டங்கள் பல நடைறைமுறைப்படுத்துவதற்காகவே நிறுவப்பட்டிருப்பதுடன் இந்த கம்பனிகளின் செய்றபாடுகள் முறைசார்படுத்தும் நோக்கில் அரச அனுசரணை கம்பனியான அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் துணைமைக் கம்பனியாக கூட்டிணைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இப்போதைக்கு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் மற்றும் அல்லது அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் தாபன தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நகர அபிவிருத்தி அதிகாரசைபக்கு அனுசரணை கம்பனிகளை புதுப்படுத்துவதன் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக சட்டத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட வரையுள்கள் இப்போதாகும்போது சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு சமர்பிக்கப்பட்டுள்ளன.

(கீ) **அவதானிப்பு**

முதல் பகுதி மருதானை கருத்திட்டத்தின் வியாபாரி திரு.டி.எம் கனேகொட அவர்களுக்கு இரு வியாபார நிலையங்கள் பின்வரும் இலக்கங்களின் கீழ் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன.

3. கடை இலக்கம் 277/51/2/1 நிலுவைத்தொகை 3.9 மில்லியன்களாகும்.
4. கடை இலக்கம் 277/51/3/1 நிலுவைத்தொகை 1.8 மில்லியன்களாகும்.

நீண்டகாலமாக நிலுவை வாடகைச் செலுத்தாததனால் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வாடகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டிருப்பதுடன், நிலுவை வாடகை அறவிடுவதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அதிகாரசபையின் சட்டப் பிரிவுக்கு 2016.08.18 ஆந் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அவ்வாறு அறிவிக்கப்பட்டதன் பின்னரும் 2017 செப்தெம்பர் மாதம் வரை அவரிடமிருந்து வாடகைப் பணம் அறவிடுவது தொடர்பில் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. தவறுதலாக கணக்கில் காட்டப்பட்டுள்ள வாடகைப் பணம் அவரின் கணக்குகளிலிருந்து நொவெம்பர் மாதத்திலிருந்து சீராக்கம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்குள்ளது.

(கு) **அவதானிப்பு**

எதிரபார்க்கப்பட்டவாறு இந்த கருத்திட்டம் ரங்கிரி தபுலு விஹாரையிற்கு அக்குறித்த விஹாரை நிர்வாகம் பிற்காலத்தில் இந்த கருத்திட்டத்தை பொறுப்பேற்பது நிராகரிக்கப்படுவது காரணமாகவே ஒப்படைப்பதற்கு முடியாமலுள்ளது. ஆகையால் அம்முடிவு கைவிட்டு எதிர்காலத்தில் மிகவும் பயனுறுதிவாய்ந்த முதலீடுகளுக்காக இந்த சொத்துக்கன் வழங்குவதற்குள்ளன.

(கூ) **அவதானிப்பு**

குணசிங்ஹபுர வர்த்தக கருத்திட்டத்தின் குடியமர்ந்துள்ள வாடகையாளர்களின் நிலுவையாக காணப்படுகின்ற வாடகைத்தொகை சட்டரீதியான நடவடிக்கைகள் மூலம் கையேற்பதற்கும், சொத்துரிமையை உடனடியாக அதிகாரசபையினால் கையேற்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் அதிகாரசபையின் காணிப்பிரிவு மூலம் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. அதற்கிடையில் இந்த வீட்டின் தற்போதைய உரிமைப்பெற்றுள்ள நபரால் சமர்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகளுக்கமைய எதிர்கால நடவடிக்கைகள் மேலும் மேற்கொள்ளப்படும்.

(கெ) **அவதானிப்பு**

சகல முறைகேடான குடியிருப்பாளர்களை சட்டரீதியான நடவடிக்கைகள் மூலம் வெளியேற்றுவதற்காக நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(கே) **அவதானிப்பு**

உரிய கணனி அமைப்புமுறையில் திட்டமிடல், வடிவமைப்பு, நிறுவும் நடவடிக்கைகள் இப்போதாகும்போது முடிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய, முன்மொழியப்பட்ட புதிய கணனி அமைப்புமுறைக்காக இப்போதாகும்போது அடிப்படைத் தரவுகள் உட்செலுத்துதல் (Master Data) மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் பேரேடுகளில் காட்டுதல் வெற்றிகராக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இது தொடர்பில் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளும் (Report Generation) நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று மேற்குறிப்பிட்ட கணனி அமைப்பு மூலம் அதிகாரசபையின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் நடவடிக்கைகளும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், முன்மொழியப்பட்ட புதிய கணனி அமைப்புமுறைக்கு சரிபார்க்கப்பட்ட தரவுகளை உட்செலுத்துதல் 2017சனவரி முதல் 2017 மார்ச் மாதம் வரை மேற்கொள்ளப்பட்டதுடன் அத்தரவுகள் பழைய கணக்கு அமைப்புமுறையில் அறிக்கைகளுடன் ஒப்பிடப்பட்டு அங்கு கண்டறியப்பட்ட குறைப்பாடுகளை தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2017 ஓகஸ்ட் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து புதிய கணக்கு அமைப்புமுறைக்கு தரவுகளை உட்செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக மேலும் அறியத்தருகின்றேன்.

(கொ) **அவதானிப்பு**

அதிகாரசபையினால் விடுவித்துக்கொள்ளப்பட்ட காணிகளுக்காக பொருத்தமான முதலீட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக கேள்விப்பத்திரங்களை அழைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஏனைய காணிகள் கையேற்கும செயற்பாட்டில் உள்ளதாகவும் அறியத்தருகின்றேன்.

4.3 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

அவதானிப்பு

அமைச்சரவையின் மற்றும் அதிகாரசபையின் முகாமைத்துவ சபையால் வரையறுக்கப்பட்ட பேலியகொடை களஞ்சியசாலைத் தொகுதிக் கம்பனி 2017.07.31 ஆந் திகதி கலைப்பதற்கு மற்றும் அக்குறித்த கம்பனியின் அனைத்து சொத்துக்கள் அதிகாரசபைக்கு மாற்றம் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

4.4 சர்ச்சைக்குரியதான கொடுக்கல் வாங்கல்கள்

(அ) **அவதானிப்பு**

இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரங்கள் முகாமைத்துவ பத்திரங்கள் மூலம் 2016.08.16 ஆந் திகதியினிலிருந்து நடைப்பெற்ற அனைத்து முகாமைத்துவ கூட்டங்களின்போதும் சமர்பிக்கப்பட்டுள்ளன. 2016.10.18 ஆந் திகதி நடைப்பெற்ற முகாமைத்துவ சபைக் கூட்டத்தின்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர், பணிப்பாளர் நாயகம், செயற்பாட்டு பணிப்பாளர் மற்றும் பிரதி பணிப்பாளர் நாயகத்தால் (நிதி)இது தொடர்பாக விவரங்களோடுகூடிய அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. அங்கு முன்மொழியப்பட்ட ஒப்பந்தம் முன்னெடுத்துச் செல்லும் மற்றும் காணிகளின் உறுதிப்பாடு மீண்டும் பெற்றுக்கொள்வதன் மூலம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஏற்படக்கூடிய இலாபங்கள் மற்றும் இழப்பீடுகள் காட்டப்பட்டுள்ளன.

அதற்கமைய முகாமைத்துவ சபையினால் இசைவாணையின் அடிப்படையில் முதலீட்டாளருடன் புதிய விலைமதிப்பீட்டு பெறுமதிக்கு இணங்குவதற்காக பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன் அங்கு புதிய மதிப்பிடப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் காணி குத்தகை அடிப்படையில் வழங்குவதாயின் அவர்களினால் இணங்கிய அடிப்படைத் தொகைக்கமைய வழங்கப்பட்ட முற்பணத்தொகைக்காக 12% ஆன வட்டி சீராக்கம் மேற்கொள்ளுமாறு முதலீட்டாளர் கோரியுள்ளார்.

இக்காரணம் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் கலந்துரையாடப்பட்டு அக்கால எல்லைக்குள் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வெளியிடப்பட்டுள்ள கடன்பத்திர வட்டி விகிதாசாரமாக 11%

அடிப்படையாகக் கொண்டு அதற்கான வட்டி கணக்கிடப்பட்டு அத்தொகை காணியின் குத்தகை பெறுமதியை கவனத்திற்கொள்வதற்காக பயன்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது.

அதற்கமைய மேலே குறிப்பிடப்பட்ட தகவுதிறன்களை அடிப்படையாகக் கொண்டு புதிய மதிப்பிடப்பட பெறுமதியிலிருந்து 10% எல்லையின் கீழ் முகாமைத்துவ சபையின் இசைவாணையின் அடிப்படையில் இந்த குத்தகைப் பெறுமதி கணக்கிடுவது இடம்பெற்றிருப்பதுடன் இந்த குறைப்பனவுகள் கணக்காய்வு ஐய விளாவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலீட்டாளருக்குச் செலுத்தப்பட்ட வட்டித்தொகையாக காட்டுவது தவறானதாகும்.

மேலும், வேறு வகையில் விவரிக்கப்படுவதாயின் 2013 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கிடைத்த ரூபா 557 மில்லியன்கள் ஆன தொகை 2017 வருடம் வரை பெறுமதி அதிகரித்தல் 11% அடிப்படையில் கிட்டத்தட்ட ரூபா 850 மில்லியன்களான காட்ட முடியும். ரூபா 557 மில்லியன்கள் தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி இயக்கமுறைக்கு 2013 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்பட்டு அதிகாரசபையின் நிதி தேவைப்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டன.

இந்த காலப்பகுதிக்குள் சம்பந்தப்பட்ட காணியில் அதிகரிப்பு ரூபா 2,785 மில்லியன்கள் இலிருந்து ரூபா 3,620 மில்லியன்கள் வரை அதிகரித்துள்ளது. புதிய பெறுமதிக்கமைய, புதிய ஒப்பந்தமாக கருதப்படுவதாயின் அதிகாரசபைக்கு இந்த நிதி கிடைத்துள்ளது. இந்த குத்தகைதாரரால் 2017 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா -/2,732 மில்லியன்கள், 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 557/- மில்லியன்கள் மற்றும் அதன் வட்டியான ரூபா 330/- மில்லின்களாக குறிப்பிட முடியும். அதற்கமைய இந்த காணியை கையேற்பதன் மூலம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதுவித நிதிசார்ந்த இழப்பீடும் ஏற்படவில்லை.

(ஆ) அவதானிப்பு

தவிசாளர் அலுவலகம், பணிப்பாளர் நாயகம் அலுவலகம் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் அலுவலகத்தின் சேவையிலுள்ள பதவியணியினரால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட சேவைகளுக்காக செலுத்தப்படுகின்ற இந்த1/3 கொடுப்பனவு இரகசிய கொடுப்பனவாக திருத்தம் செய்து கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கையெடுக்கப்படும். இந்த கொடுப்பனவு செலுத்துவதற்காக முகாமைத்துவ சபை அங்கீகாரம் வழங்கியிருப்பதுடன் எதிர்காலத்தில் MSD அங்கீகாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(இ) அவதானிப்பு

வரையறுக்கப்பட்ட அலுவலர்கள் எண்ணிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கருத்திட்டம் முன்னெடுத்து செல்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையினுள் நிரந்தர சேவையிலுள்ள திட்டமிடல் அலுவலர்கள், காணி அலுவலர்கள், கட்டிட கலைஞர்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காகத் பதவியணி இந்த கருத்திட்டத்துக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.
ஆனாலும் இந்த அதிகாரசபை சேவையில் இல்லாத பொறியியலாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள், நில அளவையாளர்கள் முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 33 இலக்கத்துக்கமைய ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும்.

ஆனாலும் ஒரே கருத்திட்டத்துக்குள் சுற்றுநிருபம் 33 இலக்கத்துக்கமைய ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்களின் சம்பளங்கள் மற்றும் அதிகார சபை அலுவலர்களின் சம்பளங்களிடையே சம்பர முரண்பாடு இருந்ததனால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 174/2012· மற்றும் 2012/07/17 ஆந் திகதி மற்றும் DMS/C1/1/UR Project ஆம் இலக்க முகாமைத்துவ சபை முடிவு மற்றும் 2013.04.29 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள முகாமைத்துவ அங்கீகாரத்துக்கமைய நிரந்தர பதவியணிக்காக கருத்திட்ட கொடுப்பனவு செலுத்தப்பட்டது. (அங்கீகாரத்தைக் கோரும்போது தொழில்நுட்ப தரத்திற்கு உட்படாத அலுவலர்கள் இந்த அதிகாரசபை மூலம் ஈடுபடுத்துவதாகவும் குறிப்பிடப்பட்டு அங்கீகாம் எதிர்பார்க்கப்பட்டது.)

(ஈ) **அவதானிப்பு**

அப்போது நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக் கம்பனியின் தவிசாளராக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளரே செயலாற்றியிருப்பதுடன், அவரின் உத்தியோகபூர்வ வாகனமாக டொயோட்ட லேண்ட் குரூசர் ரக ஜீப் வண்டி ஈடுபடுத்தியிருந்ததனால் அதன் பராமரிப்புச் செலவு நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டு கம்பனியினால் ஏற்கப்பட்டது. ஆனாலும் நிகழ்காலத்தில் அக்குறித்த நிலைமை மாற்றம் பெற்றிருப்பதனால் அக்குறித்த வாகனத்தின் பாராமரிப்புச் செலவு அதிகாரசபையினால் அக்குறித்த நிறுவனத்துக்கு செலவு ஈடு செய்யப்படும்.

(உ) **அவதானிப்பு**

கொழும்பு தலைநகரத்துடன் அண்டிய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தை மையமாகக்கொண்டு நடாத்தப்படுகின்ற பயிற்சி செயலமர்வுளுக்காக உணவுபானங்கள் மற்றும் ஏனைய செலவுகள் அதிகாரசபையினால் ஏற்பதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் முக்கிமாக வழங்கப்பட்டிருப்பதுடன் உரிய செலவுகளுக்காக (உறுதிச்சீட்டு இலக்கம் 4138 மூலம் ஏற்கப்பட்ட செலவுகளும் உள்ளடக்கப்பட்டு(முகாமைத்துவ சபை அங்கீகாரம் அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டது.)
இந்த செயலமர்வுகளுக்காக அதன் பொருந்தும் தன்மைக்கமைய இந்த அதிகாரசபையின் அலுவலர்கள் மாத்திமல்லாது வேறு பல்வேறுபட்ட நிறுவனங்களால் அமர்த்தப்படுகின்ற அலுவர்களும் பங்கேற்றனர். கொழும்பு தலைநகரம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக் கருத்திட்டங்கள் அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படுகின்ற இந்த செயலமர்வுகள் பேரே ஏரி சுற்றியுள்ள நீர் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேம்படுத்துவத்றகாகவே பெரிதளவில் மையமாகக் கொண்டிருந்தது.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள்

(அ) **அவதானிப்பு**

பங்கு முதலீடுகளுக்காக இலாபங்களை பிரகடனப்படுத்துதல் அதனுடன் சம்பந்தப்பட்ட கம்பனிகளால் வருடத்தில் இலாபம் சம்பாதித்தத்தல் மற்றும் ஏனைய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப்படுவதுடன், அவ்வாறு பங்கிலாபம் பெறாத நிறுவனங்கள் தொடர்பாக அதிகாரசபையின் முகாமைத்துவ சபையினூடாக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எவ்வாறாயினும், இந்த கம்பனிகளால் 2014 ஆம் ஆண்டில் பங்கிலாபம் செலுத்தப்பட்டிருப்பதுடன் அடுத்த வருடங்களுக்காக பங்கிலாபங்களை செலுத்துமாறும் அறிவிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) **அவதானிப்பு**

பிட்டிபன மஹேன்வத்த முன்மொழியப்பட்ட தொழில்நுட்ப நகர அபிவிருத்தி கருத்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் அதன் 2011 ஆம் ஆண்டில் அளவுகளான 48 ஏக்கர் கொண்ட அதிகாரசபைக்குச் சொந்தமான நிலம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கு நெனோ தொழில்நுட்ப நிறுவனமொன்றை நிர்மாணிப்பதற்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பதுடன், அங்கு நெனோ தொழில்நுட்ப நிறுவனத்தின் கட்டுமானப் பணிகள் அக்குறித்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் வைபவ ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளில் எந்தவிதத்திலும் அதிகாரசபை பங்கேற்கவில்லையென்பதுடன், அது தனிப்பட்ட கருத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மதியுரைகளின் பிரகாரம் முன்மொழியப்பட்ட தொழில்நுட்ப நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் பொருட்டு அளவில் 74 ஏக்கர், 2 ரூட், 14.74 பேர்ச் நிலம் அதிகாரசபையினால் கையேற்கப்பட்டு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்காக

தொழில்நுட்ப கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நிகழ்கால சந்தைப்பெறுமதி அடிப்படையில் வழங்கப்பட்டது.

இலக்கம்	நிறுவனம்	அளவு A	R	P
1.	கொழும்பு பல்கலைக்கழகம் - தொழில்நுட்ப பீடம்	17	2	37.74
2.	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - தொழில்நுட்ப பீடம்	20	0	0
3.	மொரட்டுவை பல்கலைக்கழகம்	20	0	0
4.	ஆதர் சி க்ளாக் நிலையம்	10	0	37.08
5.	தேசிய அறிவியல் நிலையம்	6	2	19.72

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு காணி வழங்கல் மற்றும் தொழில்நுட்ப நகர திட்டமிடல் (Master Plan - Tech City) புது முயற்சி தொடங்குதல் 216 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்த விழாக் கொடுப்பனவு அதற்காக பொருந்தும்

இந்த கருத்திட்டத்தின் பொருளாதார மற்றும் சமூக பங்களிப்பினைக் கருதும்போது அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளினூடாக அதிகாரசபைக்கு உண்மையான பெறுமதி கிடைக்வில்லையென்றமைக்கு இணங்க முடியாது

(இ) அவதானிப்பு

மேற்குறிப்பிட்ட (அ) இன் விடைகள் பொருந்தும்

(ஈ) அவதானிப்பு

அதிகாரசபையிலுள்ள கணனி அமைப்புமுறையில் உள்ள குறைப்பாடுகள் மற்றும் அவ் அமைப்புமுறை மேலும் மேம்படுத்தும்போது காணப்பட்ட வரையறைகள் (அதாவது அக்குறித்த அமைப்புமுறை காலாவதியான மற்றும் கையாளப்பட்டுள்ள மென்பொருள் மேலும் மேம்படுத்த முடியுமான எல்லை.) காரணமாக அக்குறித்த அமைப்புமுறை பராமரிப்பது செயல்முறைக்கு ஒவ்வாததாக இருப்பதனால் 2013.01.18 ஆந் திநதி கூடிய அதிகாரசபை பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ERP அமைப்புமுறை நிலைநிறுத்துவது தொடர்பாக மதியுரைச் சேவைகளை லங்கா லொஜிஸ்டிக் அன்ட டெக்னொலொஜி நிறுவனத்தால் பெற்றுக்கொள்வதற்காக முடிவு செய்யப்பட்டுள்ளது.அக்குறித்த முடிவின் அடிப்படையில் ERP தொழிற்பாட்டிற்கான மதியுரைச் சேவைகளை லங்கா லொஜிஸ்டிக் அன்ட டெக்னொலொஜி நிறுவனத்தால் பெற்றுக்கொள்வதற்காக 2014.04.28 ஆந் திகதி மற்றும் 08/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சபைக் கூட்டத்தின்போது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அக்குறித்த அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய மதியுரைச்சேவைகள் லங்கா லொஜிஸ்டிக் அன்ட டெக்னொலொஜி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

ERP அமைப்புமுறை அதிகாரசபையில் நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படை ஆராய்ச்சி மேற்கொள்ளல், தாபனத்திற்குள்ளே தொழிற்பாடுகளின் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், அக்குறித்த அமைப்புறை நிறுவப்பட்டு பராமரிக்கும் பொருட்டு பொருத்தான நிறுவனமொன்றைத் தேரந்தெடுப்பதற்காக கொள்முதல் தொழிற்பாடு பின்பற்றுவதற்குத் தேவையான ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் அதற்காகப் பொருத்தமான நிறுவனத்தை தேர்ந்தெடுப்பதற்காக தொழில்நுட்ப முகாமைத்துவ குழுவுக்கு உதவும் பொருட்டு மாத்திரம் ரூபா 5,705,000/- தொகை மதியுரைக் கட்டணமாக லங்கா லொஜிஸ்டிக் அன்ட் டெக்னொலொஜி நிறுவனத்தின் மூலம் அறவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய லங்கா லொஜிஸ்டிக் அன்ட் டெக்னொலொஜி நிறுவனத்திற்கு ரூபா 3,875,995 தொகை தொடர்புடைய கம்பனிகளால் ERP அமைப்புமுறை அதிகாரசபையில் செயற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட பொருத்தமான சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வு நடவடிக்கைகள் தொடர்பாகவே கொடுப்பனவு செய்துள்ளமை பணிவுடன் அறியத்தருகின்றேன்.

கணக்காய்வு ஐய வினாவில் காட்டப்பட்டுள்ள 190 மில்லியன்கள் மதிப்பீடு ERP தொழிற்பாடு நிறுவப்பட்டு பராமரிப்பதற்காகத் தேவைப்படுகின்ற கணனி மென்பொருள் மற்றும் வேறு தொழில்நுட்ப உபகரணங்களுக்காக மாத்திரம் செலவாகின்ற செலவுகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசியல் பின்னணியிற்குள் ஏற்பட்ட மாற்றங்களுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தாபன கட்டமைப்பு மற்றும் அதன் கடமைப்பொறுப்புகளை அதிகரிப்பதற்காக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை நிறுவுவதற்கு அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டிருந்ததனால் மற்றும் அதன் கீழ் அதிகாரசபைக்குச் சொந்தமான அதிகாரங்கள் மற்றும் திட்டமிடப்பட்ட பிரதேசங்களைக் கையேற்பதற்கு முன்மொழியப்பட்டிருந்ததனால் அதிகாரசபையின் தாபனக் கடடமைப்புக்குள் கருதக்கூடியவாறன மாற்றங்களை ஏற்படுத்தவதற்குள்ளது. அதன் காரணமாக அந்நடவடிக்கை முடிவடையும் வரை இந்த ERP தொழிற்பாட்டினை இடைநிறுத்துவதற்கு இதற்குரிய தொழில்நுட்ப மதப்பாய்வுக் குழுவால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சிபார்சு செய்யப்பட்டது.

(உ) அவதானிப்பு

இங்கு மதியுரை ஒப்பந்த காலம் 2015/ சனவரி 24 அந் திகதி முடிவடைவதற்கு இருப்பினும் மேம்பாட்டாளார் காரணமாக கருத்திட்டம் தாமதமாகியது. அதற்கமைய, அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் மேலதிக கொடுப்பனவுகள் மதியுரை ஒப்பந்தததத்தில் 8.3 உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, இப்போதாகும்போது அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்காக ரூபா 1,338,867.67 + VAT ஆன தொகை கொடுப்பனவு செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபை அங்கீகாரம் 2017.10.17 ஆந் திகதி நடைப்பெற்ற 350/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இந்த கருத்திட்டம் இது வரை பூர்த்தி செய்யப்படாதிருப்பதுடன், அதற்கமைய உரிய உள்ளுறை மேற்பார்வை செலவுகளுக்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்காக கருத்திட்டம் நிறைவுபெறும் வரை இந்த கட்டணத்தை கோர முடியும்.

இங்கு உங்களால் உரிய பிரதேசத்தில் குடியமர்ந்துள்ள நபர்களை அப்புறப்படுத்துவதற்காக செலுத்தப்பட்ட வாடகையாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 61,198,000.00 தொகை எமது அதிகாரசபையினால் செலுத்தவில்லையென்பதுடன், எமக்குச் சொந்தமான ஆவணங்களுக்குரிய அக்குறித்த வீடுகளில் குடியமர்ந்துள்ள நபர்களுக்குரிய வீடு அமைந்திருந்த சதுர அடி அளவுக்கமைய மாதாந்தம் வாடகையாக செலுத்தப்பட்ட மொத்த தொகை அளவு பின்வருமாறு காட்ட முடியும்.

09/07/2012ஆந் திகதி - ரூபா 7,090,000.00 .
16/10/2012ஆந் திகதி - ரூபா 2,160,000.00 .
03/12/2012ஆந் திகதி - ரூபா200,000.00 .

கூட்டுத்தொகை

மேற்குறிப்பிட்ட நிதி நகர அபிவிருத்தி அதிகாரசபையால் உரிய வீட்டுரிமையாளர்களுக்கு செலுத்தப்பட்டிருப்பதுடன், அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்த தொகை இம்பீரியல் பில்டர்ஸ் கம்பனியால் 2017.11.29 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீண்டும் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்துள்ளது. அதற்கமைய, இந்த கொடுக்கல் வாங்கல்களுக்குரிய இம்பீரியல் பில்டர்ஸ் கம்பனியால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு நிலுவை கொடுப்பனவு இல்லையென அறியத்தருகின்றேன்.

4.6 அடையாளம் காணப்பட்டுள்ள நட்டங்கள்

அவதானிப்பு

.2011.01ஆந் திகதி இந்த கருத்திட்டத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அப்போதாகும்போது நிலுவையாக இருந்த கடனளிக்கப்பட்ட நிலுவைகள் தொடர்பிலான காரணங்களை முன்வைதத்தன் பின்னர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மற்றும் முகாமைத்துவ சபையின் சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.மேலும் எந்தவொரு முதலீட்டிற்காகவும் வழங்கப்படாதுள்ள இந்த காணி 99 வருட குத்தகை அடிப்படையில், கலப்பு கருத்திட்டத்துக்காக வழங்குவதற்கான முன்மொழிவுகள் (RFP) 2017.10.15 ஆந் திகதி ஊடகங்கள் வாயிலாக அழைக்கப்பட்டுள்ளன.

4.7 பதவியணி நிர்வாகம்

(அ) அவதானிப்பு

அதிகாரசபையில் காணப்பட்ட அதிகாரபூர்வ கட்டுக்கோப்பு பணியாட்தொகுதி திட்டம், ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியுயர்வு நடைமுறை நீண்டகாலமாக புதுப்படுத்தாமையின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட சிக்கல்களுக்கு முகங்கொடுப்பதற்கு ஏற்பட்டது.

எவ்வாறாயினும் புதுப்படுத்தப்பட்ட தாபன கட்டுக்கோப்பு , அதிகார கட்டுக்கோப்பு , ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பணியாட்தொகுதி திட்டம் பட்டியல்களை அங்கீகரிப்பதற்காக எற்கனவே முகாமைத்துவ திணைக்களத்துடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மேற்குறிப்பிட்ட உள்ளடக்கப்படாத பதவிகள் அதற்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் இப்போதாகும்போது அதிகாரசபையின் அத்தியவசிய ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

(ஆ) அவதானிப்பு

இந்த கருத்திட்டத்துக்காக எதிர்காலத்தில் ஆட்சேர்க்கும் நோக்கில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் 217 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும், 2016.12.31 ஆகும்போது இந்த பிரிவுக்காக ஒப்பந்த அடிப்படையில் 54 அலுவலர்கள் மாத்திரமே ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். நிரந்த பதவியணி மற்றும் வேறு பிரிவுகளும் உட்பட கிட்டத்தட்ட 60 பேர்களாவர். அதற்கமைய இந்த கருத்திட்டத்தின் மூலம் இப்போதாகும்போது 5800 அலகு வீடுகள் மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டிருப்பதுடன், எதிர்காலத்தில் மேலும் 10,000 வீடுகள் மக்கள் பாவனைக்காக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்படுத்துவதன் மூலம் குறைந்த எண்ணிக்கைக்கொண்ட பதவியணியால் கருத்திட்டமொன்றில் அதிகளவு கடமைப்பாங்கினை நிறைவேற்ற முடியுமென்பது நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

சரியாக அடையாளங் காணப்பட்ட கடமைகளான அடிப்படை நிர்வாக கடமைகள், அனைத்து நிதி கொடுப்பனவுகள், நிதி பெற்றுக்கொள்ளுதல் போன்ற கடமைகள், காணிகள் கையேற்றல், விற்பனை போன்றவை அலுவல் நடவடிக்கைகள், ஒப்பந்தம் கைச்சாத்திடல், மாடி வீடுகளுக்காக நில கையாளுகைகள், மேம்பாட்டு அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல், இணக்கமான சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளல், கட்டிட திட்டங்கள் அங்கீகரித்தல் போன்ற கடமைகள் வேறு பிரிவுகளில் அலுவலர்கள் (பி.ப.நாயகம், பணிப்பாளர், பிரதி பணிப்பாளர் போன்ற பதவிகள்)

நிறைவேற்றப்படுவதால் மற்றும் இந்த கருத்திட்டத்தின் ஆளனிகள் மதிப்பீட்டிற்கு அப்பதவிகளில் உள்ளடக்கப்பட்டிருப்பதனால், அவர்களுக்கு கருத்திட்ட கொடுப்பனவு வழங்கப்படும்.

(இ) **அவதானிப்பு**

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் துணைமைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட நகர அபிவிருத்தி (தனியார்) கம்பனியிற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துள்ள மூன்று முகாமையாளர்கள் மற்றும் நான்கு கட்டிடக்கலைஞர்கள் அதிகாரசபையின் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் சேவையிற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
அங்கு அக்காலப்பகுதிக்காக அவர்களுக்கு சம்பளங்கள் உரிய துணைமைக் கம்பனிகள் மூலமே செலுத்தப்பட்டுள்ளன.கம்பனியின் முகாமைத்துவ சபை முடிவின் அடிப்படையில் உரிய கம்பனிகளால் மேலே குறிப்பிடப்பட்ட ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் அனைத்தும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மீண்டும் உரிய கம்பனியிற்கு அறவிடப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

அதற்கமைய அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய துணைமைக் கம்பனியான நகர முதலீடு மற்றும் அபிவிருத்தி தனியார் கம்பனியிற்கு ரூபா 8,163,819.62 பெறுமதியான தொகை 2017.09.20 ஆந் திகதி ஈடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாக கணக்குச் சீராக்கங்கள் 2017 ஆம் ஆண்டில் உரிய கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மேலும் அறியத்தருகின்றேன்.

4.8 குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

அவதானிப்பு

தளம்பல் வர்த்தக தொகுதியின் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் சிலர் இப்போதாகும்போது கொழும்பு கோட்டை பெஸ்தியன் மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வியாபார நிலையங்களில் வியாபார நடவடிக்கைகளுக்காக இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக இந்த கருத்திட்டத்தை பயனுறுதிவாய்ந்த முறையில் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் முகாமைத்துவ குழு மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும்.

5. கணக்குக் காட்டும் பொறுப்பும் நல்லாட்சியும்

5.1 கூட்டிணைப்புத் திட்டம்

அவதானிப்பு

2018-2023 காலப்பகுதியுடன் தொடர்புடைய கூட்டிணைப்புத் திட்டம் தயார்படுத்தும் நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதமாகும்போது அதனை முடிவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5.2 செயற்பாட்டுத் திட்டம்

அவதானிப்பு

2017 வருடத்துக்குரிய இலக்கிடப்பட்ட பணிகளுக்கு இயைவாக 2017 சனவரி தயார்படுத்தப்பட்ட KPI சுட்டிகள் மாதாந்தம் மீளாய்வு செய்தல் மற்றும் புதுப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கமைய 2017 வருடத்துக்குரிய அதிகாரசபையின் அதற்கமைய 2017 வருடத்துக்குரிய அதிகாரசபையின் செயலாற்றுகை மதிப்பீடு செய்யப்படும்.
மேலும் (2018-2023) கூட்டாண்மை திட்டத்துடன் இணங்கிய செயல்ரீதியான திட்டம் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் அதற்கமைய 2018 வருடத்துக்குரிய ஒவ்வொரு பிரிவுகளில் செயலாற்றுகை மதிப்பீடு செய்யப்படும்.

5.3 உள்ளக கணக்காய்வு

அவதானிப்பு

உள்ளக கணக்காய்வு பிரிவினால் அவதானிக்கப்பட்ட உள்ளக நிர்வாக செயல்முறைகளின் குறைப்பாடுகளைத் தவிர்த்து சரியான நிர்வாக செயல்முறையை நடைமுறைப்படுத்துவதற்காக தங்போதைய முகாமைத்துவத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இப்போதாகும்போது உள்ளக கணக்காய்வு பிரிவின் பதவியணியின் வெற்றிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளன.

செயலாற்றுகை கணக்காய்வு 2017 ஆம் ஆண்டில் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.

5.5 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

(அ) அவதானிப்பு

இயைபுடைய காணி தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் காணியில் குடியமர்ந்துள்ள 153 குடும்பங்கள் அப்புறப்படுத்துவதற்காகத் தேவைப்படுகின்ற சட்டரீதியான நடவடிக்கைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு இருப்பதுடன், அக்குறித்த 153 குடும்பங்களில் 15 ஏற்கனவே இயைபுடைய காணிப்பகுதியிருந்து விலகிச் சென்றுள்ளனர்.

(ஆ) அவதானிப்பு

இந்த இடம் இயற்கை காப்பீட்டு வலையத்தில் காணப்படுவதால், அமைவிடத்தை பார்வையிட வேண்டுமென 07/2015 பிரதேச திட்டமிடல் குழுவால் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய 09/2015 திட்டமிடல் குழு நடாத்தப்படுகின்ற தினம் குழுவில் கலந்துகொண்ட அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட கள ஆராய்ச்சியின் பின்னர் அது தொடர்பாக பிரதேச திட்டமிடல்கள் குழுவில் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் அதற்காக அங்கீகாரத்தை வழங்குவதற்கு முடிவு செய்துள்ளஇது.

(இ) அவதானிப்பு

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மேற்குறிப்பிட்ட கம்பனியால் ராஜகிரிய கொடுவேகொட அமைந்துள்ள 30 பேர்ச் கொண்ட நிலப்பகுதி நீண்டகால குத்தகை அடிப்படையில் அதாவது 30 வருடத்துக்காக குறித்த காணி குத்தகைக்கு விடுவதற்கு அதற்காக முகாமைத்துவ சபை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் காணி குத்தகைக்கு விடுவது தொடர்பான கௌரவ விடயபொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்துக்கு சமர்பிக்கப்பட்டிருப்பினும் அக்குறித்த அங்கீகாரம் கிடைப்பதற்கு தாமதம் ஏற்பட்டதனால், பின்னர் குத்தகை ஒப்பந்தம் வெளியிடும் வரை அக்குறித்த கம்பனி காணி, தற்காலிக பாவனைக்காக அனுமதி கோரப்பட்டுள்ளது.

அதற்கமைய, தற்காலிகமாக வாகன நிறுத்துமிடமாக காணி பயன்பாட்டிற்காக மாதாந்தம் வாடகை நிதி கொடுப்பனவு நிபந்தனையின் அடிப்படையில் காணி தற்காலிகமாக உரிய கம்பனியிற்கு ஒப்படைக்கப்பட்டிருப்பதுடன், மாதாந்த வாடகைத் தொகை அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த காணி வெளியேற்றுவது இரத்துச்செய்வதற்கு எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் தற்காலிக அனுமதி இரத்துச் செய்யப்பட்டு காணியின் அனுபோக உரிமை திரும்ப பெற்றுக்கொள்ளும்போது உரிய கம்பனி அதிகாரசபைக்கு எதிராக வழக்கு தொடுத்திருந்ததுடன், அக்குறித்த வழக்கு தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அக்குறித்த கம்பனியுடன்

கலந்துரையாடி தீர்த்துக்கொள்வதற்கு இணங்கியவாறு வழக்கு திருப்பி பெற்றுக்கொள்வதற்கு அக்குறித்த கம்பனி இணங்கியுள்ளது.

அதற்கமைய, சட்டரீதியான ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு காணியின் அனுபோக உரிமை திரும்ப அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்வதற்கும் கேள்விப்பத்திரங்களை அழைத்து வெளியேற்றுவதற்கும் நடவடிக்கையெடுக்கப்படும்.

(ஈ) **அவதானிப்பு**

இந்த கட்டிடத்தில் அனுமதி வழங்கிய மாடிகளின் எண்ணிக்கை மற்றும் அதற்கமைய வீட்டு நில அளவின் விகிதாசாரத்திற்காக அங்கீகாரத்தை வழங்குதல் பிரதேச திட்டமிடல்கள் குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் வழங்கப்பட்டுள்ளது. அடிப்படைத் திட்டங்களை பிரதேச திட்டங்கள் குழுவின் அங்கீகாரத்தின் பின்னரே தீர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அடிப்படை திட்டங்கள் தீர்ப்பு மூலம் வழங்கப்பட்டுள்ள மாடிகளின் அளவு மற்றும் வீட்டு நில அளவு விகிதாசாரம் பிரதேச திட்டங்கள் குழுவால் அங்கீகாரம் வழங்கியுள்ள அளவுக்குள் காணப்படுகின்றது.

(ஊ) **அவதானிப்பு**

இந்த இடத்தில் உரிய அபிவிருத்தி நடவடிக்கைக்காக வீதி போதுமானதாக இல்லாதிருப்பினும் மோட்டார் வாகன போக்குவரத்து மதிப்பீட்டு அறிக்கை (TIA) அடிப்படையாகக் கொண்டு அடிப்படைத் திட்டங்கள் தீர்ப்பனவு வெளியிடப்பட்டுள்ளது.

(ஊ) **அவதானிப்பு**

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கிட்டத்தட்ட 5.32 பேர்ச் காணிப்பகுதி இந்த அதிகாரசபையினால் TRZ Construction (Pvt) Ltd நிறுவனத்துக்கு வீடளிப்பு கருத்திட்டத்துக்காக குத்தகைக்கு விடுக்கப்பட்ட அளவிலிருந்து 0- ஏக்கர் 02 ரூட்- 16 பேர்ச் கொண்ட காணிப்பகுதியாக இருப்பதுடன், குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் அக்குறித்த காணிப்பகுதியில் கடை அறை நிர்மாணித்து இந்த அதிகாரசபைக்கு ஒப்படைக்க வேண்டும்.

கணக்காய்வு அறிக்கையில் மேற்குறிப்பிட்ட காணியை குத்தகைக்கு விடும்போது காணியின் பெறுமதியிலிருந்து 75% இற்காக 06 அலகுகள் கொண்ட வீட்டுக்கட்டிடம் மற்றும் அதற்குரிய காணி அளவைக் காட்டுகின்ற 1433 கொண்ட கிடைப்படத்தின் துண்டு இலக்கம் 02 கொண்ட காணி பகுதி மாத்திரம் உரிய குத்தகைதாரரால் ஒப்படைக்கப்பட்டிருப்பினும், கடை அறைகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை..

எவ்வாறாயினும் இந்த வீடளிப்பு கருத்திட்டம் அப்போது இந்த அதிகாரசபையின் கருத்திட்ட முகாமைத்து பிரிவு மூலம் கையாளப்பட்டிருப்பதுடன், காணிப் பிரிவில் குத்தகை ஆவணக்கோவை பரிசோதிப்பின் பின்னர் இது தொடர்பாக தகவல்களை கண்டறிவதற்கு முடியாதுள்ளது. மேலும் கருத்திட்ட முகாமைத்துவ பிரிவிலிருந்தும் இவ்வாறான ஆவணக்கோவை கண்டறிவதற்கு முடியாதுள்ளதால், இந்த 06 வீட்டு அலகுகள் அதிகாரசபைக்கு ஒப்படைத்த காலப்பகுதிக்குள் செயற்பட்ட இணக்கப்பாடு தொடர்பில் எழுத்தாலான சாட்சி இல்லாமை அடிப்படையில் காணியின் குத்தகை பெறுமதியிலிருந்து 75% ஈடுசெய்யும்போது பின்பற்றப்பட்ட தொழிற்பாடு எதுவென தெரியாதுள்ளது.

காரணங்கள் அவ்வாறிருப்பதனால் குத்தகைதாரரால் அதிகாரசபைக்கு ஒப்படைத்துள்ள 06 வீட்டு அலகுகள் நிர்மாணிப்பதற்கு ஏற்கப்பட்ட செலவு அவரால் இந்த அதிகாரசபைக்கு செலுத்துவதற்கிருந்த75% குத்தகைப் பெறுமதியான ரூபா 3,240,000/= இற்கு சமனானதாக இருந்ததனால், நோக்கெல்லை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 5.32 பேர்ச் கொண்ட நிலப்பகுதி குத்தகைதாரர் அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட வில்லையென்ற தீர்மானத்துக்கு வர முடியும். ஆகையால் குத்தகைதாரரிடமிருந்து எழுத்தலான சாட்சி இல்லாததனாலும் அதிகாரசபைக்கு மேலும் அறவிட்டுக்கொள்வதற்கு நிதி இல்லை.

(எ) **அவதானிப்பு**

குறை செயற்பாட்டு தொழிற்முயற்சிகள் மற்றும் குறைப் பயன்பாட்டு சொத்துக்கள் அரசுக்கு கையேற்றல் மற்றும் தொடர்புடைய அமைச்சரவை முடிவுக்கமைய அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் கையளிக்கப்பட்டுள்ள சரியான நில அளவு காணி ஏக்கர் 14.5 ஆகும். இதில் 2.56 ஏக்கர் காணி அளவிலிருந்து

03 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதுடன் (தபால் திணைக்களம்- 2 ரூட் 38.24 பேர்ச், லீ ஹெஜஸ் கம்பனி- 1 ரூட் 12.88 பேர்ச் , சினோ லங்கா ஹோட்டல் கம்பனி -1 ஏக்கர் 1 ரூட் 39.37 பேர்ச்) மீதி நலப்பகுதி (சார்மஸ் தானிய களஞ்சியசாலை 9 ஏக்கர் 3 ரூட் 27.7 பேர்ச்) அபிவிருத்தி செய்வதற்காக செயலாற்றப்பட்டு வருகின்றது. .

பதுளை மாவட்டதில் அமைந்துள்ள 6 ஏக்கர் காணி, 2 ரூட், 24 பேர்ச் கொண்ட அளவிலிந்து 3 ரூட், 25.6 பேர்ச் காணி கையளிக்கப்பட்டுள்ளது. அதிகாரசபை மூலம் அதன் பதுளை சுற்றுலா விடுதி பாமரிக்கப்படும்.

(ஏ) அவதானிப்பு

அதிகாரசபைக்குச் சொந்தமான காணிக்குள் 2001 வருடங்களில் சிறிய வியாபாரிகளுக்காக கட்டிடமொன்றை நிர்மாணிக்கப்படினும் மக்கள் நெரிசல் இல்லாததனால் அது வெற்றியடையவிலலை. ஏதிர்காலத்தில் இந்த காணி வேறு அபிவிருத்தி நடவடிக்கைக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

(ஐ) அவதானிப்பு

வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனம் இந்த அதிகாரசபைக்கு ஒப்படைக்கும்போது உரிய ஹோட்டல் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக செலவு செய்யப்பட்ட தொகைத் தொடர்பாக ரூபா 406,483,000 பெறுமதியான தொகை உரிய கம்பனியிற்கு செலுத்துவதற்கு நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டிருப்பினும் பின்னர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள மதியுரையின் பிரகாரம் உரிய நட்டஈடு தொகை பகுதியாக நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டிருப்பதுடன் 2013 வருடத்தில் ரூபா 45 மில்லியன்கள், 2015 ஆம் ஆண்டில் ரூபா 100 மில்லியன்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டில் ரூபா 40 மில்லியன்கள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பற்றாக்குறையாக இருந்த ரூபா 261 மில்லியன்கள் ஆன தொகை 2017 ஆம் ஆண்டில் நீதிமன்றத்தில் வைப்பிடப்பட்டிருப்பதுடன் அது தொடர்பாக கணக்கியல் சீராக்கங்கள் சரியான முறையில் புத்தகங்களில் பதிவு செய்துள்ளன.

(ஒ) அவதானிப்பு

அபிவிருத்தி அனுமதிப்பத்திர கட்டணமாக அறவிடப்பட்ட நிதி, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு குறை வருமானம் பெறும் குடும்பங்களுக்காக வீடுகளை அமைப்பதற்காக நிதி உதவிகளை வழங்கிய குசும் வீடளிப்பு கருத்திட்டத்துக்காகவே அனுப்பப்பட்டது. அக்கருத்திட்டம் இப்போதைக்கு செயற்படாநிலையில் இருப்பதுடன் 2010 ஆம் ஆண்டிலிருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலமும் குறை வருமானம் பெறும் குடும்பங்களுக்காக வீடுகளை வழங்கும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் அத்தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்துக்காக அதகாரசபையின் முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் பிரகாரம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

தவிசாளர்

நகர அபிவிருத்தி அதிகாரசபை

(ஓ) அவதானிப்புகள்

2011 ஆம் ஆண்டு யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட குதிரை திடல் போட்டி மைதானம் சர்வதேச ரக்பி மைதானமாகவும், க்ரான்ட் ஸ்டெண்ட் மற்றும் மினி ஸ்டெண்ட்

கட்டிடங்களின் பார்வையாளர் மண்டபம், கடை தொகுதி என்பவற்றை நவீன வசதிகளுடன், ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் அளவிலான காலவெல்லைக்குள் நிருமாணிப்புகளை முடிவுறுத்துவதற்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தரைப் படையின் 6 ஆவது பொறியியலாளர் சேவைகள் படையணியில் 400 சென்னின் சேவையில் உள்ளவர்களின் உழைப்பினை இதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டது. அவ்வாறானதொரு பாரிய அளவிலான ஊழியர் படையின் உழைப்பினை பல பிரிவுகளின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அதன்போது அதிகளவில் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டதுடன் தேவைகளும் பல்வகைப்பட்டன.

களஞ்சிய சாலை வசதிகள், பொருட்களின் சிறப்புத் தன்மையின் விவரக் குறிப்புக்கமைவாக பகுதி பகுதியாக பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விரைவாக முடிவுறுத்தப்பட வேண்டிய பணியாவதால், இந்த நிருமாணிப்பு பணிகள் மேற்கொண்டுச் செல்கையில் தேவையான ஆலோசனைகளையும் விவரக்குறிப்புகளையும் ஆலோசனை சேவை வழங்கிய நிறுவனத்திற்கு வழங்க நேரிட்டது. பெரும்பாலான பொருட்கள் மிகவிசேடமான விவரக்குறிப்புகளை கொண்டமைந்தபடியால் அதரற்கான வழங்குநர்களும் சிறிய அளவிலான எண்ணிக்கையினரே இருந்தனர். ஆகையால் குறித்த பொருட்களின் பெறுகை நடவடிக்கைக்காக வரையறுக்கப்பட்ட விலை கொள்வனவு முறை பயன்படுத்தியமைக்கான காரணம் யாதெனில், தேவையற்ற வகையில் காலத்தை செலவிடுவதற்கு அந்தக் கருத்திட்டத்தில் வாய்ப்பு இல்லாமையாகும்.

மேலும் கருத்திட்டத்தின் பொருட்டு 10 மில்லியன் ரூபா என்ற வரையறைக்கு அமைவாக கொள்வனவுகள் மேற்கொள்ள இயன்றவாறு கருத்திட்டங்களின் பெறுகை குழுவொன்று விசேடமாக நியமிக்கப்பட்டிருந்தது. 10 மில்லியன் ரூபாவை விஞ்சின்ற அனைத்து கொள்வனவுகளையும் சம்பந்தப்பட்ட பெறுகை நடவடிக்கை குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அப்பொழுது அரசாங்க பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் தொடர்ச்சியான கண்காணிப்புக்கு உட்படுத்திய கருத்திட்டமாவதால் உரிய நிருமாணிப்பு நடவடிக்கைகளை துரிதமாகவும் உயர் தரத்திலும் தேவையான ஆலோசனைகளுக்கமைவாக குறித்துரைத்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய விலை கோருதல் முறையை பயன்படுத்துவதன்மூலம் உரிய வழங்குதல்கள் / ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது.

(ஒ) அவதானிப்பு

அதன்படி, கொழும்பு 06, வெல்லவத்தை, மயுர ப்ளேஸில் அமைந்துள்ள பழைய புடைவைக் தொழிற்சாலைக்குரிய தொழிலாளர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள கட்டிடங்களை உடைத்து அகற்றும்போது, இந்த அதிகார சபை பின்பற்றுகின்ற பெறுகை நடவடிக்கையின்படி பின்வருமாறு பணியாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

03. இந்த அதிகார சபையில் தாபிக்கப்பட்டுள்ள உள்ளக மதிப்பீட்டு குழுமூலம் விடயத்துடனான கட்டிடங்களை அடிப்படையாகக்கொண்டு பெறுமதியினை மதிப்பிடப்பட்டது.

04. குறித்த அடிப்படை பெறுமதியை, ஆகக்குறைந்த விலையாக கவனத்தில்கொண்டு அதிகூடிய விலை கணக்கினை சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரரை தெரிவு செய்வதற்காக பின்வரும் வருமாறு பத்திரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டது.

4. தினமிண - 2014.10.03
5. டேலிநியுஸ் - 2014.10.03
6. தினகரன் - 2014.10.03

உரிய காலப்பகுதிக்குள் பின்வரும் வகையில் இரண்டு ஒப்பந்தக்காரர்களால் விலை கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டன.

03. திமுது என்டர்ப்ரைஸஸ் - 12,200,240.00
04. அநுர ஜயலத் - 3,800,000.00

ஆயினும் அடிப்படை பெறுமதியான 14.5 மில்லியன் ரூபாவை விஞ்சிய எதுவித கேள்வி பத்திரத்தையும் சமர்ப்பிக்காதபடியால் பெறுகை நடவடிக்கை படி திருப்திகரமான கேள்விக்காரரை தெரிவு செய்து கொள்வதற்கு முடியவில்லை. மேலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரண்டு கேள்வி பத்திரங்களுக்கிடையில் அதிக வித்தியாசம் காணப்பட்டதால் அதிகூடிய விலை கணக்கினை சமர்ப்பித்திருந்த கேள்விக்காரர், அடிப்படை பெறுமதியை அதிகார சபையிடம் செலுத்தி மேற்படி ஒப்பந்தத்தை பொறுப்பேற்பதற்கு மேற்கொண்ட வேண்டுகோளுக்கு முயற்சி எடுக்கவில்லை.

ஆயினும், அண்மித்து நிருமாணிக்கப்பட்ட "லக்முத்து செவன" வீடமைப்பு தொகுதியை மக்கள்மயப்படுத்தும் வைபவம் 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 07 ஆந் திகதியில் விடயத்துடனான கட்டிடம் அமைந்துள்ள நிலத்தில் நடாத்துவதற்கு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நிலவிய திடீர் தேவையினை கருதி விடயத்துடனான கட்டிடங்களை அகற்றப்பட்டு வைபவம் மற்றும் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பொருத்தமான வகையில் நிலத்தை அமைத்துக்கொள்ளுதல் தொடர்பாக இந்த அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் நாயகத்தின் (நிதி) தலைமைத்துவத்துடனும் பணிப்பாளர் (காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்), பணிப்பாளர் (பொறியியலாளர் சேவைகள்) மற்றும் நகர புனர்வாழ்வு கருத்திட்டத்தின் பிரதி பணிப்பாளர்களின் பங்களிப்புடனும் கலந்துரையாடப்பட்டது.

இவ்வாறான திடீர் தேவைகளின்போது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்த அதிகார சபையிடம் காணிகள் மற்றும் ஆதனங்கள் என்பன கையேற்கப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது அவற்றில் அகற்றப்பட வேண்டிய கட்டிடங்கள் இருப்பின் சந்தர்ப்பத்திற்கேற்றவாறும் அந்த கட்டிடங்களின் நிலைமைக்கேற்றவாறும் மீண்டும் பயன்படுத்த முடியுமான பொருட்கள் இருப்பின் அவற்றின் பெறுமதியை கவனத்தில்கொண்டு விலை கணக்குகள் கோரப்படுவதுடன், ஒப்பந்தக்காரர்கள்மூலம் அல்லது பொருட்களின் பெறுமதி இல்லையெனில் அவற்றுக்கு பணம் செலுத்தாது பயன்படுத்துநர்கள் கழற்றி அகற்றி கொண்டுச் செல்வதற்கு வாய்ப்பளிப்பதன்மூலம் அல்லது அதிகார சபையின் செலவில் உடைத்து அகற்றுதல் முன்னர் இருந்து நடைமுறைப்படும் செயற்பாடுகள் ஆகும். ஆகையால் விடயத்துடனான கட்டிடங்கள் அதிகார சபையின் செலவில் உடைத்து அகற்றி விலை மதிப்பிட முடியுமான பொருட்களை காணியில் வைத்துவிட்டு அப் பொருட்களை மதிப்பீடு செய்து ஏலவிற்பனையில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அதற்காக இந்த அதிகார சபையில் தலைவர் அவர்களின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

அந்த அனுமதி பிரகாரம் நகர புனர்வாழ்வு கருத்திட்டத்தின் அலுவலர்களதும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பாதுகாப்பு அலுவலர்களதும் பூரண கண்காணிப்பின்கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட விலை கணக்குகளின் கீழ் இயந்திர உபகரணங்கள் மற்றும் ஊழியர்களைக்கொண்டு விடயத்துடனான கட்டிடங்களை உடைத்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் காணியில் வைக்கப்பட்ட விலை மதிப்பீடு செய்ய முடியுமான பொருட்களை பெறுகை நடவடிக்கை படி, காணியிலிருந்து அகற்றுவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணிகள் அபிவிருத்தி முகாமைத்துவ பிரிவிடம் கையளிக்கப்பட்டது.

அதன் படி, எஞ்சிய பொருட்களை காணி முகாமைத்துவப் பிரிவால் மீண்டுமொருமுறை மதிப்பீடு செய்து விலை கணக்குகள் கோரப்பட்டு அதிகார சபையிடம் ரூபா. 750,000.00 அறவிடப்பட்டுள்ளது.

அதற்கமைய ஒப்பந்தம் பொருட்டு விலை கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒப்பந்தக்காரர்கள், பெறுமதிக்கு குறைவாக விலை கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையாலும், அந்த விலை கணக்குகளை நிராக்கப்படுதல் வேண்டுமென்ற தொழில்நுட்ப குழுவின் கருத்தாக அமைந்த படியாலும் அவர்களிடம் ஒப்பந்தம் கையளிக்கப்படமுடியவில்லை.

மேலும் இங்கு இருந்த பழைய கட்டிடங்களை உடைத்து அகற்றிய பின்னர் மீண்டும் பயன்படுத்த முடியுமென கருதிய பொருட்களின் பெறுமதியாக, உள்ளக மதிப்பீட்டுக் குழுவால் 14.5 மில்லியன் போன்ற பெறுமதியை மதிப்பீடு செய்திருப்பினும், அந்த குழு முறையாக கட்டிடங்களை உடைத்து அகற்றிய பின்னர் அதில் உள்ள பலகைகளின் பெறுமதி ரூபா. 750,000.00 என்று மதிப்பீடு செய்திருந்தது. அதற்கமைவாக இந்த இரண்டு மதிப்பீடுகளும் ஒரே குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் 100 ஆண்டுகளையும் பார்க்க பழைமையான கட்டிடங்களில் உள்ள பொருட்களின் உண்மையான பெறுமதி அந்த கட்டிடப் பகுதியை உடைத்து அகற்றிய பின்னர் மேற்கொண்ட மதிப்பீட்டை ஏற்றுக்கொள்ள முடியுமாகும்.

(க) அவதானிப்பு

அ.அ.கொ. 5529 துண்டு இலக்கம் 23 இல் ஒரு பகுதி (பேர்ச்.7)என்று அடையாளம் காணலாம். அந்த காணி பகுதியில் குடியிருக்கும் 4 அத்துமீறல்காரர்களை சட்டம்மூலம் அகற்றுவதற்காக நீதிமன்ற கட்டளைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அ.அ.கொ.8091 பேர்ச் 96 இந்த காணியினுள் எதுவித அத்துமீறல் அல்லது நிருமாணிப்புகள் இதுவரை இடம்பெறவில்லை. தற்போது இந்த காணி இலங்கை பாராளுமன்றத்தின் வேண்டுகோளுக்கமைவாக அந்த நிறுவனத்திடம் வழங்குவதற்கு நடவடிக்கை மெற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ங)

(xx) அவதானிப்பு

இந்த கருத்திட்டம் ஆரம்பிப்பதற்காக கொழும்பு நகரத்தில் காணிகளில் நிலவிய பற்றாக்குறை காரணமாக நகர புனர்வாழ்வு கருத்திட்டத்தினகீழ் நிருமாணிப்புகள் மேற்கொள்கின்ற பெரும்பாலான காணிகள் அரசாங்கம் மற்றும் அரசாங்க நிறுவனங்களின்கீழ் இருந்த படியால், அந்த அரச நிறுவனங்களின் இணக்கப்பாட்டுடன்

அந்த காணிகளில் நிருமாணிப்பு மேற்கொள்ளப்பட்டது. தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ள 10 வீடமைப்பு தொகுதிகளில் 8 இல் காணிகளின் உரிமை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு இயன்றுள்ளதுடன், 34 வீடுகள் (அலகுகளைக்) கொண்டமைந்துள்ள "புரதொர செவன" வீடமைப்பு கருத்திட்டம் மற்றும் 216 வீடுகளைக் (அலகுகளைக்) கொண்டமைந்துள்ள "லக்சந்த செவன" வீடமைப்பு கருத்திட்டத்தில் கையேற்புகள் முடிவுறுத்தப்படவில்லை. "ரன்திய உயன" வீடமைப்பு கருத்திட்டத்தில் காணியின் பயன்கொள்ளல் பிரதேச செயலாளரால் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளதால் அதன்படி நிருமாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இந்த காணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையேற்பதற்கு தேவையான அமைச்சரவை அனுமதியும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி அந்த எல்லா காணிகளிலும் உரிமைகளை கையேற்கும் சட்டம் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வாறு கையேற்பதற்கு காலமெடுத்தாலும் இந்த கையேற்பு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்னறது.

(xxi) **அவதானிப்பு**

மேற்படி வீடமைப்பு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது கட்டியெழுப்புகின்ற ஒரு வீட்டின் தரம் மற்றும் அலகொன்றின் விலை முன்னர் முடிவு செய்து தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் பின்வருமாறு ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

3. உள்நாட்டு ஊ, தொகுதியில் ICTAD பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள்
4. நிருமாணிப்பு துறையில் விசேட அனுபவமுள்ள வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்கள்

இந்தக் கருத்திட்டத்தில் கட்டம் 1 ஆக ஒப்பந்தம் வழங்கிய உள்நாட்டு ஒப்பந்தக்காரர்கள், ஐஊவுயுனு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டு ஊ1 ஒப்பந்தக்காரர்கள் அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் கிடைக்கின்ற வகையில் விலை கணக்குகள் கோரப்பட்டு ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், கருத்திட்டத்தில் ஐஐ ஆவது கட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களையும் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட, ஒரு வீட்டுக்கு 3.45 மில்லியன் ரூபாவின்கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபை 35% ஆன ஆரம்ப செலவுகளை மேற்கொள்வதற்கும், எஞ்சிய 65% அளவினை செலவுகளை ஒப்பந்தக்காரர் மேற்கொள்வதற்கும. வீடமைப்பு கருத்திட்டத்தின் இறுதியில் அந்த 65% பணத் தொகையை செலுத்துவதற்கும் அமைவாக ஒப்பந்தம் அளிக்கப்பட்டது. அதன்படி வீடொன்றின் விலை எல்லா ஒப்பந்தக்காரர்களின் பொருட்டும் சமமாகியதுடன், அவர்களின் நிதி ஆற்றலுக்கமைவாக ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

இந்த ஒப்பந்தங்களை வழங்கும்போது நிருமாணிப்பு ஒப்பந்தக்காரர்களின் சங்கத்துடன், கலந்துரையாடப்பட்டு நிதி ரீதயிாக ஆற்றல் உள்ள ஊ1 தொகுதிக்குள் அடங்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது. மேலும் அமைச்சரவையால் பரிந்துரை செய்யப்பட்ட முறைமைக்கமைவாக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், இந்த ஒப்பந்தம் கையளிக்கப்படும்போது அமைச்சரவையால் நியமனம் செய்யப்பட்ட கலந்துரையாடல் உடன்படிக்கை குழுவினதும் (ஊயுஊ) நிதி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்ட கருத்திட்டக் குழுவினதும் (ஊ) பரிந்துரைக்கமைவாக ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தும்போது தன்மைக்கமைவாக பெறுகை முறைமைகளை பின்பற்றியுள்ளதுடன், கட்டம் 11 இல் இந்தக் கருத்திட்டத்தின்

வீடொன்றின் விலை கணக்குகள் நிலைப்படுத்துவதன் ஊடாக ஐஊவுயுனு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஊ1 தொகுதியின் ஒப்பந்தக்காரர்களுக்கு சமமான வாய்ப்புகளை வழங்குவதன்மூலம் ஒப்பந்தங்களை வழங்கும்போது வெளிப்படைத்தன்மையுடன், செயலாற்றப்பட்டுள்ளது. அமைச்சரவை விஞ்ஞாபனங்களில் தெளிவான விலை கோராத பிரேரணைகளின் பொருட்டு அனுமதி கோரியுள்ளதுடன், அதன்படி விலை கணக்கு கோராத அந்த அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்திய தன்மைபடி விலை கணக்கு கோராத பிரேரணைகளாக நடைமுறைப்படுகின்றது. இந்தக் கருத்திட்டத்தில் பெரும்பாலான ஒப்பந்தங்களின் பொருட்டு மேற்கொள்கின்ற வேலைகளுக்கமைவாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளப்படவில்லையென்பதுடன், ஒப்பந்தக்காரர்களால் 65% நிதி பயன்படுத்தல் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன்படி இந்த ஒப்பந்தங்கள் நேரடி ஒப்பந்த அளிப்பாக கூற முடியாதென்பதுடன், ஒப்பந்தங்களை அளிக்கும்போது அமைச்சரவையால் நியமனம் செய்யப்பட்ட "கலந்துரையாடல் உடன்படிக்கை குழுவின் மற்றும் கருத்திட்ட குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக மட்டும் ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ளது.

(xxii) **அவதானிப்பு**

கணக்காய்வு உசாவுதலில் காட்டப்பட்டுள்ள 11 ஆவது கட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்திய 12 ஒப்பந்தங்களின் பொருட்டு பல மாதங்களுக்கு அந்த ஒப்பந்த கம்பெனிகளுடன், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அந்த பணிகள் முடிவுறுத்தப்பட்டிருந்தன. அதன்படி ஒப்பந்தங்களை விணைத்திறனுடன் பேணிச் செல்வதில் பிரச்சினைகளுடன் கூடிய நிலைமை ஏற்படவில்லை.

அவதானிப்பு

கட்டம் 1 இன் கீழ் 1464 வீடுகள் மாளிகாவத்தை, கொலொன்னாவ வீடமைப்பு தொகுதிகளின் நிருமாணிப்பு ஒப்பந்தம் ரூபா.4,139,460,000/- ஆன பெறுமதிக்கு ஐஏசுஊடு யுளளநவ ர்ழடனபௌள நிறுவனத்திடம் அளிக்கப்பட்டு 4 ஆண்டுகள் முடிவடைந்துள்ளது. அதன்போது இந்த ஒப்பந்தக்காரர்களால் அரும்பத்தில் மேற்கொண்ட நிருமாணிப்புகளை வேறுபட்ட தொழில்நுட்ப முறைமைகளை (குழசஅறழசம ளுலளவநஅ) பின்பற்றி மேற்கொண்டுள்ளபடியால், எஞ்சிய நிருமாணிப்பு நடவடிக்கைகளை வேறு ஒப்பந்தக்காரர்கள்மூலம் மேற்கொள்கையில் மேலதிகமாக செலவினை செய்ய வேண்டியுள்ளது. இந்த காரணத்தால் சம்பந்தப்பட்ட நிறுவனம்மூலம் நிருமாணிப்புகளை மேற்கொள்ளுதல் மிகவும் நன்மைபயக்கும் நிலைமையை கவனத்தில்கொண்டு, அந்த நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தத்திற்கு ஒப்பமிட்டு உள்நாட்டு வங்கியின் ஊடாக நிதி பெற்றுக்கொள்வதன்மூலம் கருத்திட்டத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் உடன்படிக்கை படி 4100 வீடுகளை நிருமாணிப்பதற்காக ஒப்பந்தம் கையளிக்கப்படினும், அந்த நிறுவனத்தால் 2612 வீடுகளின்ன பொருட்டு நிருமாணிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இதன்படி IVRCL நிறுவனத்தின் நிதியை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் நிருமாணிப்பு ஆற்றல் என்பவற்றை மீண்டும் கலந்துரையாடப்பட்டு அந்த 2612 வீடுகளில் அளுத் மாவத்தை வீடமைப்பு கருத்திட்டத்திற்கு உரிய 1248 வீடுகளை வேறு இரண்டு கம்பெனிகளுக்கு (துடாவே கம்பெனியிடம் 672 வீடுகளும் CML-MTD Construction

நிறுவனத்திடம் 576 வீடுகளும்) என்ற வகையில் நிருமாணிப்பு ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டன. அந்த இரண்டு கருத்திட்டங்களும் 2018 ஏப்பிரல் மாதத்தில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(xxiii) **அவதானிப்பு**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைக்கு அமைவாக தாம் குடியிருந்த வீட்டுக்கு ஒரு வீடு வழங்குதல் 2013 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய போதிலும், 2014 ஆம் ஆண்டில் நிருமாணிப்புகளை முடிவுறுத்திய வீடமைப்பு கருத்திட்டங்களில் அதனை செயற்படுத்தல் நடைமுறையில் மேற்கொள்ளப்பட இயலவில்லை. அந்த கொள்கைக்கு எதிராக தெரிவு செய்யப்பட்ட தோட்ட குடியிருப்புகளில் இருந்த மக்கள் கடும் எதிர்பை தெரிவித்ததுடன், அதன்மூலம் மீள குடியமர்த்தும் பணிகள் தாமதமடைந்தது. அந்த உளப்பாங்கினை சரி செய்வதற்காக பாரிய அளவிலான ஊடக நடவடிக்கை மேற்கொண்ட போதிலும், அதன்மூலம் எதிர் பார்க்கப்பட்ட பலன்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை. அந்த எதிர்புகளுக்கு அரசியல் பிரதிநிதிகளும் பொது மக்களுக்கு தமது ஒத்துழைப்பு வழங்கியதால், வீடுகள் வழங்குவதை நடைமுறைப்படுத்திய அலுவலர்களுக்கு நடைமுறையில் நிறைவேற்ற முடியுமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

அதேபோன்று நகர புனர்வாழ்வு கருத்திட்டம்மூலம் நிருமாணிக்கப்பட்ட வீடொன்று 400 (அலகு) சதுர அடிகள் ஆவதால், அதனையும் பார்க்க விசாலமான வீடுகளில் உள்ள குடும்பங்களுக்கு அதில் குடியிருப்பதற்கும் அவர்களுக்குரியதாக இருந்த வீட்டு தளவாடங்களை வைத்துக்கொள்வதற்கும் 400 சதுர அடியிலான வீடுகள் (அலகுகள்) போதியதற்றதன் காரணமாக மேன்முறையீட்டு குழுமூலம் தீர்மானித்து மேலதிக வீடுகளை வழங்குவதற்கு நேரிட்டது.

அதன்படி மேன்முறையீட்டு குழுமூலம் 700 சதுர அடிக்கு அதிகமான சதுர அடி உள்ள நல்ல நிலைமையிலான வீடுகளின் பொருட்டு 02 வீடுகளும், சதுர அடி 1100 இற்கும் அதகிமான நல்ல நிலைமையிலான வீடுகளின் பொருட்டு 03 வீடுகளும் வழங்க நேரிட்டது. அவ்வாறு மேலதிக வீடுகள் வழங்கப்பட்டவர்கள் குடியிருந்த வீடுகளின் சதுர அடி அளவு, மாடிகளின் எண்ணிக்கை மற்றும் வீட்டின் நிலைமை என்பவற்றை காட்டப்படுகின்ற புகைப்படங்களும் தரவுகளும் இந்த கருத்திட்டத்திறகு உரியதாக உள்ளபடியால், அதன் நடைமுறை நிலைமையினை புரிந்துக்கொள்ளலாம். வி'ாலமான வீடொன்றுக்கு ஒரு வீடொன்று மட்டும் வழங்கினால் அவர்கள் காணிகளிலிருந்து அகற்றப்படுவதனை நிராகரிக்கப்படுவதால் சட்ட ரீதியாக அவர்களை அகற்றுதல் மேலும் பல ஆண்டுகள் செல்வதால் உரிய காலப்பகுதிக்குள் காணிகளை விடுவித்துக் கொள்ள முடியாது.

கணக்காய்வு அறிக்கையில் வீடொன்றின் பெறுமதி 8.6 மில்லியன் ரூபா என்று காட்டப்பட்டிருப்பினும், அவ்வாறான ஒரு வீட்டின் பெறுமதி ஏறத்தாழ 03 மில்லியன் (நிருமாணிப்பு செலவு) ஆவதுடன், அதில் 1/3 ஆன ரூபா ஒரு மில்லியன் மீண்டும் அறவிடும் அடிப்படையில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அவதானிப்பு

IVRCL கம்பெனியுடன் மேற்கொண்ட உடன்படிக்கை பிரகாரம் ஒப்பந்தக்காரர்களால் வீடுகளை நிருமாணித்து இறுதியில் அதிகார சபையிடம் கையளித்த பின்னர்

ஒப்பந்தத்துடனான பணம் செலுத்தப்படுவதால், ஒப்பந்தக்காரருக்கு ஏற்புயைடதான நிதியை அவரால் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இந்திய நாட்டு கம்பெனியான, அந்த ஐஏசுஊடு கம்பெனிக்கு உடன்படிக்கை கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நிதியை பெற்றுக்கொள்ளும் ஆற்றல் இருந்தது.

ஆயினும் அந்தக் காலப்பகுதிக்குள் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தியாவிலும் பொதுவாக பாரிய அளவிலான நிருமாணிப்பு கம்பெனிகள் நிதிசார் ரீதியாக வீழ்ச்சியடைந்ததால், இந்த நிறுவனத்திற்கு அந்த தடைகள் தாக்கமாக அமைந்தது.

அந்த சந்தர்ப்பமாகும்போது IVRCL இந்தீய நிறுவனத்தால் இந்தக் கருத்திட்டத்தின் பொருட்டு ஏறத்தாழ இலங்கையின் 6 மில்லியன் ஐ.அ.டொலர் அளவு நிதி முதலீடு செய்திருப்பினும், நிதி நெருக்கடி காரணமாக மேலும் நிதி முதலீடு செய்யும் ஆற்றல் இருக்கவில்லையென ஐஏசுஊடு நிறுவனத்தால் அதிகார சபையிடம் அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக அவர்களிடம் வழங்கப்பட்டிருந்த 89.175 மில்லயின் ஐ.அமெ.டொலர் வங்கி பிணைகளை அடகு வைத்து இந்தியாயவில் ஐஊஐஊஐ வங்கி மற்றும் மேலும் இரண்டு வங்கிகளின் கூட்டிணைப்புடன் கருத்திட்டம் பொருட்டு எஞ்சிய நிதியை பெற்றுக்கொண்டு, அந்த நிதியை இந்தக் கருத்திட்டத்தில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கிடையில் தற்காலிக அடிப்படையில் ICICI இந்தீய வங்கியிலிருந்து IVRCL நிறுவனம் பெற்றுக்கொண்ட 5 மில்லியன் ஐ.அ.டொ பணத்தையும் பின்னர் இங்கு முதலீடு செய்யப்பட்டது. இதன்படி அந்த சந்தர்ப்பத்தில் 11 ஐ.அ.டொ அளவிலான முதலீடை மட்டும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிதி பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டின் தாமதம் காரணமாக நிருமாணிப்பு நடவடிக்கைகள் துரிதமாக நடைபெறவில்லையென்பதுடன், உடன்படிக்கையுடனான காலப்பகுதிக்குள் நிதி முன்னேற்றத்தை காண்பிப்பதற்கு முடியவில்லை. இதன் காரணமாக கருத்திட்டத்தை முன்நோக்கி கொண்டுச் செலவ்தற்கும் வங்கி கடன் பத்திரங்களை பூர்த்தி செய்வதற்கு வங்கி பிணைகள் மற்றும் ஒப்பந்தத்தை நீடிப்பதற்கு அவர்களால் விண்ணப்பித்த போதிலும் அதிகார சபையால் அதனை நிராகரிக்கப்பட்டது.

IVRCடு லங்கா லிமிடெட் நிறுவனத்திடம் அடிப்படையாக அளிக்கப்பட்டுள்ள 4100 வீடமைப்பு அலகுகளின் பொருட்டு உடன்படிக்கையுடன் கூடிய ஒப்பந்த பெறுமதி 89.175 மில்லியன் ஐ.அமெ.டொலர்களாகும்.

எவ்வாறாயினும் ஏனைய ஏற்புடைய ஒப்பந்த உடன்படிக்கை 2015 ஏப்பிரல் மாதம் 27 ஆந் திகதி 1464 வீடமைப்பு அலகுகளின் பொருட்டு திருத்தம் செய்யப்பட்டதுடன், அந்த ஒப்பந்த பெறுமதி 31.842 மில்லியன் ஐ.அமெ.டொலர்களாகும். அதன்படி முதலாவதாக குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த பெறுமதியின் பொருட்டு 64.5 மில்லியன் ஐ.அமெ.டொ திறைசேரி பிணையும், 24.075 மில்லயின் ஐ.அமெ.டொ நிதி பிணையும் (Rupee Deposit) என்ற வகையில் பிணை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகளை திருத்தம் செய்தல் காரணமாக சம்பந்தப்பட்ட பிணை 20 மில்லியன் ஐ.அ.டொ வரை குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக நிதி பிணை பொருட்டு சந்தையில் நிலவும் வட்டி விசிதாசாரத்தின் படி வட்டி வருமானம் இந்த அதிகார சபையிடம் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதேபோன்று ஒப்பந்தத்துடனான பிணைப்புகளின்படி வங்கி பிணை 03 ஆண்டு காலத்திற்குள், திருத்தம் செய்யும் சட்டத்துடனான ஆற்றல் இல்லாத படியால், மேலதிக வங்கி பிணை பெறுமதி 03 ஆண்டுகள் வரை பேணிச் செல்வதற்கும் ஒப்பந்தத்துடனான பிணைப்பு படி தேவையாகும்.

ஒப்பந்தக்காரர்களால் எஞ்சிய 1464 வீடுகள்(அலகுகள்) நிருமாணிப்பதையும் இடையில் நிறுத்தப்படுதல் மற்றும் அந்த காலப்பகுதிக்கு ஏற்புயைடதாக வங்கி பிணையின் பொருட்டு பிணை கொமிஸ் செலுத்துவதற்கு நேரிடுதல் போன்ற நிலைமைகள் உடன்படிக்கையில் உள்ள நிபந்தனைகளுக்கமைவாக ஏற்பட்டுள்ளது.

குறைந்த வருமானம் பெறுபவர்களக்கு மிக குறைந்த விலை கணக்கிற்கு வீடுகள் வழங்குதலும், இலாபத்தை அடிப்படையாகக்கொள்ளாது அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் மற்றும் கொழும்பு நகரத்தை அலங்காரப்படுத்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயற்பாடு இந்த நாட்டில் முதல் முறையாக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமாவதுடன், அதே போன்று இதற்காக அரசாங்கத்திற்கு நிதி வழங்குதல் க'டமாவதால், வெளியக முதலீட்டாளர்களை கண்டறிய வேண்டி ஏற்பட்டது. அப்போது இவ்வளவு பாரிய அளவிலான தொகையினை ஈடுபடுத்தி நிருமாணிப்புகளை பொறுப்பேற்பதற்கு மிக சிறய அளவிலான ஒப்பந்த நிறுவனங்கள் மட்டும் முன்வந்தன. அதன்போது அப்போது நிலவிய சட்டங்கள் படியும் அனுபவம் மீதும் நிதி மற்றும் நிருமாணிப்பு ஆற்றல்கள் என்பவற்றை கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திடம் ஒப்பந்தம் கையளிக்கபப்ட்டது. இதற்கு ஏற்புடையதான உடன்படிக்கைகளை தயாரிப்பதற்கு முன்னர் அப்போது அனுபவம் மற்றும் தொழில்சார் அனுபவங்களுடன்கூடிய வங்கிகள், சட்டம் மற்றும் நிருமாணிப்பு துறையில் உள்ள அலுவலர்களைக் கொண்டமைந்த குழுமூலம் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டது. இதற்காக SCAP குழு மற்றும் பின்னர் அமைச்சரவையாலும் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

(xxiv) **அவதானிப்பு**

உடன்படிக்கை சட்டங்களை மீறுதல் மற்றும் ஒப்பந்தத்தை உரிய காலப் பகுதிக்குள் நிறைவேற்றப்படாமை ஆகிய காரணங்களால் நிருமாணிப்பு ஒப்பந்தக்காரர்களான ஐஏசுஊடு கம்பெனிக்கு எதிராக சட்டத்துடனான நடவடிக்கைகளின் பொருட்டு அதிகார சபைக்கு புறம்பாக சட்ட ஆலோசகர் ஒருவர் ஊடாக சேவையை பெற்றுக்கொள்வதற்கு நேரிட்டது. அதற்கு காரணம், குறித்த விடயத்துடன் தொடர்புடைய விசேட தேர்ச்சிபெற்ற தொழில்சார் சட்ட ஆலோசனை தேவைப்பட்டமையாகும். அவ்வாறு இருக்காத பட்சத்தில் அது அதிகார சபைக்கு நன்மைபயக்காத வகையில் சட்டத்துடனான தீர்மானம் வழங்குவதற்கான வாய்ப்பு அமைந்திருக்கும்.

இவ்வாறான தொழில்சார் நடவடிக்கைகள் நீண்டகாலத்திற்கு பின்னர் நடைமுறைப்படுவதாலும் அவ்வாறான தொழில்சார் சட்ட ஆலோசகர் ஒருவர் அதிகார சபையில் இல்லாத படியாலும் அவ்வாறு வெளியக தொழில்சார் சட்ட ஆலோசகர் ஒருவரின் சேவையை பெற்றுக்கொண்டு இந்த அதிகார சபைக்கு நிகழக்கூடியதாகவிருந்த பாரிய நிதிசார் நட்டத்தை தவிர்த்துக்கொள்வதற்கு முடிந்தது.

(xxv) **அவதானிப்பு**

இது கட்டம் ஐஐ வீடமைப்பு நிருமாணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்படி ஒப்பந்தம் அளிக்கப்பட்ட நிறுவனங்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்திய நடைமுறையாகும். இதன்போது நகர அபிவிருத்தி அதிகார சபைமூலம் நடைமுறைப்படுத்தப்படும் நகர புனர்வாழ்வு கருத்திட்டத்தை துரிதப்படுத்தும் பொருட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு நிருமாணிப்புகளின் முன்னேற்றத்தின்மீது அடிப்படையாக மொத்த ஒப்பந்த பெறுமதியில் 35% ம் எஞ்சிய தொகை நிருமாணிப்புகளை முடிவுறுத்தி 06 மாதங்களுக்குள் அதகிர சபைமூலம் கொடுப்பனவு செய்யப்படும். இந்த ஒப்பந்தங்களின் பொருட்டு ஏற்புடையதாகும் விலை ஏற்றத்தாழ்வுகள்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட மாட்டாதென்பதுடன், எஞ்சிய 65% ஆன தொகை மொத்த பெறுமதியின் பொருட்டு நிருமாணிப்புகள் முடிவுறுத்திய பின்னர் செலுத்தப்படும்.

இதற்கு மேலதிகமாக அப்போது நிலவிய மத்திய வங்கி வட்டி விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட பின்னர் ஒரு வீட்டுக்கு(அலகுக்கு) ரூபா.250,0000/- என்ற உச்சவெல்லைக்கு அமைவாக நிதி வசதிகளை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானம்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த நிதிசார் செலவை மேற்கொள்வதற்கு செலவில் 65% பெறுமதிக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால் இணக்கம் தெரிவிக்கப்பட்டதுடன், ஒப்பந்தம் முடிவுறுத்திய பின்னர் வழங்கும் நிபந்தனைக்கு அமைவாக ஆகும்.

அதன்படி பொதுவான ஒப்பந்தத்துடனான பிணைப்புகளின்மீது கொடுப்பனவுகளை மேற்கொள்கின்ற போது ஒப்பந்தக்காரருக்கு நிருமாணிப்பு காலவெல்லைக்குள் பணம் கிடைக்கப்பெறாமை காரணமாகவும், நிருமாணிப்பு காலவெல்லைக்குள் நிகழ்கின்ற விலை ஏற்றத்தாழ்வுகள் தொடர்பில் ஒப்பந்தக்காரருக்கு செலவிடுவதற்கு நேரிடுகின்ற செலவிற்கு சமமான தொகையாக இந்த நிதிசார் கட்டணத்தை கணக்கிடப்பட்டு கொடுப்பனவு செய்வதற்காக அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(xxvi) **அவதானிப்பு**

ஒப்பந்தத்தை மேற்கொள்கின்றபோதும் இயற்கை இடர்களினாலும் நிகழக்கூடிய சேதங்களை குறைத்துக்கொள்வதற்கு மேலதிக வேலைகளை செய்கின்றபோது ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுள்ளது. அந்த ஏற்றத் தாழ்வுகளின் அளவு 4.02% ஆன மட்டத்தில் நிலவுதல் ஆகக்குறைந்த பெறுமதியாகும். மேலும் இந்த ஏற்றத்தாழ்வுகளில் பெரும்பாலான அளவுகள் மேலதிக வேலைகளின் பொருட்டு மேற்கொண்ட செலவுகளாகும். இந்த ஒப்பந்த னுநளபைெ யனெ டீரடைவ முறைக்கும், அந்த முறைக்கு புறம்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையால் திட்டம் (Design) தயாரித்தலும் ஒப்பந்தக்காரரால் கட்டிடங்களை நிருமாணித்தலும் போன்ற முறைக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபையால் திட்டம் (Design) தயாரிக்கப்பட்ட கருத்திட்டங்களில் கேள்விகளை அளிக்கும்போது திட்டங்களில் (Design) குறைப்பாடுகள் நிலவிய சந்தர்ப்பங்களில் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அந்த விலை ஏற்றத்தாழ்வுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள முடியுமான அதாவது (10% குறைந்த) சதவீத எல்லைக்குள் மேற்கொண்ட

செலுத்தல்களாவதுடன், அதற்கு தேவையான அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொண்டதன் பின்னர் மட்டும் அந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(xxvii) **அவதானிப்பு**

நகர அபிவிருத்தி அதிகார சபையால் முற்பணத் தொகை (Mobilization Advance) செலுத்தாமை காரணமாக அந்தக் கம்பனியால் நிருமாணிப்புகள் ஆரம்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், 2015.12.18 ஆந் திகதி முற்பணத் தொகையாக 100 மில்லியன் ரூபா தொகை செலுத்தியதன் காரணமாக வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் காணிகள் மேற்படி கருத்திட்டத்தின் நிருமாணிப்பு நடவடிக்கைகளுக்காக 2014.12.05 ஆந் திகதி ஒப்பந்தக் கம்பெனியிடம் கையளிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த ஒப்பந்தத்தில் வேலைகளை நிறுத்தப்படாதிருந்தமையால் அந்தக் காணி அவர்களின் பொறுப்பில் வைக்கப்பட்டது.

2014 நவம்பர் மாதமாகும்போதும் இந்தக் காணியில் பெரியளவிலான பகுதியில் இடைப்பட்ட முகாமொன்று இருந்ததுடன், அந்த இடைப்பட்ட முகாமிற்கு மட்டும் நீர் மற்றும் மின்சார கட்டணங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையால் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பது இடைக்கால முகாமின் குடியிருப்பாளர்களுக்காவதுடன், எக்ஸஸ் நிறுவனம் பயன்படுத்திய பகுதி, இந்தப் பகுதிக்கு உரியதற்றதாவதடன், அவர்கள் இந்த இடத்திற்கு 2014.12.05 ஆந் திகதி தொடக்கம் நிறுவனத்திடம் நிலத்ததை ஒப்படைத்த பின்னர் குடியிருப்பதற்கு வந்துள்ளார்கள்.

இந்த காணித் துண்டு தற்காலிக அடிப்பயைடில் இந்த நிறுவனத்திடம் வழங்கப்பட்டிருப்பது, நகர அபிவிருத்தி அதிகார சபையின் உள்ளக மதிப்பீட்டுக் குழுவின் விலை கணக்குகளுக்கு அமைவாக என்பதுடன், அதன்படி அது சந்தை பெறுமதிக்கு குறைந்த அளவில் வழங்குதலகாது.

(xxviii) **அவதானிப்பு**

கணக்காய்வு உசாவுதலில் காட்டப்பட்டுள்ளவாறு பாதுகாப்பு அமைச்சு மற்றும் அரசியல் தலைமைத்துவம்மூலம் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களை கவனத்தில் கொண்டு அந்த வீடுகளை (அலகுகளை) வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனைய வீடுகளை பெறுநர்களிடத்தில் போன்று பணம் அறவிடப்படும் அடிப்படையிலாகும். அவ்வாறான 200 இற்கும் அதிகமான வேண்டுகொள்கள் கிடைக்கப்பெற்ற போதிலும், கொழும்பு நகரத்தில் வேறு தோட்ட குடியிருப்புகளில் குடியிருக்கும் மற்றும் எதிர்கால புனர்வாழ்வு நடவடிக்கைகளின்போது அகற்றப்படுவதற்கு இருந்த குடும்பங்கள் மற்றும் விசேட க'ட நிலைகளை கவனத்தில் கொண்டு 22 வீடுகள் (அலகுகள்) வழங்கப்பட்டுள்ளன. பின்னர் அதற்காக முகாமைத்துவ சபையால் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அவதானிப்பு

நகர புனர்வாழ்வு கருத்திட்டம்மூலம் ஒரே காலவெல்லைக்குள் வீடமைப்பு தொகுதிகளை தொடர்ச்சியாக நிருமாணித்து முடிவுறுத்தியதன் காரணமாக மீண்டும் குடியமர்த்தும் செயற்பாடும் குறுகிய காலப் பகுதிக்குள் முடிவுறுத்தப்பட்டது. வீடுபெறுநர்களுடன் கையொப்பமிட்ட உடன்படிக்கையின் பின்னர் திருத்தம் செய்யப்பட

வேண்டுமென்று அரசாங்கத்தின் தலையீடு காரணமாக அரசு சாராத அமைப்புகளிடமிருந்து பிரேரணைகள் முன்வைக்கப்பட்டமையால், திருத்தங்களுடன் உடன்படிக்கை தயாரிப்பதற்கு கவனிக்கத்தக்க காலம் சென்றது.

2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல காரணமாக அரசியல் மேடைகளில் நகர புனர்வாழ்வு கருத்திட்டத்தின் மீள்தாபித்தல் தொடர்பாக ஏற்றபட்ட சில விமர்சனங்கள் மற்றும் உறுதியளித்தல் முன்னே உடன்படிக்கைகள் கைச்சாத்திடல், அந்த வீடுகள் பெறுநர்களால் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டது. ஆயினும் மீள்தாபித்தல் மேற்கொண்ட வீடுகள் பெறுநர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடல் நடவடிக்கைகள் தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு மற்றும் அதன் பின்னர் மீள்தாபித்தல் ஆரம்பிக்கப்பட்ட புதிய வீடமைப்பு கருத்திட்டங்களில் குடிபுகுதல் மற்றும் சாவிகள் வழங்குவதற்கு முன்னர் உடன்படிக்கை கைச்சாத்திடல் முடிவுறுத்தப்படும்.

வீடமைப்பு கருத்திட்டங்களுக்கு ஏற்புடையதாக மாதாந்த தவணைக் கட்டணம் மற்றும் நீர் கட்டணம் அறவிடுதல் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவால் தற்போதும் மேற்கொள்ளப்படுவதுடன், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அந்தந்த வீடமைப்பு தொகுதிகளுக்குச் சென்று பணம் அறவிடுகின்றார்கள் அதன்படி வீட்டு உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வீட்டுக்கூலி தற்போது அறவிடப்படுவதுடன், நிலுவை நீர் கட்டணங்களை செலுத்தாது விடும் வீட்டு உரிமையாளர்களின் வீடுகளில் நீர் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. இதன்போது அரசியல் தாக்கங்கள்மீது மற்றும் அவ்வாறான தலையீடுகளின்மீது பணம் செலுத்தவேண்டாம் என்று வீட்டு உரிமையாளர்களுக்கு தாக்கங்கள் இருந்த போதிலும் அந்த நிலைமை பெரும்பாலும் தவிர்க்கப்படுகின்றது.

(xxix) **அவதானிப்பு**

மக்கள்மயப்படுத்தியுள்ள வீடமைப்பு கருத்திட்டங்களில் எதிர்கால பேணுதல் நடவடிக்கைகள் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையிடம் ஒப்படைத்தல் தொடர்பான ஆவணங்களையும் திட்டங்களையும் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன், தற்போது ‘‘மிஹிந்துசென்புர – தெமட்டகொட’’ வீடமைப்பு தொகுதிகளில் கூட்டு ஆதன முகாமைத்துவ சபையிடம் கையேற்பதற்கு தேயைவான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் குடிசைவாழ் மக்களை அடிப்படையாகக்கொண்டு முகாமைத்துவ சபைகளை தாபித்து பேணுதல் நடவடிக்கைகளை அவர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல் நடைமுறையில் இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால், குறித்த க‘ட நிலை தொடர்பாக அமைச்சரவையை அறிவுறுத்தப்பட்டு பொருத்தமான நிருவாக முறைமையை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக மீளாய்வு செய்யப்படுகின்றது.

(xxx) **அவதானிப்பு**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைக்கு அமைவாக தாம் குடியிருந்த வீட்டுக்கு ஒரு வீடு வழங்குதல் 2013 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய போதிலும், 2014 ஆம் ஆண்டில் நிருமாணிப்புகளை முடிவுறுத்திய வீடமைப்பு கருத்திட்டங்களில் அதனை செயற்படுத்தல் நடைமுறையில் மேற்கொள்ளப்பட இயலவில்லை. அந்த கொள்கைக்கு எதிராக தெரிவு செய்யப்பட்ட தோட்ட குடியிருப்புகளில் இருந்த மக்கள் கடும் எதிர்பை தெரிவித்ததுடன், அதன்மூலம் மீள குடியமர்த்தும் பணிகள் தாமதமடைந்தது. அந்த உளப்பாங்கினை சரி

செய்வதற்காக பாரிய அளவிலான ஊடக நடவடிக்கை மேற்கொண்ட போதிலும், அதன்மூலம் எதிர் பார்க்கப்பட்ட பலன்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை. அந்த எதிர்புகளுக்கு அரசியல் பிரதிநிதிகளும் பொது மக்களுக்கு தமது ஒத்துழைப்பு வழங்கியதால், வீடுகள் வழங்குவதை நடைமுறைப்படுத்திய அலுவலர்களுக்கு நடைமுறையில் நிறைவேற்ற முடியுமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதுடன் வீடுகளை வழங்குவதற்கும் அதன்மூலம் காணிகளை விடுவித்துக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

நகர புனர்வாழ்வு கருத்திட்டம்மூலம் நிருமாணிக்கப்பட்ட வீடொன்று 400 சதுர அடியாவதால், பெரிய வீடுகளில் குடியிருந்த குடும்பங்களுக்கு அதில் குடியிருப்பதற்கும் அவர்களின் தளவாடங்களை வைத்துக்கொள்வதற்கும் 400 சதுர அடியிலான வீடு (அலகு) போதுமற்றதன் காரணமாக மேன்முறையீட்டு குழுமூலம் தீர்மானிக்கப்பட்டு மேலதிக வீடு வழங்குவதற்கு நேரிட்டது.

அதன்படி மேன்முறையீட்டு குழுமூலம் 700 சதுர அடிக்கு அதிகமான சதுர அடி உள்ள நல்ல நிலைமையிலான வீடுகளின் பொருட்டு 02 வீடுகளும், சதுர அடி 1100 இற்கும் அதகிமான நல்ல நிலைமையிலான வீடுகளின் பொருட்டு 03 வீடுகளும் வழங்க நேரிட்டது. அவ்வாறு மேலதிக வீடுகள் வழங்கப்பட்டவர்கள் குடியிருந்த வீடுகளின் சதுர அடி அளவு, மாடிகளின் எண்ணிக்கை மற்றும் வீட்டின் பௌதீக நிலைமை என்பவற்றை காட்டப்படுகின்ற புகைப்படங்களும் தரவுகளும் இந்த கருத்திட்டத்திறகு உரியதாக உள்ளபடியால், அதன் நடைமுறை நிலைமையினை புரிந்துக்கொள்ளலாம். களத்தில் உள்ள உண்மையான நிலைமைக்கு தீர்வு இல்லாது செயற்பட்டால் இந்தக் கருத்திட்டத்தின்மூலம், எந்தவித காணியையும் முற்றுமுழுதாக விடுவித்துக் கொள்ள இயலாது. அவர்கள் குடியிருக்கும் வி'ாலமான வீடொன்றுக்கு 400 சதுர அடியிலான ஒரு வீடொன்றை மட்டும் பெற்றுக்கொள்வதனை நிராகரிப்பதால் சட்ட ரீதியாக அவர்களை அகற்றுதல் மேலும் பல ஆண்டுகள் செல்வதால் உரிய காலப்பகுதிக்குள் காணிகளை விடுவித்துக் கொள்ள முடியாது.

கணக்காய்வு அறிக்கையில் வீடொன்றின் பெறுமதி 8.6 மில்லியன் ரூபா என்று காட்டப்பட்டிருப்பினும், நிருமாணிக்கப்பட்ட அவ்வாறான ஒரு வீட்டின் பெறுமதி ஏறத்தாழ 03 மில்லியன் (நிருமாணிப்பு செலவு) ஆவதுடன், அதில் 1/3 ஆன ரூபா ஒரு மில்லியன் மீண்டும் அறவிடும் அடிப்படையில் வீடு பெறுநர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்த கருத்திட்டம் மூலம் வழங்கப்பட்டுள்ள மேலதிக வீடுகளுக்காக பின்னர் முகாமைத்துவ சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

(xxxi) **அவதானிப்பு**

எமது வீடமைப்பு கருத்திட்டங்களுக்கு சமமாக வியாபார இடங்களின் பொருட்டு பொருத்தமான மாற்று இடங்களை நிருமாணிக்காதபடியால்இ அவர்களின் வியாபாரங்கள் இல்லாது போனமையால் தமது அனைத்து வருமானங்களும் இல்லாது ஏற்பட்ட தாக்கங்களை குறைத்துக்கொள்வதற்கு தமது விருப்பத்திற்கமைவாக(பின்னர் வியாபார இடமொன்றை பெற்றுக்கொள்ளும் உரித்தை இரத்துச் செய்து) வீடுகள் (அலகுகள்) வழங்கப்பட்டுள்ளன. அதன்போது அங்கு வியாபார இடங்களில் கட்டிடங்களின் அனைத்து இயல்புகளும், வீடுகளின் தன்மையினல் அமைந்த (நிரந்தர) கட்டிடங்களாவதால் அந்த காணிகளின் அளவு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு

உரியதாவதால் எந்தவித நட்டமும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஏற்படவில்லை என்பதுடன், இந்த முறைமையை பின்பற்றுவதற்கு முகாமைத்துவ சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கணக்காய்வு உசாவுதல் காலப்பகுதிக்குள் அத்துமீறல் குடும்பங்கள் விடுவித்துக்கொண்ட காணிகளில் தங்கியிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமாகும்போது அவர்கள் அனைவரையும் அகற்றுவதற்கு இந்தக் கருத்திட்டம் நடவடிக்கை மேற்கொண்டது.

(xxxii) **அவதானிப்பு**

"லக்சந்த செவண" வீடமைப்பு கருத்திட்டத்தில் ஒரு வீட்டை நிருமாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை அண்ணளவாக 3 மில்லியன் ரூபாவாகும். எவ்வாறாயினும் கொழும்பு நகரத்தில் குப்பைகளை அகற்றப்படும் மீதொட்டமுல்ல குப்பை மேட்டில் ஏற்பட்ட சரிவு காரணமாக 2014 ஆம் ஆண்டில் 158 குடும்பங்கள் இடம்பெயர்ந்தார்கள். அதன்படி அந்த இடம் பெயர்ந்த குடும்பங்களுக்காக ஒரு வீடு (அலகு) 1.5 மில்லயின் ரூபா தொகைக்கு கொழும்பு நகர சபையிடம் வழங்குவதற்கு அப்போது எமது அதிகார சபைக்கு பொறுப்பாக இருந்த அரச பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கமைவாக தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைவாக, அந்த 158 வீடமைப்பு (அலகுகள்) கொழும்பு நகர சபையிடம் வழங்கப்பட்டது. இந்த கொடுக்கல் வாங்கல் நிதிசார் நட்டம் ஏற்படினும், இந்த குப்பை மேடு அமைந்திருந்த காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய காணி ஆவதுடன், அந்த சந்தர்ப்பத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்காக வீடுகளை வழங்குதல் தேசிய தேவையாக இருந்த படியால் (அவர்கள் கொழும்பு நகர சபையில் மற்றும் அண்மித்த நகரங்களில் குப்பைகளை அகற்றுவதற்காக மீதொட்டமுல்ல குப்பை மேடையை பயன்படுத்தவிடாது தடை செய்தபடியால் குப்பை இடுவதற்கு வேறு இடம் இருக்கவில்லை). அந்த தொகைக்கு வீடு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், கொழும்பு நகர சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத் தொகையை அறவிடுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(xxxiii) **அவதானிப்பு**

மேற்படி வீடமைப்பு கருத்திட்டம் நடைமுறைப்படுத்தும்போது கட்டியெழுப்பப்படும் வீடொன்றில் தரம் மற்றும் ஒரு அலகின் விலை என்பன முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி பின்வரும் ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்யப்பட்டது

1. உள்நாட்டு ஊ, தொகுதியில் ICTAD பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள்
2. நிருமாணிப்பு துறையில் விசேடமான அனுபவங்கள் உள்ள வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்கள்

